சமர்ப்பணம்



கணபதி அக்ராஹார தம்பதிகள்

கணபதி சுப்பிரமணிய அய்யர்

ராஜலக்ஷ்மி அம்மாள்

கணபதி சம்பந்தப்பட்ட இந்நூல் எழுத ஊக்குவித்த இவர்கள் கணபதி அக்ரஹாரம் என்ற தஞ்சை மாவட்ட கிராமத்தைச் சேர்ந்தவர்கள். என் மனைவி வழி பாட்டி பாட்டனார். இவர்கள் ஆசீர்வாத பலமே ஆன்மிக புஸ்தகங்கள் எழுதுவதற்கும் ஒரு காரணம். காலஞ்சென்ற கணபதி சுப்பிரமணிய அய்யர் சென்னை மாநிலக் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். மாதுஸ்ரீ ராஜலக்ஷ்மி அம்மாள் பிரபலமான மேதை ஜி. ஏ. வைத்தியராமய்யரின் குமாரி. ராமாயணத்தைப் பற்றி அருமையான புஸ்தகங்களை எழுதி வெளியிட்டிருப்பவர்.

கணபதி சம்மந்தப்பட்ட இந்நூலை இவர்களுக்கு உள்ளன்புடன் சமர்ப்பிக்கிறேன்.

எஸ். நடராஜன் (நஜன்)

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் மடம், காஞ்சீபுரம்

முகாம்:
சேலம், 7.



தேதி:
5—9—77

ஸ்ரீமுகம்

எந்த ஒரு காரியம் செய்யத் தொடங்குவதற்கு முன்பு இடையூறின்றி அந்தக் காரியம் நிறைவேறுவதற்கு விநாயகர் வழிபாடு இன்றியமையாதது.

ஓம்கார வடிவிலுள்ளவர் விநாயகர். அறிவுக் களஞ்சியமான மஹாபாரதத்தை தனக்கு அழகை அளிக்கக் கூடிய தந்தத்தை எடுத்து எழுதிய பெருமான் அவர். தன்னை வழிபட்ட ஔவையாருக்கு தன் துதிக்கையாலேயே கைலாயததிற்கு அழைத்துச் சென்றவர் விநாயகர்.

ஸ்ரீ ரஜன் அவர்கள் பல நூல்களை எழுதியிருக்கிறார்கள். இப்போது 'வினை தீர்க்கும் விநாயகர்' என்ற பெயரில் விநாயகப் பெருமானுடைய பெருமைகளைச் சொல்லக் கூடிய ஒரு புஸ்தகத்தை எழுதியிருப்பதைக் கேட்டு சந்தோஷிக்கிறோம்.

எல்லா ஆஸ்திக அன்பர்களும் நல்ல நூல்களை படிக்க வேண்டும் ஸ்ரீ ரஜன் அவர்களும் இது போன்ற நல்ல நூல்களை மேலும் எழுத வேண்டும் என்றும் ஆசீர்வதிக்கின்றோம்.

—நாராயண ஸ்மிருதி

ஸ்ரீமத் சத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள்

3-2



ஸ்ரீ
ஸ்கந்தாஸ்ரமம்

சேலம்-14,
13—8—1977

ஸ்ரீமுகம்

இறைவனைப் பற்றிய ஞானத்தை மக்கள் அனைவரும் பெறுவதற்கு வேண்டிய நல்ல நூல்களை எழுதுவதையே தமது விரதமாகக் கொண்டவர் நமது நஜன். பிறவிப் பிணிக்கு ஒப்பற்ற மருந்தாக இருக்கும் ''வினை தீர்க்கும் விநாயகர்'' (21-வது புஸ்தகம்) பற்றிய நூலை நஜன் வெளியிடுவதை அறிந்து ஸ்ரீமத் சத்குரு சுவாமிகள் சந்தோஷிக்கிறார்கள்.

'நஜன்' வெளித்தோற்றத்திற்கு மிகவும் எளிதாகயிருப்பினும் அவர் ஆதிபரா சக்தியான அன்னையை சிக்கெனப் பற்றிக் கொண்டு இந்த தெய்வீக நூல்களை எழுவதை தன் கடமையாகக் கொண்டு அமைதியான முறையில் பணி செய்து வருகிறார். இவர் இத்தொண்டினை இடைவிடாது மேலும் மேலும் ஊக்கமாகவும் உறுதியாகவும் செய்து கொண்டு வரவும் ஜகந்மாதா புவனேஸ்வரியின் அன்னையின் அனுக்கிரஹம் என்றும் இருக்கும் என்றும் ஸ்ரீ சத்குரு ஸ்ரீமத் சாந்தானந்த சுவாமிகள் ஆசீர்வதிக்கிறார்கள்.

ஸ்ரீ சத்குரு சுவாமிகள் ஆக்ஞைப்படி
தேவராஜ சர்மா

பதிப்பாசிரியர் நன்றி

எங்கள் ஷஷ்டி அப்த பூர்த்தி முடிந்ததும் வெளியிடும் முதல் புத்தகம் ''விக்ன தீர்க்கும் விநாயகர்''. பிரதிபா வரிசையில் 21-வது புத்தகம். மகா கணபதியின் பிரியமான அந்த எண்ணிக்கையில் இப்புஸ்தகம் இடம் பெற்றது அந்த விக்ன விநாயகன் அருளே.

இதில் பல அரூமையான ஸ்தோத்திரங்கள் சேர்க்கப் பட்டுள்ளன. வாஞ்சா கல்பலதா கல்பம், ஸ்ரீ வித்யை உபாசகர்களுக்கு கணபதியை வழிபட கிடைத்தற்கரிய பொக்கிஷம். ஆச்சாள்புரம் ஸ்ரீ கோவிந்தராஜ பிள்ளையவர்கள் உதவியால் அது சேர்க்கப்பட்டுள்ளது. அவருக்கும், இந்த அருமையான விஷயங்களை பிரதி எடுத்து அனுப்பிய அவருடைய உதவியாளர் ஸ்ரீ தியாகேசச் சிவாச்சாரியாருக்கும் எங்கள் நன்றி.

சதுராவ்ருத்தி தர்ப்பணம் என்பது மற்றொரு அரிய பொக்கிஷம். ஸ்ரீ சிதானந்தநாதர் மண்டலி வெளியிட்ட மலரிலிருந்து இது சேர்க்கப்பட்டுள்ளது. அதன் ஸ்தாபகர் ஸ்ரீ வி. ராமமூர்த்தி அய்யர் (ஸ்ரீ பத்மானந்தநாதர்). அவர்களுக்கு எங்கள் நன்றி.

எனது தந்தையின் சிறிய தகப்பனர் கணபதி அக்ரஹாரம் ஸ்ரீ கணபதி சுப்பிரமணிய அய்யரும், அவர் மனைவி (ஸ்ரீ ஜி. ஏ. வைத்யராமனின் குமாரி) மாது ஸ்ரீ ராஜலக்ஷ்மி அம்மாள் அவர்களும் எங்களை ஊக்குவித்தவர்கள். நம் குழந்தைகள் அருமையான வழியில் பணிபுரிவதைக் கண்டு ஆனந்தப் படுபவர்கள். பெரியவர் காலமாகிவிட்டார். மாது ஸ்ரீ அவர்கள் டில்லியில் இருந்துக்கொண்டு எங்களை ஊக்குவித்து வருகிறார்கள். தெய்வீகப் பணியில் இத்தம்பதிகள் ஒருமனத்துடன் ஈடு பட்டவர்கள். அவர்களுக்கு இந்நூலை காணிக்கையாக்கியிருக் கிறோம்.

இந்நூல் கணபதி அக்ரஹாரம் கணபதி சந்நிதியில் வெளி யிடப்படுகிறது எங்கள் பாக்கியம். இதற்கு உதவிய ஸ்ரீலக்ஷ்மணன், ஸ்ரீ கண்ணன், இவர்களுக்கு எங்கள் நன்றி.


இப்புத்தகத்துக்கு விளம்பரங்கள் தந்து உதவியவர்களுக்கும், ஓவியர் சித்திரலேகாவுக்கும், அட்டைப்படத்தை மிக அழகுற அச்சடித்துதவிய மணிகண்டன் அச்சகத்தாருக்கும், பூங்குழலி அச்சக அதிபர் ஸ்ரீ முத்துக்கிருஷ்ணனுக்கும் எங்கள் நன்றி.

சென்னை
1—9—77

என். லலிதாம்பாள்
(பதிப்பாசிரியர்)

முகவுரை

திரு. கே. வெங்கட்ராமன், (ஆசிரியர், 'மோட்டார்' சென்னை)



எல்லோரும் மிக எளிதில் வழிபடும் தெய்வம் விநாயகர். உள்ளன்புடன் பூஜிப்பவர்களை உன்னதமான நிலைக்கு உயர்த்துபவர். எல்லா இடங்களிலும் அமர்ந்து அருள் பாலிக்கும் இவரை அறியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. இவ்வளவு பிரபலமான கடவுளைப் பற்றி தெரியாத அநேக விஷயங்கள் இருக்கின்றன.

இவருக்கு ஏன், நெற்றியில் குட்டிக்கொள்ள வேண்டும்? தோப்புக்கரணம் எதற்கு போட வேண்டும்? சிதர் தேங்காய் உடைப்பானேன்? இவருக்கு ஏன் யானை முகம்? இவர் பிரும்மசாரியா, கிரகஸ்தரா? இதெல்லாம் சாதாரணமாக யாருக்கும் தெரியாது. குண்டலினி என்ற யோகத்தில் இவர்தான் முக்கியமானவர். இதுபற்றி எல்லாம் பல அருமையான நூல்களிலிருந்து தகவல்கள் சேகரித்து நஜன் (எஸ். நடராஜன்) இப்புத்தகத்தை உருவாக்கியிருக்கிறார்.

அரசாங்க வேலையிலிருந்து ஓய்வு பெற்றதிலிருந்து 'நஜன்' இம்மாதிரி நமது மதத்தின் அருமை பெருமைகளை விளக்கும் பல புத்தகங்களை எழுதி வெளியிட்டிருக்கிறார். காமகோடி பெரியவர்கள், தருமையாதீனம், திருப்பனந்தாள் ஆதீனம் முதலியவைகளின் பெரியவர்கள் இவருடைய முயற்சியை ஊக்குவித்து வருகிறார்கள்.

நஜனை எனக்கு சென்ற 25 ஆண்டுகளாகவே தெரியும். ஆடம்பரம் எதுவுமில்லாமல் அமைதியான முறையில் பணியாற்றுபவர். அவர் மேற்கொண்டிருப்பது மிக அருமையான தொண்டு. இவருடைய அறுபதாவது ஆண்டு பூர்த்திக்குப்பின் இவர் எழுதும் முதல் புத்தகம் கணபதி பற்றியது என்பதும் பொருத்தமாகவே இருக்கிறது.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் விநாயகர். நான் இதை அனுபவத்தில் கண்டிருக்கிறேன். மேற்கு சி. ஐ. டி. நகரில் அவருக்காக ஒரு ஆலயம் என்னைக் கருவியாகக் கொண்டு ஏற்படச் செய்தது அவர் அருளே, அந்த சித்தி கமல விநாயகர் அவருக்கு எல்லாவித நலன்களையும் அருளப் பிரார்த்திக்கிறேன்.

1—9—1977 —கே. வெங்கட்ராமன்.

ஆசிரியரின் முகவுரை

''ஞானம் நிறைந்தவர்களுடைய மௌனமே மௌனம்
சக்தி நிறைந்தவர்களுடைய பொறுமையே பொறுமை
—காளிதாஸன்

இந்த ஞானமும் பொறுமையும் பெறுவதே வாழ்க்கையின் லட்சியமாக இருக்க வேண்டும். ஒரு பிராணியையும் ஹிம்ஸை செய்யாமல் நாணலையும் தழைகளையுமே உட்கொண்டு உலகிலுள்ள எல்லா பிராணிகளைவிட அதிக பலம் பெற்று விளங்குவது யானை. பொறுமை இருந்தால் போதும். எல்லா இடையூறுகளும் நீங்கிவிடும். அப்பொறுமையே விநாயகர் உருவம். விக்னராஜரே கணபதி.

பிரதிபா பிரசுரம் முதல் நூலே விநாயகரைப் பற்றிதான் இருக்க வேண்டும். ஆனால் குருநாதர் சிதானந்தரின் 16-வது குருபூஜையின்போது இலவசமாக வழங்கிய ''அன்னை பராசக்தி'' யின் முதல் பக்கத்தில் ''சித்த லக்ஷ்மி சமேத மகா கணபதியே நம:'' என்று போட்டு விட்டே ஆரம்பித்தோம். (அந்த சித்த லக்ஷ்மி பற்றிய அருமையான பூஜா விஷயம் இதில் இடம் பெற்றுள்ளது.)

எனது ஷஷ்டி அப்த பூர்த்திக்குப்பின் புது அத்யாயம் என் வாழ்க்கையில் தொடங்கும் இச்சமயத்தில் வெளிவரும் முதல் புத்தகம் கணபதியைப் பற்றியது தான்.

55 வயதில் ஓய்வு பெற வேண்டும் என்கிற அரசாங்கத்தின் விதி காலத்திற்கு ஒவ்வாதது. மேல் நாட்டில் அப்படியில்லை. ஓய்வு பெற்றுவிட்டு என்ன செய்வது என்று தயங்கியபோது எனது அருமை நண்பர் ஸ்ரீ வேங்கட்ராமன் எனக்கு அவருடைய 'மோட்டாரில்' துணையாசிரியர் பொறுப்பு அளித்து அன்றாட ஜீவனப் பிரச்னையை தீர்த்தார். எல்லா அதிபர்களையும்போல் அல்ல அவர். தர்மம், நியாயம், ஈஸ்வர பக்தி இவைகளுக்குக் கட்டுப்பட்டவர். மேற்த சி. ஐ டி. நகரில் சித்தி கமல விநாயகருக்கென்று ஒரு கோவில் கட்டியவர். அவர் இந்நூலுக்கு முகவுரை எழுத நேர்ந்தது என் பெரும் பாக்கியம்.

ஸ்ரீ வித்யா உபாசகர்களுக்கு மகா கணபதி மந்திர தீக்ஷையே முதல்படி. ஆகவே அவர்களுக்கு தெரிந்திருக்க வேண்டிய விவரங்கள் இப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

எல்லோருக்கும் பயன்பட விநாயகர் பூஜையும் சேர்க்கப் பட்டுள்ளது.

லலிதாலயா
மயிலாப்பூர்
16—9—77

இப்படிக்கு
எஸ். நடராஜன்
(நஜன்)



கணபதியின் மூலமந்திரங்கள்

---

1. பால கணபதி:— ஓம் ப்லூம் க்லாம் ச்ரீம் பால கணபதயே நம ஸ்வாஹா (சந்தோஷம்)

2. த்விஜ கணபதி:— ஓம் கம் கணபதயே நமஸ் ஸித்திதாய ஸ்வாஹா (கீர்த்தி)

3. தருண கணபதி:— ஓம் ஐம் ஹ்ரீம் ச்ரீம் கம் நமோ பகவதே நித்ய யௌவநாய யுவதி ஜந ஸமாச் லிஷ்டாய கணபதயே நம: ஸ்வாஹா (ஆரோக்யம்)

4. விக்ன கணபதி:— ஓம் கீம் கூம் கணபதயே நம ஸ்வாஹா (குறை இல்லாமை)

5. ஸித்தி கணபதி:— ஓம் நமஸ் ஸித்தி விநாயகாய ஸர்வ கார்ய கர்த்ரே ஸர்வ விக்ன ப்ரசமநாய ஸர்வ ராஜ்ய வசய கரணாய ஸர்வ ஜன ஸர்வ ஸ்த்ரீ ஸர்வ புருஷ வச்யாகர்ஷணாய ச்ரீம் ஓம் ஸ்வாஹா (ஸர்வ கார்ய ஜபம்)

6. புத்தி கணபதி:— ஓம் ஐம் வாக் கணபதயே ஸ்வாஹா (வித்யா ப்ரதம்)

7. மஹா கணபதி:— ஓம் ஹ்ரீம் ச்ரீம் க்லீம் க்லௌம் கம் கணபதயே வர வரத ஸர்வ ஜனம் மே வசமானய ஸ்வாஹா (பரிபூர்ண சித்தி)

8. லக்ஷ்மி கணபதி:— ஓம் ச்ரீம் கம் ஸௌம்யாய கணபதயே வர வரத ஸர்வஜனம் மே வசமானய ஸ்வாஹா (தனாபிவிருத்தி)

9. சந்தான கணபதி:— ஓம் நமோ லக்ஷ்மி கணேசாய மஹ்யம் புத்ரம் ப்ரயச்ச ஸ்வாஹா (புத்ரப்ரதம்)

10. திரிதாரி சந்தான கணபதி:— ஓம் ச்ரீம் ஹ்ரீம் க்லீம் ஓம் நமோ லக்ஷ்மீ கணேசாய மஹ்யம் புத்ரம் ப்ரயச்ச ஸ்வாஹா (பகுபுத்ரப் பிரதம்)

11. துர்க்கா கணபதி:— ஓம் ஹ்ரீம் கம் ஹ்ரீம் தும் துர்க்கா புத்ராய சக்தி ஹஸ்தாய மாத்ரு வத்ஸலாய மஹா கணபதயே நம: (துக்க நிவாரணம்)

12. வல்லபா கணபதி — ஓம் ச்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம் கம் ச்ரீம் நமோ பகவதி மகாலக்ஷ்மி வரவரதே ஸ்ரீம் விபூதயே ஸ்வாஹா (சர்வமங்களப் பிரதம்)

13. சக்தி கணபதி:— ஓம் ஹ்ரீம் கம் ஹ்ரீம் மகா கணபதயே ஸ்வாஹா (சர்வ காரியப் பிரதம்)

14. சர்வ சக்தி கணபதி:— ஓம் ஆம் க்லீம் ஸர்வ சக்தி கணேச மாம் ரக்ஷ ரக்ஷ மம ஸாந்நித்யம் குரு குரு அஷ்டைஸ்வர்யாதி பூதிஸம் ருத்திம் குரு குரு ஸர்வ துக்கம் நாசய நாசய ஸர்வஜநம் மே வசமாநய மேஹனோத்தம விநாயகாய ஹூம் பட் ஸ்வாஹா (ஸர்வ ரக்ஷாவ்ரதம்)

15. விரிவிரி கணபதி:— ஓம் ஹ்ரீம் ஸம் விரி விரி கணபதி ஸர்வஜனம் மே வசமாநய ஸ்வாஹா (விசாலபுத்தி)

16. க்ஷிப்ர கணபதி:— ஓம் கம் க்ஷிப்ர பிரசாதாய நமஃ (துரித பலன்)

17. ஹேரம்ப கணபதி:— ஓம் கூம் நமஃ (மனச் சாந்தி)

18. வக்ரதுண்ட கணபதி:— ஓம் ராயஸ் போஷஸ்ய ததி தாநிதோ ரத்ன தாது மான் ரக்ஷோஹணோ பலஹனோ வக்ர துண்டாய ஹூம். (அதிர்ஷ்டலாபம்)

19. நிதி கணபதி:— ஓம் வக்ர துண்டாய ஹூம் (நிதிப் ராப்தம்)

20. நவநீத கணபதி:— ஓம் ஹ்ரீம் ச்ரீம் ஓம் க்லௌம் நவநீத கணபதயே நமஃ (மனோவச்யம்)

21. உச்சிஷ்ட கணபதி:— ஓம் ஹஸ்தி முகாய லம் போதராய உச்சிஷ்டாய மஹாத்மனே ஆம் க்ரோம் ஹ்ரீம் ச்ரீம் க்லௌம் க்லீம் கம் கே கே உச்சிஷ்டாய ஸ்வாஹா (த்ரிகால தர்சனம்)

22. உச்சிஷ்ட நவார்ணவ மந்திரம்:— ஹஸ்திபி சகிலிகே ஸ்வாஹா (தீர்க்க தரிசனம்)

23. ஹரித்ரா கணபதி:— ஓம் ஹூம் கம் க்லௌம் ஹரித்ரா கணபதயே வர வரத ஸர்வஜனம் ஹ்ருதயம் ஸ்தம்பய ஸ்தம்பய ஸ்வாஹா (ஜகத்வச்யம்)

24. மோதக கணபதி:— ஓம் மம் மஹா கணபதயே ஏகதந்தாய ஹேரம்பாய மோதக ஹஸ்தாய நாளிகேர ப்ரியாய ஸர்வாபீஷ்டப் பிரதாயினே ச்ரீம் ஹ்லீம் க்லீம் ஸர்வ ஜனம் மே வசமானய ஸ்வாஹா (சர்வாபீஷ்ட ப்ரதம் சம்பூர்ண பலன்)

25. மேதா கணபதி:— மேதோல் காய ஸ்வாஹா (மேதாபி விருத்தி)

26. மோகன கணபதி:—ஓம் ஆம் க்லீம் சர்வ சக்தி கணேச மாம்ரக்ஷ ரக்ஷ மம ஸாந்நித்யம் குருகுரு ஸர்வதுக்கம் நாசய நாசய ஸர்வ ஜநம் மே வசமாநயா நய மோஹனோத்தம விநாயகாய ஹூம் பட் ஸ்வாஹா (ரக்ஷாப்ரதம்)

27. த்ரைலோக்ய மோகன கணபதி:— ஓம் வக்ரதுண்டாயைக தம்ஷ்ட்ராய க்லீம் ஹ்ரீம் ச்ரீம் கம் கணபதயே வரவரத ஸர்வ ஜனம் மே வசமாநய ஸ்வாஹா (சர்வரக்ஷா ப்ரதம்)

28. வீரகணபதி:— ஓம் ஹ்ரீம் க்லீம் வீரவர கணபதயே வஹவஹ இதம் விச்வம் மம வசமாநய ஓம் ஹ்ரீம் பட் ஸ்வாஹா (தைர்யப்ரதம்)

29. ஏகாக்ஷர கணபதி:— ஓம் கணபதயே நமஃ (கணபதி அருள் கிடைக்க)

0. த்ரயக்ஷர கணபதி:— ஹ்ரீம் க்ரீம் ஹ்ரீம் (த்ருட ப்ரதம்)

31. ஷடக்ஷர கணபதி:— ஓம் மேதோல்காய ஸ்வாஹா (புகழ் உண்டாக)

32. ஸங்கஷ்ட ஹர கணபதி:— ஓம் நமோ ஹேரம்ப மத மோஹித மம ஸர்வ ஸங்கஷ்டம் நிவாரயஹூம்பட் ஸ்வாஹா (சங்கடங்கள் நிவர்த்தியாக)

33. ருணஹரண கணபதி:— ஓம் கணேசாய ருணம் சிந்தி வரேண்யம் ஹூம் நம: பட். (கடன் நிவர்த்தியாக)

34. ருணநாசன கணபதி:— ஓம் க்லௌம் க: கோம் கணேசாய ருணம் சிந்தி வரேண்யம் ஹூம் நம: பட் ஸ்வாஹா (எல்லா கடன்களும் நிவர்த்தியாக)

35. குரு கணபதி:— ஓம் கம் கணபதயே ஸர்வ விக்னஹராய ஸர்வாய ஸர்வகுரவே லம்போதராய ஹ்ரீம் கம் நம: (குருபக்தி உண்டாக)

36. சிந்தாமணி கணபதி:— ஓம் க்ஷ்ரூம் க்ஷிப்ர கணபதயே ஸ்வர்ண கே கே வ்யவஸ்திதாய ஸ்வர்ணப் பிரதாய க்லீம் வஷட் ஸ்வாஹா (சத்ரு இல்லாமல் இருக்க)

37. அர்க்க கணபதி:—ஓம் நமோ கணபதயே அர்க்க கணபதே வரவரத ஸர்வஜனம் மே வசமானய ஸ்வாஹா (சூர்யக்கிரஹ நவக்ரஹ சாந்தி)

38. ச்வேதார்க்க கணபதி:— ஓம் காம் கீம் கூம் கைம் கௌம் கம் கணபதயே ஹூம் பட் ஸ்வாஹா (தேவவசியம்)

39. முக்தி கணபதி:— ஓம் ஹூம் க்லௌம் டம் ராஜஸர்ஜன ஹ்ருதய சதி பதி முக க்ரோத ஜிஹ்வா ஸ்தம்பய ஸ்தம்பய ஸ்வாஹா (ரோக நிவர்த்தி)

40. புஷ்டி கணபதி:— ஓம் கேம், கைம் கணபதயே விக்ன விநாசினே ஸ்வாஹா (தான்ய விருத்தி)

41. ஸௌபாக்ய வாமன கணபதி:— ஓம் வம் யம் ஸௌ: மம ஸர்வ ஸௌபாக்யம் குரு குரு ஸ்வாஹா (ஸர்வ மங்களும் உண்டாக)

42. சிவாவதார கணபதி:— ஓம் ச்ரீம் த்ரீம் க்லீம் க்லௌம் கம் ஓம் நமோ கணபதயே ஓம் சிம் வரவரத ஓம் வாம் ஸர்வஜனம் மே ஓம் யம் வசமாநயே ஸ்வாஹா (ஈஸ்வரானுக்ரகம் உண்டாக)

43. யோக கணபதி:— ஓம் ஹம் ஸம் கம் பகவதே நித்ய போக யுக்தாய ஸச்சிதானந்த ரூபிணே விநாயகாய நம: (யோகசித்தி)

44. நர்த்தன கணபதி:— ஓம் க்லௌம் ஜம் ஜம் ஜம் நர்த்தனப் பிரியாய சிதம்பரானந்த தாண்டவாயாக ஜாநநாய நம: (கலாபி விருத்தி)

45. வித்யா கணபதி:— ஓம் ச்ரீம் ஹ்ரிம் க்லீம் க்லௌம் கஏஈல ஹ்ரீம், கணபதயே க்லீம் ஹஸகஹல ஹ்ரீம் ஸௌ: ஸஹல ஹ்ரீம் ஸாவஜனம் மே வசமாநய ஸ்வாஹா (தேவ்யானுக்கிரகம்)

46. விஜய கணபதி:— ஓம் க்லௌம் ச்ரீம் ஸர்வ விக்ந ஹந்த்ரே பக்தாநுக்ரஹ கர்த்ரே விஜய கணபதயே ஸ்வாஹா (ஜயம் ஏற்பட)

47. தூர்வா கணபதி:— ஓம் ஹ்ரீம் க்லாம் ச்ரீம் தும் துரித ஹராய தூர்வா கணேசாய ஹூம் பட் ஸ்வாஹா (தாபநிவர்த்தி)

48. அபீஷ்டவரத கணபதி:— ஓம் ச்ரீம் ச்ரீம் கணபதயே ஏக தந்தாய லம்போதராய ஹேரம்பாய, நாளிகேரப பிரியாய யோகஹ ரக்ஷகாய மமாபீஷ்ட பலம் தேஹி ப்ரதிகூலம் மே நச்யது அநுகூலம் மே வசமாநய ஸ்வாஹா (நினைத்ததை அடைய)

49. ரக்த கணபதி:— ஓம் ஹஸ்தி முகாய, லம்போதராய ரக்த மஹாத்மனே ஆம் க்ரோம் ஹ்ரீம் ஹூம் ஹூம் கே கே ரக்த கணே பராய தயாபராய ஸ்வாஹா (வச்ய சித்தி)

50. குமார கணபதி:— ஓம் நமோ பகவதே சூர பத்ம நாச காரணாய ஸர்வ சக்தி தராய ஸர்வ பஞ்ஞோப விதநாய மஹா ப்ரசண்ட க்ரோதாயா ப்ரஹத் குக்ஷி தராய அஸுர கோடி ஸம்ஹார காரணாய அகண்ட மண்டல தேவாத்யர்ச்சித பாத பத் மாயா சாகிநீ, ராகினீ, லாகினீ, ஹாகினீ, டாகினீ, ஸாகினீ, கூஷ்மாண்ட, பூத, வேளாள, பைசாச பிரும்மராக்ஷஸ துஷ்ட கிரஹான் நாசய நாசய பாரத லிகிதலே கினீகராய அபஸ்மார க்ரஹம் நிவாரய நிவாரய மர்த்தய மர்த்தய குஹா க்ரஜாய கஜவதநாய கஜாஸுர ஸம்ஹாரணாய சர்ஜித பூத் காராய ஸகல பூதப்ரேத பிசாசா ப்ரும்மராக்ஷஸான் சூலே நாக்ருந்தயா க்ருந்தய சேதய சேதய மாராய ஹூம் பட் பந்த பந்தடம் க்லாம் க்லௌம் கம் கணபதயே நமஃ ஸ்வாஹா (க்ஷுத்ர நிவாரணம்)

51. ராஜ கணபதி:— ஓம் நமோ ராஜ கணபதே மகா வீர தசபுஜ மதந கால விநாசனம் ருத்யும் ஹந ஹந காலம் ஸம்ஹர ஸம்ஹர தமதம மத மத மத த்ரைலோக்யம் மோஹய மோஹய அசிந்த்ய பல பராக்கிரம ஸர்வ வியாதீன் விநாசய விநாசய ஸர்வ வக்ர ஹான் சூர்ணய சூர்ணய நாகான் மோடய மோடய திரிபுவனேச்வர ஸர்வதோமுக ஹூம் பட் ஸ்வாஹா (ராஜபோகம்.)

52. ப்ரயோக கணபதி:— அம் த்ரீம் க்ரௌம் சம் ஓம் நமோ பகவதே மகா கணபதயே ஸ்மரண மாத்ர ஸந்துஷ்டாய ஸர்வ வித்யா ப்ரகாசகாய ஸர்வ காம ப்ரதாய பவபந்த விமோசனாய ஹ்ரீம் ஸர்வ பூத பந்தனாய க்ரோம் ஸாத்யாகர்ஷணாய க்லீம் ஜகத்ரய வசீகரணாய ஸௌஃ ஸர்வ மந சேஷபணாய ச்ரீம் மஹாஸம் பத் ப்ரதாய க்லௌம் பூ மண்டலாதித்யப் பிரதாய மஹாயஞ் ஞாத்மனே கௌரீ நந்தனாய மஹாயோகிநே சிவப்பிரியாய ஸர்வானந்த வாதநாய ஸர்வ வித்யா ப்ரகாசக ப்ரதாயத் ராம் சிரஞ்சீவிநே ப்லூம் ஸம்மோகனாய ஓம் மோக்ஷப்ரதாய பட்வசீ குருவசீ குரு வௌஷடாகர்ஷணாய ஹூம் வித்வேஷணாய வித்வேஷய பட் உச்சாட யோச்சாடய ட டை ட ஹ ஸ்தம்பய ஸ்தம்பய சேம் சேம் மாரய மாரய, சோஷய சோஷய பரமந்த்ரயந்த்ர தந்த்ராணி சேதய சேதய துஷ்ட கிரஹான் நிவாரய நிவாரய தும் கம் ஹரஹர வ்யாதிம் நாசய நாசய ஸம்பன்னய ஸம்பன்னய ஸ்வாஹா ஸர்வ பல்லவ ஸ்வரூபாய மஹா வித்யாய கம் கணபதியே ஸ்வாஹா (அஷ்டகர்ம சித்தி)

சக்தி வாய்ந்த
சித்தி கமல விநாயகர்



'அன்னை பராசக்தி'யின் முதல் பதிப்பை 'மோட்டார்' ஆசிரியர் ஸ்ரீ வெங்கடராமன் அவர்களிடம் கொடுக்கச் சென்ற போது அவர் வீட்டிற்கருகில் அவர் முனைந்து கட்டிய விநாயகனை தரிசித்து ஒரு பிரதியை அவர் காலடியில் வைத்து தீபாராதனைக் காட்டச் சொன்னேன். மேலும் பல நல்ல புஸ்தகங்களைப் போட அனுக்கிரஹிக்கும்படி பிரார்த்தித்து அப்பிரதியை குருக்களிட

மிருந்து திரும்பிப் பெறும் போது மூலையில் தொங்கிய மணி என் முதுகில் பட்டு 'கண கண'வென்று ஒலித்தது. சித்திகமல விநாயகர் அருளால் இதுவரை 21 புஸ்தகங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அவர் அனுக்கிரகம் செய்ததை நினைத்து இங்கு அவர் படம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

1972-க்கு முன் ஒரே காடாக இருந்த இடத்தில் தனக்கு ஆலயம் அமைய அவரே திருவுளம் கொண்டிருக்க வேண்டும். ஸ்ரீ. ஸ்ரீனிவாச முதலியார் என்பவர் ஒன்றரை கிரவுண்டு நிலத்தை இந்த ஆலயம் ஏற்பட அளித்தார். அங்கு ஒரு அரசமரம் இருந்தது பின்னர்தான் தெரியவந்தது.

1972-ல் காஞ்சி காமகோடிப் பெரியவர்களிடம் ஆசி பெற்று ஆலயம் கட்டுவது ஆரம்பமாகியது. ஸ்ரீ ராஜு கண்டிராக்டர் இக்கோவில் உருவாவதற்கு மிகவும் உதவினார். திருவேற்காடு ஆலய கோபுரத்தைக் கட்டுவித்த ஸ்தபதி அவர்களே இந்த ஆலயத்தையும் கட்டினார்.

1972 செப்டம்பர் 14-ம் தேதி (ஆவணி 29-ம் தேதி) யன்று மிக விமரிசையாக கும்பாபிஷேகம் நடந்தேறியது.

பக்தர்களின் தேவைகளைக் கவனித்து அருள்பாலித்து வருகிறார் இப்பிள்ளையார். எங்கள் சங்கல்பமான 43 புத்தகங்களையும் வெளியிட்டு பூர்த்தி செய்ய இந்த சித்தி கமல விநாயகர் அருள்பாலிக்கட்டும்.

—பிரதிபா பிரசுரம்



ஸ்ரீ மஹா கணபதி த்ரைலோக்ய மோகன கவசம்

ப்ரஹ்ம பீஜம் சிர : பாது கேவலம் முக்தி தாயகம் ।
ஸ்ரீ பீஜமக்ஷிணி பாது ஸர்வஸித்தி ஸமர்ப்பகம் ॥ 1

ஹ்ருல்லேகா ச்ரோத்ரயோ : பாது ஸர்வ சத்ரு
விஞசினீ
காம பீஜம் கபோலௌ து ஸர்வதுஷ்ட நிவாரகம் 2

க்லௌம் கம் ச கணபதயே வாசம் பாது விநாயக : ।
வரபீஜம் ததா ஜிஹ்வாம் த்விதியம் ஹஸ்த
யோஸ்ததா ॥ 3

ஸர்வஜனம் ச மே பாஹு த்வயம் கண்டம்
கணேஸ்வர : ।
பாதுமே வஸ ஹ்ருதயம் ஸர்வஸித்தீஸ்வர ஸ்ததா ॥ 4

நாபிம் மே மானய ; பாது ஸர்வஸித்தி விநாயக : ।
ஜங்கயோ : குல்பயோ : ஸ்வாஹா ஸர்வாங்கம்
விக்னநாயக : ॥ 5

கணபதிரக்ரத : பாது கணேச : ப்ருஷ்டதஸ்ததா ।
தக்ஷிணே ஸித்தித : பாதுவாமே விச்வார்த்தி
ஹாரக : । 6

துர்ஜயோ ரக்ஷது ப்ராச்யா மாக்னேய்யாம்
கணபஸ்ததா ।
தக்ஷிணஸ்யாமுமாஸூனு : நைர்ருத்யாம் சம்பு
நந்தன । 7

ப்ரதீச்யாம் ஸ்தாணுஜ : பாது வாயவ்யா ஆகுவாகன : ।
கௌபேர்யா மீச்வர : பாதுசை ஸான்யா மீ ஸ
நந்தன : ॥ 8

அதோ கணபதி : பாது சோர்த்வம் பாது விநாயகம் : ।
ஏதாப்யோ தசதிக்ப்யஸ்து பாது நித்யம் கணேச்வர : ॥ 9



உ



ஸ்ரீ கணேச ஏக விம்சதி நாமாவளி

(விநாயகரின் 21 நாமாக்கள்)

தத்புருஷாய வித்மஹே வக்ர துண்டாய தீமஹி
தந்நோ தந்தி பிரசோதயாத்

கணஞ்ஜயோ கணபதிர் ஹேரம்போ தரணீதர ௸
மஹா கணபதிர் லக்ஷப்ரத ௸ க்ஷிப்ர ப்ரஸாதன ௸
அமோக ஸித்திர மிதோ மந்திர சிந்தாமணிர் நிதி ௸
ஸுமங்கலோ பீஜமாசா பூரகோ வரத ௸ சிவ ௸
காச்யபோ சுத நந்தனோ வாசா ஸித்தோ டுண்டி விநாயக ௸
மோதகைரே பிரத்ரை கவிச்த்யா நாமபி ௸ புமான்
ய ௸ ஸ்தௌதி மத்கதமநா மதாராதன தத்பர ௸
ஸ்துதோ நாம்நாம் ஸஹஸ்ரேண தேநாஹம் நாத்ர ஸம்சய ௸

இதிலுள்ள 21 நாமங்கள்

1. கணஞ்ஜய
2. கணபதி
3. ஹேரம்ப
4. தரணீதர
5. மஹா கணபதி
6. லக்ஷ ப்ரத
7. க்ஷிப்ரப்ரஸாத
8. அமோக ஸித்தி
9. அமித
10. மந்த்ர
11. சிந்தாமணி
12. நிதி ௸
13. ஸுமங்கல ௸
14. பீஜம்
15. ஆசா பூரக
16. வரத
17. சிவ
18. காச்யபசுத
19. நந்தன
20. வாசா ஸித்த
21. டுண்டி விநாயக

கணஞ்ஜய :—எதிரிகளை கூட்டமாகவே நிர்முலமாக்குபவர்.
கணபதி :—கணங்களுக்குப் பதி.
ஹேரம்ப :—அளவிட முடியாத பராக்ரமம் நிறைந்தவர்.
தரணீதர :—பூமியை தாங்குபவர்.

மகா கணபதி :—மிகப் பெரிய படைகளுக்கும் தலைமை தாங்கி காப்பாற்றுபவர்.

லக்ஷப்ரத :—லக்ஷியங்களை நிறைவேற வைப்பவர்.

க்ஷிப்ரஸாதன :—தாமதமின்றி அருள் புரிபவர்.

அமோக ஸித்தி :—அமோகமாக ஸித்தியை அருள்பவர்.

அமித :—அளவிடப்படாதவர்; அணுவுக்குள் அணு; மகத்துக்கு மகம்.

மந்திர :—பலவித மந்திர ஸ்வரூபமாக உள்ளவர்.

சிந்தாமணி :—கேட்கும் வரங்களை எல்லாம் தருபவர். வஸுந்தரா என்ற மனைவியுடன் கூடிய சங்கநிதி, வஸுமதி என்ற மனைவியுடன் கூடிய பத்மநிதி இருபுறம் உள்ளனர்.

நிதி :—மஹாபத்மம், பத்மம், சங்கம், மகரம், கல்பம், முகுந்தம், நீலம், கர்வம் அற்புதம் என்ற ஒன்பது நிதிகளின் வடிவமானவர்.

ஸுமங்கல :—ஸுமங்கலா எனப்படும் பிராண சக்தியால் இயங்கும் பீடத்திற்கு சகல மங்களங்களையும் செய்பவர்.

பீஜம் :—அக்ஷர ரூபமாக இருந்து அருள்பவர்.

ஆசாபூரக :—தன் புகழால் திக்கு எங்கும் வியாபிக்கப்பட்டவர்.

வரத :—விரும்பும் வரங்களைத் தருபவர்.

சிவ :—சிவஸ்வரூபமாகவே உள்ளவர்.

காச்யப சுத :—காச்யபரின் மகனாக அவதரித்தவர்.

நந்தன :—எல்லாவித இன்பங்களுக்கும், சிறப்புக்களுக்கும் காரணமானவர்.

வாசாஸித்த :—அடியார்களுக்கு பேசும் திறனை அளிப்பவர்.

டுண்டி விநாயக :—முக்தி பெற விரும்புபவர்களுக்கு தத்துவ விசாரத்தால் அறியத்தகுந்தவர்.

கணபதிக்கு 21 ஸங்க்யை மிகவும் விசேஷமானது. 21 பத்ரம், 21 புஷ்பம், 21 தூர்வாயுக்மம் (அருகம்புல்), 21 அதிரஸம், 21 பழம், 21 கொழுக்கட்டை (மோதகம்) இவ்விதம் எல்லாம் 21 ஆக இருக்க வேண்டும்.

ஏன் 21 ?

ஞானேந்திரியம் 5, அதன் காரியம் 5, கர்மேந்திரியம் 5, அதன் காரியம் 5, மனது 1, ஆக 21. முழுமுதல் கடவுளாகவும், ஓங்கார ரூபியாகவும் இருக்கும் விநாயகரைப் பூஜிக்கும்போது மனதுடன் சம்பந்தப்பட்ட ஞானேந்திரியங்களும், கர்மேந்திரியங்களும் கட்டுக்கடங்காவிட்டால் பூஜை, உபாஸனை செய்வதில் அர்த்தமில்லை. இந்த நினைப்பை 21 நினைவூட்டுகிறது.

1

வினை தீர்க்கும் விநாயகர்

அரிதிரு மருகா ஆறுமுகன் துணைவா
கஜமுக வரதா கணபதி சரணம்!...

விக்ன விநாயக தேவே ஓம்.

எந்தக் காரியம் செய்தாலும் அது விக்ன மில்லாமல் நன்ருக நடைபெற விநாயகர் அருள் வேண்டும். அதனுல் முதலில் நினைத்துப் பூஜிக்க வேண்டியது அவரைத்தான். மனிதர் களாகட்டும் முனிவர்களாகட்டும் அல்லது தேவர்களேயாகட்டும் முதல் பூஜை இவருக்குச் செய்து விட்டுதான் எதையும் ஆரம்பிக் கிருர்கள்,

ஏன்! இதர கடவுள்களும் இவரை முதலில் வழிபட்டே விக்னங்களை தீர்க்க வேண்டி வந்தது.

திரிபுர அசுரர்களை ஜெயிப்பதற்கு புறப்பட்ட சிவபெருமான் இவரை பூஜை செய்யாததால் தேரின் அச்சுமுறிந்தது. அவர் விநாயகரை வழிபட்டபின் திரிபுரதகனம் செய்ய முடிந்தது. இந்த அச்சு முறிந்த இடமே செங்கற்பட்டு மாவட்டத்தில் அச்சிறுபாக்க மாக விளங்குகிறது. (அச்சு இறுந்த இடம்.)

பண்டாசுரனை வதம் செய்யப்புறப்பட்ட அம்பிகையை அசுரனுல் ஸதாபிதம் செய்யப்பட்ட விக்ன யந்திரம் தடை செய்தது. இதை நிவர்த்திக்கும்படி தேவி விநாயகரைக் கேட்டுக் கொண்டதன் பேரில் அந்த யந்திரத்தைப் பொடியாக்கி தேவிக்கு பண்டாசுரனை வதம் செய்ய உதவி செய்தார். சூரியன் தன் ஒளி குறையாமலிருக்க கணேசரை ஆராதித்து எப்போதும் தென் மண்டலத்தில் கணேசரை அர்க்க கணபதி ரூபத்தில் ஆராதிக்கிருர்.

பிரும்மா சிருஷ்டியை ஆரம்பிக்கு முன் கணபதியை வழிபடாததால் அவர் படைத்த மனிதன், மிருகம் எல்லாம் பேய் பிசாசுகளாக மாறிவிட்டன. பிரும்மா பின் கணபதியை ஆராதித்து சிருஷ்டி சக்தியைப் பெற்ருர்.

கணபதியின் சகாயத்தினுல்தான் சுப்பிரமணியர் வள்ளியை திருமணம் முடிக்க முடிந்தது. இப்படி உதவி செய்த விநாயகரை ''ஆபத்சகாய விநாயகர்'' என்ற பெயரில் திருத்தணி மலை மீது தரிசிக்கலாம்.

முதல் பூஜைக்கு காரணம்

ஒரு சமயம் தேவர்கள் அமிர்தத்தினாலாகிய மோதகத்தை சிவபெருமானிடம் சமர்பித்தனர். அப்போது முருகனும் அங்கிருந்தார். புண்ணியத்தைதேடி முதலில் வருபவருக்கு இந்த மோதகம் என்றார் சிவன். புண்ணிய நதிகளும், மலை, காடுகளும் ஈசனிருக்கும் இடமாதலால் அவைகளை தரிசித்து புண்ணியத்துடன் வர முருகன் மயிலேறிச் சென்றார். ஓங்கார ரூபியான கணபதி தந்தை தாயைப் பணிவதைவிட வேறு புண்ணியம் எது என்று கருதி அவர்களை வழிபட்டு அமிர்த மோதகத்தைப் பெற்றார். தர்மசூக்ஷ்மத்தை உணர்ந்து உலகிற்கு வழிகாட்டிய உத்தம விநாயகனை எல்லோரும் எல்லாக் காரியங்களிலும் பூஜை செய்து இஷ்ட சித்தி பெற சிவபெருமான் வரமளித்தார். (இதே வரலாறு மாம்பழக் கதையாகவும் கூறப்படுவதுண்டு.)

சங்கீதம் கற்க ஆரம்பிக்கும்போது 'லம்போதர' கீர்த்தனையும் கச்சேரிகளில் முதலில் வாதாபி கணபதிம், என்றும், காலக்ஷேபத்தில் 'ஹிமகிரி தனயாபத்யம் என்றும், ''திமிகிட திமிகிட'' என்றும் ஈசன் ஆணை நிறைவேற்றப்படுகிறது.

ஓம் என்ற ப்ரணவ வடிவமான விநாயகரை அவர் பரப்ரும்ம மானதால் சகல கர்மாக்களையும் துவக்கும்போது அவர் பெயரைக் கூறி செய்கிறார்கள். 'ஓம்' என்று கூறியே வேத பாராயணம் ஆரம்பிக்க வேண்டும். அக்னி ஹோத்திரம், இஷ்டி முதலிய கர்மாக்களிலும் ''ஓம் முன்னயா'' ''ஓம் முத்தரா'' ''ஓம் ப்ரோஷா'' என்பதுபோல் முதலில் விக்னேஸ்வர பூஜையை வாக்கினால் செய்கிறார்கள்.

நம் கிரந்தங்களின் ஆரம்பத்தித்தில் ''ஓம் மகா கணபதியே நம:'' என்றே கூறப்பட்டுள்ளது. துர்வாஸ ஸ்தவத்திலும், சாக்த சமயங்களிலும் கணபதி வார்த்தைக்கு முன்பு''வல்லபாஸ்லிஷ்ட'' என்ற சொல்லும் சேர்ந்து தியானம் செய்யப்படுகிறது.

லலிதா சகஸ்ர நாமத்தில் ''காமேஸ்வர முகாலோக கல்பித ஸ்ரீகணேஸ்வரா''வில் கணபதியினுடைய ஆவிர்பாவத்தைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது.

வேத முதல்வன்

கணானாம் த்வா கணபதி மவாமஹே
கவிம் கவினாம் உபமச்ர வஸ்தவம்
ஜ்யேஷ்டராஜம் பிரும்மனாம் பிரும்மணஸ்பதே
ஆனச்ருண்வன் ஊதிபி: ஸீத சாதனம்

—ரிக் வேதம்

அதர்வண வேதத்தில் ''கணபதி அதர்வத்சீர்ஷ உபநிஷத்'' என்று ஒரு பாகம் உண்டு. இதில் கணபதி தத்துவம் பூரணமாக விளக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ மகா கணபதியை ''தத்துவமஸி'' என்ற உபநிஷத் மகா வாக்யத்தின் சாராம்சம் என்பர். 'க' என்ற அக்ஷரத்தால் ''த'' என்ற பிரும்ம ஸ்வரூபம்.

'ண' என்ற அக்ஷரத்தால் 'த்வம்' என்ற பதத்தில் அடங்கிய சிருஷ்டியும் 'அடங்கி',

'பதி' என்ற பதத்தால் (அஸி) ஸ்ரீ கணபதியின் ரூபமும் குறிக்கப்படுகிறது. இது கணபதி அதர்வசீர்ஷ உபநிஷத்தில் விளக்கப்பட்டுள்ளது. ஆகவே இவர் ஜீவன் முக்தியை அளிக்கும் தெய்வம்.

வேதம் இவரை ''ஜ்யேஷ்ட ராஜன்'' என்றும், ''பிரும் மணஸ்பதி'' என்றும் வருணிக்கிறது. முதலில் கூறப்பட்ட நாமா வுக்கு முதலில் உதித்தவன் என்றும், பின்னுல் கூறப்பட்ட நாமா வுக்கு வேதத்தின் தலைவன் என்றும் பொருள். எப்படி 'அ' எழுத் தின்றி வேறு எந்த எழுத்தும் ஒலிக்க முடியாதோ அதே போல விநாயகர் இன்றி வேறு தெய்வ பூஜையுமில்லை. ஸ்ரீ வைஷ்ணவர் களும் தங்கள் ஆலயங்களில் இடம் கொடுத்து இவரை ''தும்பிகை யாழ்வார்'' என்று வழிபடுகின்றனர்.

நான்கு வேதங்களிலும் அநேக ஸூக்தங்கள் விநாயகரின் மகிமையை விவரிக்கின்றன. கணபத்யதர்வசீர்ஷோபநிஷத், ஹேரம்போநிஷத், கணேச பூர்வதாபினி உபநிஷத், வல்லபே சோபாநிஷத் சுணேச ஸ்தோத்திர தாபினி உபநிஷத், என்ற ஐந்து உபநிஷத்துகளும் அவருடைய உபாசன முறையை விளக்கு கின்றன.

இவரைப்பற்றி விவரிக்கும் புராணங்கள் கணேச புராணம், முத்கலப் புராணம். இவ்விரண்டும் இவரைப்பற்றி முழுமையாக பேசுகிறது.

ஸ்காந்த புராணம், வாமன புராணம், பிரும்மாண்ட புராணம், கருட புராணம், விஷ்ணு தர்மோத்திரம், வாராஹ மகா புராணம், சிவ புராணம், பிரும்ம வைவர்த்தம், பவிஷ்ய புராணம், லிங்க புராணம், பாத்ம மகாபுராணம், இவைகளில் சில பகுதிகளில் விநாயகரைப்பற்றி குறிப்பிடப்படுகிறது.

குமார ஸம்ஹிதா தந்திரம், வட்டாமரேசதந்திரம் என்ற தந்திர நூல்களிலும் இவரை பூஜிப்பதற்கான மத்திரங்கள், யந் திரங்கள், பரிவார தேவதைகள் முதலியவை குறிப்பிடப்பட் டுள்ளன.

கணேச சஹஸ்ரநாமத்திற்கு பாஸ்கர ராயர் ''கத்யோதம்'' என்று வடமொழியில் உரை எழுதியிருக்கிறுர். ஸ்ரீ வி. எஸ். வி. குருசாமி சாஸ்திரிகள் இதற்கு ''கணேசப் பிரியை'' என்ற தமிழ் உரை எழுதியிருக்கிறுர்.

விநாயகரின் உலகம் ஆனந்த புவனம் எனப்படும். இது கைலாசத்தின் ஒரு பகுதி.

இவருக்கு மேல் நாயகன் இல்லை

விநாயகனே வெவ்வினையை வேர் அறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்—விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் வேந்தனுமாம் தன்மையினுல்
கண்ணிற் பணிமின் கனிந்து

—நம்பியாண்டார் நம்பி

வி+நாயகன் என்ருல் தனக்கு மேல் தன்னை நடத்துவிக்கும் நாயகர் இல்லாதவர் என்று அர்த்தம். விநாயகருடைய அஷ்ட டோத்திர சதநாமங்களுள் 'அநீஸ்வராய நமஃ' என்பது இதையே குறிக்கிறது. அநாயக ஏக நாயகம் என்று ஆதிசங்கரர் குறிப்பிடு வதும் இந்த விநாயகர் நாமத்தைத்தான்.

சிவஞான சுவாமிகள் தான் இயற்றிய பிள்ளைத்தமிழில்,

''ஏர் கொண்ட தன்னைப் தளைப்பவரும்
ஊருனரும் இலரென்பது உலகு தேறற்கு
எடுத்த வெம்பாசமோடங்குசந்தன் கரதீதேந்தி
மததாரை சிதறிப் பார் கொண்ட எண் திசைத்
தறுகட் களிற்றுப்படல் பனிப்ப சேவிக்காலழி
பகிரண்டமுற்றும் புகுந்துலாய் கலைசையிற்
பதியுமோர் களிறு''

என்று அழகாகக் கூறுகிருர்.

பாசமும், அங்குசமும் யானையை அடக்கி ஆளும் பாகனிடம் இருக்கும். ஆனுல் கணபதி என்ற யானையே இவைகளை வைத்துக் கொண்டிருக்கிறது. இந்த யானையை அடக்கும் பாகன் இல்லை. இவர்தான் உயிர்களான யானையை நடத்துகிருர்.

இப்படிப்பட்ட நாயகன் இல்லாதவரைப் பற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டாமா?

கணபதி உபநிஷத் இவரை,

த்வம் ஆநந்தமய, த்வம் பிரும்மமய,
த்வம் சச்சிதானந்த அத்வீதீயோஸி என்றும்
த்வம் குணத்ரயாதீத ஃ த்வம் தேஹத் ரயாதீத ஃ
த்வம் காலத்ரயாதீத ஃ என்றும்,
த்வம் ஜகத் இதம் த்வத்தோ ஜாயதே
சர்வம் ஜகத் இதம் த்வத் தஸ்திஷ்டதி
சர்வம் ஜகத் இதம் த்வயிலய மேஷ்யதி

என்றும் கூறுகிறது.

இதன் பொருள், விநாயகர் ஆனந்தமாக இருப்பவர், பெருமையுடையவர். சச்சிதானந்த ஸ்வரூபி, குணங்கடந்தவர், தேகங் கடந்தவர், காலம் கடந்தவர், முத்தொழில் நடத்துபவர். இந்த உபநிஷத் கடைசியில் ''ய ஏவம் வேதா மகா விக்நாத் பிரமுச்சதே, மகா தோஷாத் ஜாயதே, சர்வ வித்பவதி சர்வ வித்பவதி'' என்று கூறி இவரை வழிபடுக என்கிறது.

எல்லா உயிர் பொருள்களிலும் முழுமுதற் கடவுள் ஒருவரே பெரியவராதல் போல எல்லா உயிர்களிலும் யானையே உருவத்தாலும் வலிமையாலும் பெரியதொன்றாக இருக்கிறது. கடவுள் தன்னை அன்பினால் உருகி வழிபடும் அடியவர்க்கு எளியவராய் அவர்கள் வேண்டுவன எல்லாம் விரும்பிச் செய்வது போல யானையும் தன்னிடம் அன்புகொண்டு பழகுபவரிடம் தன் பெரும்வலிமையைக் காட்டாமல் அவர்களுக்கு மிகவும் அடங்கி பணிந்து அவர்களிடம் விசுவாசமாக இருக்கும். யானையின் துதிக்கையின் வடிவமும் 'ஓம்' என்ற வடிவத்தைக் கொண்டது.

யானைக்குக் கன்னத்தில் மதஜலம் கசிவது வழக்கம். அது போல விநாயகருக்கும் கன்னத்தில் மதம் பொழிகின்றது. என்ன மதம்? வலப்பக்கம் அறக்கருணையும் இடப்பக்கம் மறக்கருணையுமாகிய மதங்கள். 'கருணையென்னும் வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை நினைத்து வருவினைகள் தீர்ப்பாம்'' என்று பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தில் கூறுவதையும், ''மதப்பேர் பெற்ற அருள்'' என்று செந்தில் நிரோட்டக யமக அந்தாதி காப்புச் செய்யுள் கூறுவதையும் கவனிக்கவும்.

வேதம் தொகுத்த வியாசர்க்கு பரம அருளை பாலித்தார் என்ற வரலாற்றால் எந்நூலுக்கும் மூலவர் அவர் என்பது விளங்குகிறது. காப்பு வைத்தே எந்நாளும் ஆரம்பிக்கின்ற செய்தியை அகில உலகமும் அறியும், எண்வகை சித்திகளே கணபதிக்குப்பணி மாதர். பஞ்ச மூர்த்திகளினும் மேற்பட்ட (அருவம், உருவம் (அருவுருவம் எனும் மூன்று நிலையும் கொண்ட) துரீய சிவத்தின் அபேத அவதாரத்தை விநாயகர் என்கிறது வைதிக சமயம்.

விஷ்வக்ஸேனர் என்னும் சேனை நாயகர் என்கிறது வைஷ்ணவம். புத்த நாயகர் என்று போற்றுகிறது புத்த மதம். அருக நாயகர் என்று ஆராதிக்கிறது ஜைன மதம். வேதம் கணபதியின் நாதம். ஆகமங்கள் அப்பெருமானை ஆராதிக்க உரைத்த அருள் மறைகள், உபநிஷதங்கள் விக்நேசர் உயிர்ப்பு. ஓங்காரம் அவர் திருமேனி.

தமிழ்நாட்டில் பிள்ளையார்

குமரி முதல் இமயம் வரை, ஏன் அயல்நாடுகளிலும் விநாயகர் கணபதி, கணேசன் என்று விளங்கும் விக்னேஸ்வரருக்குத் தமிழ் நாட்டில் தனிப் பெயர் உண்டு. அதுதான் பிள்ளையார்.

''தமிழ்நாட்டுப் பிள்ளையார் பெரிய இடத்துப் பிள்ளை. 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்கிறார் மாணிக்கவாசகர். தென்னாட்டுக்கு உடையவர் சிவன். அவருடைய உடமை தென்னாடு—நாமெல்லோரும். யாருடைய உடமையோ அச்சிவனுடைய பிள்ளையை வேறு பெயரிட்டு அழைக்காது பிள்ளையார் என்றே அழைக்கிறோம்'' என்று காஞ்சி காமகோடி பெரியவர் ''பிள்ளையார்'' என்று அழைப்பதற்கு விளக்கம் தந்திருக்கிறார்கள்.

தூம்ரவர்ணர்

புகை நிறம் உடையவர். 'ய' என்னும் வாயு தேவதையின் பீஜாக்ஷரத்திற்கு புகையின் வர்ணத்தை மந்திர சாஸ்திரம் கூறுகிறது, மணமுள்ள புகை கிளம்பும் தூபத்தை இறைவனுக்குக் காட்டும்போது ''யம்'' என்ற வாயு பீஜாக்ஷரம் கூறப்படுகிறது.

வக்ரதுண்டர்

நுனியில் வளைந்தும் நீண்டதுமான துதிக்கை. அழகு நிறைந்த கணபதியின் துதிக்கையின் கோணல் அவரை மேலும் அழகுபடுத்துகிறது. வக்ரதுண்டர் என்பது மகா கணபதியைக் குறிக்கிறது. ''ஹஸ்திபிசாசிலிகே ஸ்வாஹா'' என்பது உச்சிஷ்ட கணபதியின் மந்திரம்.

ஹ்ரீம்

ஹ்ருல்லேகா மந்த்ர மத்ய: என்று ஒருநாமம். ஹ்ரீம் என்ற மந்திரத்தின் உள்ளிருப்பவர் 'ஹ' என்றும் ஆகாசத்தால் பிரகாசிப்பவர் 'ர' என்ற அக்னியால் அனைத்தையும் உட்கொள்பவர். 'ஹ' 'ர' என்ற இரண்டு தத்துவத்தின் சாரமான 'ஈ' என்ற தத்துவத்தை பிந்துவினால் விளங்கச் செய்பவர்.

ஹ, ர, ஈ, பிந்து, அர்த்த சந்திரன், ரோதினி, நாதம், நாதந்தம், சக்தி, வியாபிகா, ஸமனா, உன்மனா என்ற பன்னிரண்டின் கூட்டமே ஹிருல்லேகையின் ஸ்வரூபம்.

ஸ்ரீம், ஹ்ரீம், க்லிம் என்று மூன்று சக்திகள் சேர்ந்த மந்திரத்தின் தலைவர் என்பதால் த்ரிசக்தீச என்ற நாமம் ஏற்பட்டது. அரசு புரிவதற்குத் தேவையான பிரபு சக்தி, உத்ஸாஹ சக்தி, மந்திர சக்தி மூன்றும் கூடியவர்.

''கம்'' என்ற ஒரு பீஜாக்ஷரத்தில் நிலைத்திருப்பவர்.

''ஓம்'' என்ற ஒரு பீஜாக்ஷரத்தின் பொருளாக விளங்குபவர்.

விஷ்ணும்

சுக்லாம் பரதரம் சுலோகத்தில் விஷ்ணும் என்று ஒரு வார்த்தை இருக்கிறது. எங்கும் வியாபித்திருக்கும் பொருளுக்கே விஷ்ணு என்று பெயர். வெள்ளை நிறமான பாற்கடலில் படுத்திருப்பவன் விஷ்ணு. வெள்ளை எருதின் மேல் இருப்பவன் சிவன். நம் உள்ளத்தை வெள்ளைக் கடலாகவோ, வெள்ளை எருதாகவோ செய்துவிட்டால் விஷ்ணுவும், சிவனும் வந்து விளையாடுவார்கள். நம் உள்ளம் எருமை மாடாக இருக்கிறது. எருமை மாட்டின் மேல் யமன்தான் வருவான்.

பாற்கடலில் பால் ஏது? பகவானை நினைத்து, நினைத்து அன்பர்கள் இதயத்தில் பொங்கும் அன்புதான் பால்,

பிரணவ ஸ்வரூபி 2

சான்ருயுள நிற்கும் சிவன் கரியாம்-வையமெலாம்
ஈன்ருளாய் அன்னை இடந்தரலால் ஏன்ற பிடி
ஆவான் கணபதியும் அம்மறையான் ஆறுமுகன்
ஆவான் இருவருமாங்கு.

[அம்மறை - அழகிய ஓங்கார மந்திரம். இருவரும் - சிவன் சக்தி, ஐந்து முகத்தோடு ஆறுமுகம் தோன்றல்.]

பிரணவம் எட்டு அம்சங்களைக் கொண்டதாகும். அவை அ, உ, ம, பிந்து, நாதம், கலை, கலாதீதம், பரம் - பிரணவம் அஷ்டாக்ஷரம் என்கிறது தாரஸ்சோபநிஷத்.

எல்லாப் பொருள்களுக்கும், எல்லா உயிர்களுக்கும் முதலாய் நிற்கும் எல்லாம் வல்ல இறைவனை வழிபடும் முறைகளைக் கண்டுணர்ந்த நம் பண்டைப்பெரு முன்னோர்கள், இறைவனை வழிபடுதற்குரிய மந்திரங்களுள் ஒன்ருகவும், தலை சிறந்ததாகவும், ஓங்காரம் என்பதனைக் கண்டறிந்தனர். எல்லா எழுத்தின் ஓசைகளுக்கும் முதலாய் இயல்பாகத் தோன்றி ஓயாது ஒலி செய்து கொண்டிருக்கும் 'ஓம்' என்னும் ஒலியே ஓங்காரம் எனப்படும். இவ்வியற்கை முதலோசை வடமொழியிற் 'ப்ரணவம்' என்று வழங்கப்படுகின்றது. 'ப்ரண' என்னும் சொல் 'பழைய' என்னும் பொருளைத் தரும். எனவே, 'ஓம்' என்னும் ஓசை ஏனை எல்லா ஓசைகளுக்கும் முற்பட்டதாய் இயற்கையே தோன்றி இயங்கும் பழைமையுடையதாதல் பற்றி 'ஓங்காரம்' 'பிரணவம்' எனப் பெயர் பெற்றது.

மேலும் நமது உடம்பில் உள்ள சிறந்த உறுப்புக்கள் அத்தனையும் ஓங்கார வடிவினவாகவே இருக்கின்றன. நமது உடம்பின் வளர்ச்சிக்கும் இயக்கத்திற்கும் இன்றியமையாத கருவியான நெஞ்சப்பை(Heart)யின் வடிவமானது, தாமரை முகையை ஒத்து ஓங்கார வடிவமாகவே அமைந்திருக்கின்றது. இங்ஙனமே மூளை, இரைப்பை, மலக்குடல், கிறுநீர்ப்பை, கருப்பை முதலியன பலவும்கூட, ஓங்கார வடிவம் உடையனவாகக் காணப்பெறுகின்றன. ஒலிகளை யெல்லாம் கேட்பதற்குரிய கருவியாகத் திகழும் காதும்கூட, ஓங்கார வடிவம் பெற்றே விளங்குகின்றது. இவ்வியற்கை அமைப்புகள் அனைத்தும் ஓங்காரத்தின் சிறப்பையே உணர்த்தி நிற்றல் காணலாம்.

உட்பொருள் :

ஓங்காரத்தின் பிரிவெழுத்துக்கள் ஆகிய அகாரம் உகாரம் மகாரம் என்னும் மூன்றில், முதல் நின்ற அகாரம் ரிக் வேத

முதல் மந்திரம் ஆகிய 'அக்நிமீளே; என்பதன் முதலிலும், இடை உகாரம் எஜுர் வேதத்தின் இடையிலுள்ள ''யோநிஸ் சமுத்து ரோ பந்து'' என்பதன் நடுவிலும், கடைநின்ற மகாரம் சாம வேதத்தின் இறுதியிலுள்ள ''சமாநம்வரம்'' என்பதன் ஈற்றிலும் நின்று, வேதங்களெல்லாம் ஓம் என்னும் மொழியின் பொருளே யாம் என்பதனை அறிவிக்கின்றன என அறிஞர்கள் கூறுவர். இங்ஙனமே தமிழ் மறைகளாகிய சைவத் திருமுறைகள் பன்னி ரெண்டும் கூட ஓங்காரத்தின் உட்பொருளாகும்.

விநாயகர் தோற்றம்

சிவனும், பார்வதியும் கயிலையில் மந்திரங்கள் எழுதியுள்ள மண்டபத்தைச் சுற்றிப் பார்த்தனர். அங்கே எழுதப்பெற்றிருந்த பிரணவத்தைப் பார்த்தனர்.

அகார, உகார, மகார கூட்டொலி சமஷ்டிப் பிரணவம். அது பிரிந்து இறைவன் எழுத்தாகிய அகரம் ஆண் யானையாகவும், அம்பிகை எழுத்தாகிய உகரம் பெண் யானையாகவும் மாறி இரண்டும் சேர்ந்தன. யானைமுக விநாயகர் தோன்றினர். இது காஞ்சிப் புராண விளக்கம்.

திருஞான சம்பந்தரும்,

பிடியதன் உரு உமைகொள மிகுகரியது
வடிகொடு தனது அடிபடுமவர் இடர்
கடி கணபதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில் வலிவலம் உறை இறையே

என்று தன் பாடலில் இதை விளக்கியுள்ளார்.

யானை முகம் ஏன்?

பிள்ளையாருடைய நாமங்களை உட்புகுந்து பார்த்தால் அவை பெரும்பாலும் யானைக்குள்ள குணங்களே என்பது தெரியவரும். நம் நாட்டில் காடுகளுக்கு ராஜாவாக விளங்கியது யானையே. ஆதியில் மனிதன் உதிக்கு முன் இப்பூலோகத்தை ஆண்டுவந்த சக்தி மிகுந்த அறிவு மிகுந்த நல்ல குணமுடையதான மிருக ராஜாவாகும் யானை. ஆகவே கானகபதி என்ற வார்த்தை கணபதி யாகியிருக்கலாம்.

ஒரு சிற்பி குழந்தையை சித்தரித்தால் மனித முகம் அமைக்கிறான், குழந்தை பிறப்பு என்பதை சித்தரிக்கும்போது குழந்தை யின் கடந்த பருவம், வரப்போகும் பருவம் இரண்டையும் கலந்து சித்தரிப்பது வழக்கம். மனிதன் எவ்வளவோ ஜீவராசியின் ஜன்மம் எடுத்து பின்பே மானிடனாகப் பிறக்கிறான்.

மிருக ஜன்மத்தில் உச்சநிலை ஏற்பட்ட பின்பே மனிதனாகப் பிறக்கிறான் எனப்படுகிறது. போன ஜன்மத்தைக்காட்ட யானை

யைத் தலையாகவும். இந்த ஜன்மதினத்தை காட்ட மனித உருவமாகவும் அமைத்திருக்கலாம் என்று சிற்ப நிபுணர்கள் கூறுகின்றனர்.

பிறக்கும் குழந்தைகள் யானைபோல் சக்தியுள்ளதாகவும், அறிவுள்ளதாகவும், மறதி இல்லாததாகவும், நுட்பமான கண்களையுடையதாகவும், இருக்கவேண்டும் என்பது தத்துவம்.

குழந்தைகளை பரப்பிரும்மம் என்பார்கள். ஆகவே பிள்ளையார் எப்போதுமே பாலப்பருவ தெய்வமே.

''பார்வதி குளிக்குமுன் பிடித்து வைத்த அழுக்கு உருண்டை விநாயகர்: பாதி குளிக்கும்போது பரமசிவன் வர, உள்ளே போகக்கூடாது என்று அழுக்குருண்டை தடுக்க சிவன் கோபத்தால் அதன் தலையை வெட்ட, பின் இடது பக்கம் சாய்ந்து உறங்கும் மிருகத்தின் தலையை எடுத்து சேர்க்குமாறு அசரீரி சொல்ல, விநாயகர் பிறந்தார். இவர்தானா முழுமுதற் கடவுள்?''

இம்மாதிரி கேள்விகளுக்கு எல்லாம் பதில் சொல்லுமுன் இந்தக் கதைகள் எல்லாம் தத்துவார்த்தத்தை உணர்த்தவே ஏற்பட்டன என்பதை நன்ருக மனதில் கொள்ள வேண்டும். வேதம் உபநிஷத் இவைகளிலுள்ள தத்துவார்த்தங்களை விளக்கவே ஏற்பட்ட கதைகளாகும் இவை. கதைகள் எதை காட்டுகின்றன என்பதை தெரிந்துகொள்ள வேண்டுமேயொழிய மேலெழுந்தவாரியாக இவைகளைப் படித்துவிட்டு கண்டபடி பேசுவது சரியல்ல.

சிருஷ்டி முததானவைகளுக்கு முதற்காரணம் மாயை' அழுக்கு என்பதற்கு மாயை என்ற ஒரு அர்த்தமும் உண்டு. அதாவது மாயையைக் கொண்டு முதற் படைப்பை தொடங்கினர் என்று அர்த்தமாகும். தேவ உடலேயும் விலங்குத் தலையையும் ஒட்ட வைத்தார் என்பது இறைவனின் எல்லாம்வல்ல தன்மைக்கு எடுத்துக்காட்டு. இது இக்கதை பற்றிய வரையில்.

பிள்ளையார் சுழி

இனி, ஏன் யானை முகம்? ஓங்கார எழுத்தின் தனித்தமிழ் வடிவம் ஏறத்தாழ யானை முகம் போலக் காணப்படும். ஓங்கார ஒலியைக் காதினுலேயே கேட்க முடியும். ஆனுல் அதை எழுதினுல் கண்ணுக்குப் புலனுகும், காதினுல் கேட்பது நாதம்; கண்ணுக்குப் புலனுவது விந்து. நாத தத்துவத்தை வரி (கோடு) போலவும் விந்து தத்துதத்தை புள்ளியிலும் அமைப்பது உண்டு. இது இரண்டும் சேர்ந்தே 'உ' என்கிற பிள்ளையார்சுழி. நாதமும் விந்துவும் ஒன்றுக்கு ஒன்று துணை (சான்று) நிற்கவேண்டும். இந்த சான்று என்பதைக் 'கரி' என்றும் கூறுவர்.

'பொக்கரி போகன் மின்' என சிலப்பதிகாரத்தில் வருகிறது. எனவே உமை வடிவாகிய சுழி வடிவமும் சிவசக்தி சான்ருகிய

'கரி' வடிவமும் கொண்டு நிற்கும்போது கணபதி வடிவமாகிய ஓம்காரம் தோன்றும்.

பிள்ளையார் சுழி உ வளைவாகக் கைப்பிடிபோல இருப்பதாலேயே நாம் அதை பற்ற முடியும். விந்து தத்துவம் சக்தியின் இயக்கம் அநிஷ்டானத்தால் தொழிற்படுத்தப்படுவது. இதற்குத் துணையாக இருப்பது இதன் மேலுள்ள நாதத் தத்துவமாகும். நாத தத்துவம் சிவனின் அதிஷ்டானத்தால் நடைபெறுவது. துணை என்பதும் சான்று என்பதும் ஒன்றேயாகும்.

சான்று என்பது ஒருவர் முன்னிலையில் ஒருவர் பார்த்துக் கொண்டிருக்கையில் மற்றொருவர் ஒன்று செய்வதாகும். சான்று என்பதனை 'கரி' என்றும் கூறுவர்.

ஏதேனும் ஒன்றை எழுதத் தொடங்குமுன் தலைப்பிலே ஒரு சுழியும் கோடும் இடுவதுண்டு.

இந்த எழுத்து என்பது வேத காலத்தில் இருந்ததா? இருந்தது என்று சிலரும், இல்லை என்று சிலரும் கூறுகின்றார்கள். ஓம்காரம் ஒரு எழுத்தே வேதத்துடன் தோன்றியது. இதனால் வேத காலத்தில் எழுத்து இருந்தது என்றாகிறது. அப்படியானால் ரிஷிகள் வேதங்களை எழுதி வைத்திருக்கவில்லை. அப்படி எழுதி வைத்திருந்தால் கேட்டு மனனம் செய்வது இல்லாது போகும். அப்போது ஸ்வரம் தப்பிப் போயிருக்கும்.

வால்மீகி முனிவரும் ராமாயணத்தை எழுதி வைக்கவில்லை. குசலவர்களுக்கு மனப்பாடம் செய்துவித்து ராமர் முன் அரங்கேற்றுவித்தார்.

எழுத்தில் தோன்றிய முதல் நூல் வியாச பாரதமே. இதை வியாசர் சொல்ல பிள்ளையார் எழுதினார். எழுத்திலே நூலை முதலில் பொறித்தவர் பிள்ளையார். இதனை மறவாமல் அவருக்கு வணக்கம் செலுத்தும் முறையாக பிள்ளையார் சுழி போட்டு எழுத ஆரம்பிக்கிறார்கள்.

தமிழ் எழுத்துக்களுக்கெல்லாம் உயிராக இருப்பது அதன் உயிர் எழுத்துக்களே. அவ்வுயிர் எழுத்துக்கள் அனைத்தும் சுழியை அடிப்படையாகக் கொண்டவை. 'அ' ஒரு சுழி. 'ஆ' இரண்டு சுழி. 'இ' ஒரு சுழி. 'ஈ' இரு சுழி. 'ஃ' மூன்று சுழி. ஆகவே முதலில் சுழிக்கக் கற்றுக்கொண்டால்தான் தமிழ் எழுத்துக்களை எளிதாக எழுதமுடியும். இதனால்தான் முதலில் சுழி போடுகிறோம்.

முன்பெல்லாம் புத்தகங்கள் கிடையாது. ஓலைகளில் எழுத்தாணியைக்கொண்டு எழுதி வந்தார்கள். இந்த ஓலையில்

எழுதும் வழக்கம் தமிழகத்தில் 2000 ஆண்டுகளுக்கு முன் தோன்றியது.

ஓலையில் எழுதுவது ஒரு கலை. ஓலை காய்ந்தாலும் எழுத வராது. பச்சையாக இருந்தாலும் எழுத வராது. எழுத்தாணி கூர்மையாக இருந்தாலும் எழுத வராது. மொக்கையாக இருந்தாலும் எழுத வராது. ஆகவே ஓலையை எழுத எடுத்ததும் அதன் பதத்தை பார்க்க ஒரு சுழி போட்டுப் பார்ப்பது வழக்கம். ஓலை காய்ந்திருந்தால் முறியும். பச்சையாக இருந்தால் சிக்கும்.

பராபர ப்ரஹ்ம சுவரூபமாக உபாஸிக்கப்படும் ப்ரணவம் சப்த ஸ்வரூபமாக இருந்து பராபர பிரம்மத்தை அடைய சாதனமாகிறது.

ஓம்' மங்களமான சப்தம்

ஓம் என்னும் சப்தம் 'பிரம்மம்' என்பதாக மனதில் தியானிக்க வேண்டும். வாசக வாக்கியங்களுக்கு அபேதமாதலால் ஸர்வமும் ஓம்காரமே எனப்பட்டது. யாகங்களில் 'ஓம்' என்று ஸாமகானம் செய்யப்படுகிறது. வேதாரம்பத்தில் ஓம் என்று தொடங்கி வேத ஞானத்தை அடைகிறான். பிரம்மத்தை அறிய வேண்டும் என்று உத்தேசித்து 'ஓம்' என்று ஆரம்பிக்க அந்த ப்ரணவத்தினாலேயே பிரம்ம பாவத்தை எய்துகிறான். பிரணவத்தை முன்னிட்டு செய்பவையனைத்தும் ஸித்தியடையும் என்பதால் ஓம்காரத்தை பிரம்மமென்று உபாசித்தல் வேண்டும் என்கிறது தைத்ரீய உபநிஷத்.

'ஓம்' என்னும் சப்தம் பரமாத்மாவுக்கு மிக்க நெருங்கிய அழிவற்ற பெயராகும். உலகத்தில் பெயரைச் சொல்லின் சந்தோஷ முண்டாவதுபோல அந்த பிரணவத்தைச் சொல்லுங் கால் பரமாத்மா சந்தோஷிக்கிறார். வேதங்களின் ஆதியில் 'ஸ்வரம்' என்று சொல்லப்பட்ட பிரணவம் அப்பரமாத்மாவின் வாசகமாக விளங்குகிறது. அப்பிரணவத்தினால் குறிக்கப்படும் பிரும்ம சுவரூபமே ஸ்ரீ கணபதி என்று விளக்கும் பொருட்டு 'ஓம்' என்று கணபதி உபநிஷத் ஆரம்பமாகிறது.

ஸ்ரீ வேத வியாசர் தான் இயற்றிய 18 புராணங்களில் ஸ்ரீ கணேச ஸ்வரூபத்தை ஐந்து வகையாக விமர்சித்துள்ளார். பிரும்ம புராணத்தில் நிர்க்குணமாகவும், பிரம்மாண்ட புராணத்தில் பிரணவ ஸ்வரூபியாகவும் நிரூபித்துள்ளார். (இது ஸகுண வடிவம்)

ஸகுண வடிவத்தில் இருவகை. ஸகுண ஸாகாரம் ஒன்று; ஸகுண நிராகாரம் மற்றொன்று. கஜமுக வடிவம், ஸகுண ஸாகாரம், பிரணவ வடிவம் ஸகுண நீராகாரம், தத்துவமஸி என்ற மகா வாக்கியமே கணபதியின் பிரத்தியக்ஷ ரூபம் என்று கூறப்படுகிறது.

ஆத்ம ஸ்வருபத்தை நசிகேதஸ்ஸுக்கு உபதேசிக்கும்போது பிரணவமே சிறந்தது என்று யமதர்மன் விளக்கினுர். தபஸ்ஸுகள் அனைத்தும் எதைக் குறித்து செய்யப்படுகின்றனவோ அதை சுருங்கச் சொல்லின் ஓம் என்பதால் குறிக்கப்படுவதேயாகும்.

பிரஜாபதி (விராட் புருஷன்) லோகங்களின் சாரத்தைக் கிரஹிக்கும்பொருட்டு தபஸ் செய்தார். அப்போது அவர் மனதில் ஸார பூதமான மூன்று வேதங்களும் விளங்கின. அவைகளின் சாரத்தை அறிய மீண்டும் ஆலோசிக்க பூ: புவ: ஸுவ: என்ற மூன்று வியாக்ருதிகள் விளங்கின. இந்த அக்ஷரங்களை மீண்டும் தியானிக்க ஓம்காரம் பிரகாசித்தது. இலைகள் முழுதும் நரம்பினுல் வியாபிக்கப்படுவது போல பிரம்ம ப்ரதானமான இந்த ஓம்காரத்தினுல் சப்த பிரபஞ்சம் முழுதும் வியாபிக்கப்பட்டது. (சாந்தோக்ய உபநிஷத்.)

ஓம் ப்ரணவானன தேவாய நம: என்ற மந்திரம் அவர் நாமாவளியிலுள்ளது கவனிக்கத்தக்கது.

ஓம் என்ற பிரணவம் தமிழ் நாட்டில் பிள்ளையார் சுழியாக மாறி வழங்கப் பெறுகின்றது. இக்காலத்தில் படிக்க வைக்குமுன் ஹரி: ஓம் என்று சொல்லிக் கொடுககிருர்கள். பிரணவத்திற்கு ஒலி வடிவமும், வரி வடிவமும் உண்டு. வரி வடிவம் விநாயகர் உருவத்திலும், ஒலி வடிவம் அவருடைய ஆற்றலிலும் திகழ் கின்றன.

ஹாஸ்ய சுலோகம்

'ஸமாஸ குஸுமாவளி' என்ற இலக்கண சம்பந்தமான நூலை எழுதிய சர்வமங்கள சாஸ்திரி விநாயகரைப் பரிகசித்துப் பாடிய ஹாஸ்ய சுலோகம் :

பூநாயகம் வா தனநாயகம் வா
பஜன் புவம் வா தன மேதி லோகே
தத் விக்னம் நாதம் நப ஜாமி கிம்து
ஸஹஸ்ரசஸ்தம் ப்ரணமாமி நித்யம் ||

(பூமிக்குத் தலைவர்களை அண்டினுல் பூமியைக் கொடுப் பார்கள். பணத்துக்குத் தலைவர்களை அண்டினுல் பணம் கிடைக்கும். நான் விக்ன விநாயகனை அண்ட மாட்டேன். (விக்ன நாயகன் விக்னத்தைத்தானே கொடுப்பான் !) என் பக்கத்தில் வராதே என்று தினம் அவனை ஆயிரம்தரம் நமஸ்கரிப் பேன்.)

உருவ விளக்கம் 3

ஐந்து கரத்தானை யானை முகத்தானை
இந்து இளம் பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

—திருமூலர்

[பிள்ளையார் உருவம் நின்ற நிலையில் ஆஜானுபாகுவாக இராது. குள்ளமாகவே காணப்படும். அவர் கட்டை விரல் அளவு உள்ளவராகவே இருக்கிறார். மனிதர்களின் ஹிருதயம் அவரவர் களின் கட்டை விரல் அளவுள்ளதாகும். அந்த அளவை அதனில் இருக்கும் ஆத்ம ஸ்வரூபத்திலும் உள்ளதாக கடோபநிஷத், ''அங்குஷ்ட மாத்ர ஃ புருஷ ஃ'' என்று கூறியிருக்கிறது.]

மிருக முகம், மனித உடல், பூதங்களின் கால். இது என்ன விசித்திர உருவம் என்று சிலர் கேட்கலாம். தெய்வத் திருவுருவங்களை மெய்ப்பாட்டுக் குறிப்புடன் நோக்குபவர்களுக்கு மிக்க அழகுள்ளனவாகவும், பொருள் பொதிந்தும் காணப்படும்.

பல்வேறு உலகங்கள் கொண்டது அண்டம். அண்டங்களில் வாழும் உயிரினங்கள் உடம்பு பற்றி ஆண் பெண் எனவும், ஒழுக்கம் பற்றி உயர்திணை, அஃறினை எனவும், நிலைபற்றித் தேவர் பூதர் எனவும் வழங்கப்படும். இறைவன் இவைகளை பிரதிபலிக்கும் உருவத்துடையவனாக இருக்கவேண்டும். அப்படியுள்ள வடிவமே கணபதியுடையது.

அஃறினையில் உயர்ந்த பெருவடிவம் யானை. உயர்த்திணைபோல் உண்பதற்கும், உழைப்பதற்கும் தும்பிக்கை (தூம்புக் கை) அமைந்துள்ளது. இந்த தும்பிக்கையால் நீரை முகர்ந்து யானை பருகுகிறது. இதனாலேயே அஃறினையில் உயர்ந்த யானையின் முகம் அமைந்தது.

கணேசரது ரூபம்

கணேசரது ரூபம் ஐந்து விதமாக வியாசரால் சொல்லப் பட்டிருக்கிறது.

1. பிரும்மம் :—இவர் நிர்க்குணர். ஜனங்களின் ஹிருதயத்தில் புத்தியை பிரகாசிப்பவர்.
2. பிரும்மாண்டம் :—சகுணமான ஓம்காரம். பிரணவ ரூபமாய் ஐந்து விதத்தில் இருக்கிறார். 'அ' காரம், 'உ' காரம், 'ம' காரம், நாதம், பிந்து.

3. யானை முகமுள்ளவர் :—ஸகுணம், நிர்க்குணம், இரண்டும் சுலபமாகிறது. 4. யோகமே இவர். 5. ஞானமே இவர்.

ஸகுணம் ஜகதா காரம் நிர்க்குணம் புத்தி சாலகம்
தயோர் ஞானம் பிரஸித்யர்தம் மூர்த்மந்தம் ஸ்துவந்திதே ‖
—ஸூதர்.

இதைக்கொண்டு வியாசர் தன் புராணங்கள் எல்லாவற்றிலும் கணபதியைக் குறிப்பிட்டிருக்கிறார்.

கணேச பூஜை நான்கு விதம்

1. எல்லாவற்றிற்கும் ஆரம்பத்தில் வெற்றியை உத்தேசித்து செய்வது—மூர்த்தி பூஜை. மஞ்சளை பிடித்து வைத்து செய்யப்படும்.

2. பிரணவ பூஜை ஓம்கார ரூபமாக தியானிப்பது.
3. கிரந்த ஆரம்பங்களில் அவருக்கு காப்பு பாடுவது.
4. புத்தி கொடுப்பவராக இருதயத்தில் தியானிப்பது.

யுகங்களில் ரூப பேதங்கள்

சதுர்ஷு யுகமானேஷு கணேசோ முக்ய பாவத ஃ
பூஜ்யதே மானவை ஃ ஸர்வை ஃ ஸ்வஸ்வ ஸித்யர்த மாதராத் ‖

க்ருதே விநாயக ஃ ப்ரோக்த ஃ கச்யபாத் மஜ ஏவஸ ஃ ।
ஸிம்ஹா ரூடச்ச திக்பாஹுஸ் தேஜோ ரூப ஃ பிரகத்யதே ‖

த்ரேதாயாம் பூஜ்யதே தேவோ மயூரே சச்ச ஷட்புஜ ஃ ।
சசிவர்ண சிவஸ்யைவ புத்ரோ மயூர வாஹந ஃ ‖

த்வாபரே மூஷிகா ரூடச் சதுர்புஜச்ச பூஜ்யதே ।
வரேண்யஸ்த ஸுதோ ரக்தவர்ணோ கநாநந ஃ ஸ்ம்ருத ஃ ‖

கலாவேவ ஸ்திதச் சைவ தூம்ர வர்ணோ த்விபாஹுத்ருக் ।
தாரக ஃ ஸர்வ பாவக்ஞோ கணேச பூஜ்யதே ஜநை ஃ ‖

பிரஹ்மாகார மயச் சைவ தேந பேதோரு வித்யதே ।
சதுர்ஷு யுகதர்மேஷு ஸித்திதாதா விசேக்ஷத ஃ ‖

கிருத யுகத்தில் கச்யபரின் பிள்ளை. ஸிம்மாரூடர், எட்டு கைகள். பெயர் தேஜஸ்வி.

திரேதாயுகத்தில் மயூரேஸ்வரர். ஆறு கைகள். சந்திர வர்ணம். சிவன் புதல்வர். மயில் வாகனம்.

துவாபர யுகத்தில் மூஷிக வாகனர். நான்கு கைகள். வரேண்ய ருடைய புத்திரர். சிவந்த வர்ணம். கஜானனர்.

கலியுகத்தில் புகை வர்ணம். இரண்டு கை. தாரகர். சம்சாரத்தை தாண்ட அருள் செய்பவர்.

எல்லாமே பிரும்ம ஸ்வரூபம்.

பிறரைக் காக்கும் காப்புப் பொருளை குறிப்பது கை. நான்கு கைகள் இருப்பதால் தேவர் நிலை குறிக்கப்படுகிறது. கருவுற்ற வயிறு பெறு வயிருக இருப்பது போன்று அனைத்திற்கும் நிலைக்களமாம் முதல்வன் உண்மையினைக் காட்ட பேழை வயிறு அமைந்தது. வயிருர உண்பவன் தீங்கு நினைக்கமாட்டான். பூதக் கூட்டங்கள் (குறுகிய கால்களையுடையவை) முதல்வன் காப்பினுல் பெருமையடைவதைக் காட்ட குறுகிய கால்கள் அமைந்தன.

முகத்தைக் கொண்டு மிருகம் எனச் சொல்வதற்கில்லை.

உடலைக் கொண்டு மனிதன் எனச் சொல்வதற்கில்லை.

கால்களைக் கொண்டு பூதகணம் என்றும்,

ஒற்றைக் கொம்பைக் கொண்டு ஆண் என்றும்,

ஒடிந்த கொம்பைக்கொண்டு பெண் என்றும் சொல்வதற் கில்லை.

உயர்ந்த திணை எனச் சொல்வதற்கில்லை. அஃறிணை என்று சொல்வதற்கில்லை. பின் அவர் யார்? எல்லாமாயும் அல்லதாயும் ஆதி அந்தமில்லாது எங்கும் எதிலும் நிறைந்திருப்பவர் கணபதி.

ஐங்கரங்கள்

அவர் தமது கைகளில் ஒன்றில், தம் பொருட்டு மோதகம் வைத்திருக்கின்ருர்; மற்ருெரு கையில் தேவர்களைக் காப்பதற் காகத் தந்தம் ஏந்தியிருக்கின்ருர்; பிறிதொரு கையில் தம்முடைய தாய் தந்தையர் ஆகிய பார்வதி பரமேசுவரர்களை அபிஷேகம் செய்து வழிபடுதற் பொருட்டு 'நீர்கலசம்' தாங்கியிருக்கின்ருர் ஏனைய இரண்டு கைகளிலும், உயிர்களாகிய நம்மை ஆணவ மலம் ஆகிய யானையானது பற்றி நலிவுறுத்தாதிருக்குமாறு செய்தற் பொருட்டு பாசமும் அங்குசமும் வைத்துக் கொண்டிருக் கின்ருர்!

அங்குச பாசம்

விநாயகரே ஒரு யானையாக இருந்தும், யானைகளை அடக்கும் கருவிகள் ஆகிய அங்குச பாசங்களை ஏந்தியிருப்பது, அவர் தமக் கொரு தலைவரை இன்றித் தாமே யாவர்க்கும் தலைவராக விளங்கும் தனி முதன்மைத் தன்மையினைத் தெளிவிக்கும். மும்மலங்கள் ஆகிய மதம் பிடித்து, ஞானம் என்னும் கம்பத்தினை யுடைத் தெரிந்து, அன்பு ஆகிய சங்கிலியை அறுத்துக் கொண்டு அருள் என்னும் கூட்டத்தை விட்டு நீங்கி, உலகமாகிய பெருங் காட்டில் மேய்ந்து கொண்டு எப்பாகர்காகட்கும் அடங்காதனவாக இயங்கி வரும் உயிர்கள் ஆகிய யானைகளை அடக்கி ஆண்டுக் கொண்டு அருள் புரிவதற்கு அடையாளமாகவே அவர் அங்குச பாசங்களைத் தாங்கியிருக்கிருர்.

ஒரு கையில் ஒடிந்த கொம்பு கொண்டு கயமுகாசுரனைக் கொன்று தேவர்களைக் காப்பாற்றுகிறார்.

இதை கச்சியப்ப முனிவர் தன் தணிகைப் புராணத்தில்,

பண்ணியம் ஏந்தும் கரம் தனக்காக்கிப்
பானிலா பருப்பமர் திருக்கை விண்ணவர்க்காக்கி
யாதனக்கலச வியன்கரம் தந்தை தாய்க் காக்கி
கண்ணிலானவ் வெங்கரி பிணித்தடக்கிக்கரிசி
னேற்கிரு கையுமாக்கும் அண்ணல் என்கிறார்.

மூஷிக வாகனம்

கிருத யுகத்தில் சிங்கம். திரேதா யுகத்தில் மயில். துவாபர யுகத்தில் மூஞ்சுறு. கலியில் குதிரை. சென்னை தியாகராய நகர் அகஸ்தியர் ஆஸ்ரம விநாயக மண்டபத் தூணில் இந்த வாகனங்களிலுள்ள விநாயகரை தரிசிக்கலாம்.

இவ்வளவு பெரிய ஆகிருதி உள்ளவருக்கு இவ்வளவு சிறிதான மூஞ்சுறு வாகனமா? (அவ்வளவு லேசாகவும் உள்ளவர் இவர் என்பது ஒரு கருத்து.)

கணபதியைக் காட்டிலும் சரீரத்தில் பருமனான சுவாமி வேறு இல்லை. யானையின் தலை, பெரிய உடல். அவருக்கு ஸ்தூலகாயர் என்று ஒரு பெயர். அவர் ஒரு குழந்தை. குழந்தை தொந்தியும் தொப்பையுமாயிருந்தால் பார்க்க அழகாக இருக்கும். குழந்தைகள் நல்ல புஷ்டியுடன் இருக்க வேண்டும் என்பதையே இந்தக் குழந்தை ஸ்வாமி உணர்த்துகிறார்.

பார்க்கப்பார்க்க அலுக்காத வஸ்துக்கள் சந்திரன், சமுத்திரம், யானை முதலியன. இவற்றை எல்லாம் பார்க்கப் பார்க்க ஆனந்தம் பொங்கும். அதனால் இவர் தன்னைப்பார்க்கின்றவர்களுககும் ஆனந்தம் பொங்க யானை முகத்துடன் இருக்கிறார். அது ஆனந்த தத்துவம். ஆராத ஆசையின் தத்துவம்.

'இவரே யானை மாதிரி இருக்கிறார். அதற்கு நேர்விரோதமான சின்னஞ் சிறு ஆகிருதி உடையது மூஞ்சூறு. இதை அவர் தம் வாகனமாக வைத்துக் கொண்டிருக்கிறார். மற்ற ஸ்வாமிகளுக்காவது ஒரு மாடு, ஒரு குதிரை, ஒரு பட்சி என்று வாகனம் இருக்கிறது. இவரோ தாம் எத்தனைக்கு எத்தனை பெரிய ஸ்வாமியாக இருக்கிறாரோ, அத்தனைக்கு அத்தனை சின்ன வாகனமாக வைத்துக் கொண்டிருக்கிறார். சுவாமி எதை வாகனமாக வைத்துக்கொண்டாலும் வாகனத்தினால் சுவாமிக்குக் கௌரவம் இல்லை. சுவாமியால்தான் வாகனத்துக்குக் கௌரவம் கொடுக்க, அதனுடைய சக்திக்கு ஏற்றபடி நெட்டிப் பிள்ளையார் மாதிரியாகக் கனம் இல்லாமல் இருக்கிறார். அதற்கு சிரமம்

இல்லாமல், ஆனால் அதற்கு மரியாதை, கௌரவம் எல்லாம் உண்டாகும்படியாகத் தம் உடம்பை வைத்துக் கொண்டிருக்கிறார்.

ஸ்கந்த புராணத்தில் இவருக்கு எலி வாகனம் ஏற்பட்ட வரலாறு பின் வருமாறு காணப்படுகிறது.

மகரிஷி சௌபரியின் மனைவி தன் ஆசிரமத்தில் தனியாக இருந்தாள். அப்போது கிரௌஞ்சன் என்ற அசுரன் அவளிடம் தவறாக நடக்க எண்ணினான். ரிஷியின் மனைவி கூச்சலிட்டாள் அதைக்கேட்டு ஓடி வந்தார் முனிவர். அந்த அசுரனை எலியாகப் போகும்படி சபித்தார். அசுரன் தவறை உணர்ந்து மன்னிப்பு கேட்டான். பிள்ளையார் அருளால் சாப விமோசனம் ஆகும் என்று அந்த ரிஷி கூறினார்.

இந்த எலியின் உபத்திரவம் தாங்க முடியாமல் போனதினால் முடிவில் பிள்ளையாரே வந்து இதை அடக்கித் தன் வாகனமாகக் கொண்டார்.

ஒவ்வொரு பிராணிக்கும் ஒவ்வொர் அங்கத்தில் அதிகக் கௌரவம் இருக்கும். கவரிமான் என்று உண்டு. அதன் கௌரவம் வாலில்தான் இருக்கிறது. மயில் என்றால் அதற்கு தோகை விசேஷம். தோகையை மயில் ஜாக்கிரதையாக ரட்சிக்கும். யானை எதை ரட்சிக்கும்? தன் தந்தத்தைத் தீட்டி வெள்ளை வெளேர் என்று வைத்திருக்கும். இந்தப் பிள்ளையார் என்கிற யானை என்ன பண்ணுகிறது என்றால் அந்தக் கொம்பில் ஒன்றையே ஒடித்துக் கொண்டு மகாபாரதத்தை எழுதிற்று. தன் அழகு, கௌரவம், கர்வம் எல்லாவற்றுக்கும் காரணமாக இருக்கிற ஒன்றைக் காட்டிலும், தர்மத்தைச் சொல்கிற ஒன்றுதான் பெரிது என்பதை அங்கே இந்த யானை காட்டியது. நியாயத்துக்காக, தர்மத்துக்காக, வித்தைக்காக எதையும் தியாகம் பண்ண வேண்டும் என்பதை, தானே தியாகம் பண்ணிக் காட்டியிருக்கிறது. சுவாமிக்கு ஆயுதம் என்று தனியாக ஒன்றும் வேண்டியதில்லை. எதையும் ஆயுதமாக அவர் நினைத்தால் உபயோகித்துக் கொள்வார் என்பதற்கும் இது உதாரணம்.

பிரும்மசாரியா? கிருகஸ்தரா?

கணபதி பிரும்மசாரி என்று சொல்வது வழக்கம். அவருக்கு சித்தி, புத்தி, வல்லபை என்ற மூன்று மனைவிகள் உண்டு என்றும் சொல்லப்படுகிறது. எது சரி? இரண்டும் சரி.

ஞானம் என்பது பிரும்ம ஸ்வரூபம். அதுவே கணபதி. புத்தி இச்சா சக்தி. சித்தி கிரியா சக்தி. இச்சா சக்தியும் கிரியா சக்தியும் கூட இருந்தால்தான் ஞானம் ஒரு காரியத்தை செய்ய முடியும். வல்லபை என்பவளே ஞான சக்தி. ஞான மூர்த்தியுடன் ஞான சக்தி கலந்தவள். அதனால் தான் இன்னாருடன் சமேத என்று

சொல்லும் போது வல்லபை சமேதேஎன்று வல்லபையின் பெயர் கூறப்படுகிறது.

சிருஷ்டி, பரிபாலனம் இதை இரண்டையும் செய்யும் போது விநாயகர் கிரகஸ்தரே. பிரபஞ்சம் ஒடுங்கும்போது இச்சை கிரியைசக்திகளை தனக்குள்ளேலயப்படுத்திகேவல ஞானமாகஇருக்கிறார். ஆகவே அப்போதுபிரும்மசரியம். உலகில் சில அசுரர்கள் அக்ஞானத்தின் உருவாகத் தோன்றி சாதுக்களை இம்சிக்கின்றனர். அந்த அஞ்ஞானத்தை அகற்ற அதாவது அசுரனை சம்ஹாரம் செய்யும் போது ஞானமே முன் நிற்க வேண்டும். பெண் வடிவமான இச்சா கிரியா சக்திகள் கூட இருந்தால் கருணை அதிகமாகி அசுரசிக்ஷை நடைபெறாது. அதனால் அவருடைய பல அவதாரங்களில் சில பிரும்சாரியாக அமைந்திருக்கின்றன.

கணபதிக்கு இம்மூன்று பேர் தான் பத்தினிகள் என்று நினைக்க வேண்டாம் புத்தி தேவி, முக்தி தேவி என்று இரு உப பத்தினிகளும் உண்டு. புத்தியுடன் பக்தி சேர்ந்து சித்தி பெற்றால் முக்திகிடைக்கும் என்பதே இதன் தத்வார்த்தம்.

சித்தி புத்தி தேவிகள்

சித்தி புத்தி இரண்டுபேரும் விநாயகரின் பத்னிகள். மனிதனுகப் பிறந்த எவனுக்குமே சிவமயமாவதற்கு வேண்டியவை புத்தியும் சித்தியும் தான். அதாவது அவனவன் தன் வாழ்நாளில் சேகரிக்கக்கூடிய மூளை விருத்தியும் குணத்தினுல் ஏற்படக்கூடிய சித்தியுமே அவனை உய்விக்கும். ஆகவே மனிதனுல் போற்றப்பட வேண்டிய இருஅம்சங்களையே பிள்ளையாரின் மனைவிகளாக குறிப்பிடுகிறார்கள்.

புத்தி-மனித வர்க்கம் தன் வாழ்நாட்களில் தனக்கு ஏற்படக்கூடிய சுகதுக்கங்களை அனுபவித்து அவைகளில் காணப்படும் ஈசுவர சக்தியை அறிந்து அச்சக்தியை பன்மடங்காக்கி தன் அறிவை உயர்த்துவது.

சித்தி-வாழ்நாளில் கஷ்டப்பட்டு சம்பாதித்த பொருளை தன்னுடையது என்று ஆசை கொள்ளாமல் எல்லாம் இறைவனுடையதே என்று அறிந்து அவைகளைத் துறப்பதேயாகும். மனிதன் சேகரித்தவைகளில் மேலானது புத்தி ஒன்றே. அந்த புத்தியை தெய்வ சக்தியாக மாற்றுவதே சித்தி.

ஒருவன் சித்தி பெற வேண்டுமானுல் புத்தியை பெருக்கிக் கொண்டு பின் அதையே துறக்க வேண்டும். புத்தியைப் பெற சத்கர்மங்கள் செய்ய வேண்டும்.

ஸ்ரீ கணேசாங்க நிவாஸினீ
சித்த லக்ஷ்மீ மந்த்ரம்

அஸ்ய ஸ்ரீ சித்த லக்ஷ்மீ மஹாமந்த்ரஸ்ய
கணகருஷி :—ந்ருசத் காயத்ரீ சந்த் :—
ஸ்ரீ கணேசாங்க நிவாஸிநீ மஹாலக்ஷ்மீ தேவதா ।

கரந்நியாஸம்

ஓம் ச்ராம்—அங்குஷ்டாப்யாம் நம :
ஸ்ரீம் ஸ்ரீம்—தர்ஜநீப்யாம் நம :
ஹ்ரீம் ச்ரூம்—மதியமாப்யாம் நம :
க்லீம் ச்ரைம்—அனாமிகாப்யாம் நம :
க்லௌம் ச்ரௌம்—கனிஷ்டிகாப்யாம் நம :
கம் ச்ர :—கரதலகரப்ருஷ்டாப்யாம் நம :

அங்கந்நியாஸம்

ஓம்ச்ராம்—ஹ்ருதயாய நம :
ஸ்ரீம் ஸ்ரீம்—சிரசேஸ்வாஹா
ஹ்ரீம்ச்ரூம்—சிகாயைவஷட்
க்லீம் ச்ரைம்—கவசாயஹூம்
க்லௌம் ச்ரௌம்—நேத்ரதிரயாய வௌஷட்
கம்ச்ர :...அஸ்த்ராயபட்
பூர்புவஸ்ஸுவரோம் இதி திக்பந்த :

தியானம்

முக்தாபாம் திவ்யவஸ்த்ராம் ம்ருகமத திலகாம்புல்ல கல்ஹார மாலாம்। கேயூரைர் மேகலாத்யைர் நவமணி கசிதைர் பூஷணைர் பாஸமானும் । கர்பூரா மோத வக்த்ராம பரும்ருதக்ருபா பூர்ண நேத்ரார விந்தாம் । ஸ்ரீ லக்ஷ்மீம் பத்மஹஸ்தாம் ஜிதபதி ஹ்ருத யாம் விச்வ பூத்யை நமாமி.

லம்இத்யாதி பூஜா—

மூலமந்திரம்

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம் கம் நமோ பகவதி மஹா லக்ஷ்மீ வர வரதே ஸ்ரீம் விபூதயே ஸ்வாஹா ।

ஹ்ருதயாதி நியாஸம் பூர்புவஸ்ஸுவரோமி திதிக்விமோக : தியானம்.

லம்இத்யாதி பூஜா ஸமர்ப்பணம்(இந்த சித்த லக்ஷ்மீ மந்த்ரம் ஐச்வர்ய ப்ரதானம்.)

காணுபத்யம் 4

அவ்யா க்ருத பிரும்மணோ குணே
சஸ்ய சரீரே நாபிர் பிரும்மா
முகம் விஷ்ணு நேத்திரம் ருத்ர ஃ
வாம பார்ச்வம் சக்தி ஃ தக்ஷிணம் சூர்ய ஃ
ஆத்மா ஸமிதா மய ஃ

[கணபதியினுடைய நாபி பிரும்ம ஸ்வரூபம், முகம் விஷ்ணு ஸ்வரூபம் நேத்ரம் சிவஸ்வரூபம் இடது பாகம் சக்தி, வலதுபாகம் சூரியன் என்றும் இந்த சுலோகம் வருணிக்கிறது. கணபதியை பிரதானமாக வழிபடுபவர்களே காணுபத்யர்கள்.]

ஆதி சங்கரர் இதர ஸ்துதிகளைச் செய்யுமுன் கணேச பஞ்சரத்னம் இயற்றினார். 'முதாகரத்த மோதகம்' என்ற மிகச் சிறந்த சுலோகத்தை அஷ்ட ப்ராஸத்துடனும் ப்ராஸானு ப்ராஸத்துடனும் எட்டாவது எழுத்தில் 'கம்' என்ற எழுத்தையும் அமைத்து அதனால் விநாயகரே ''கம் பிரும்மா'' என்ற தத்துவத்தை விளங்கி அருமையான வ்ருத்தத்தில் சங்கீத முறையில் பாடும்படி அமைத்திருக்கிறார்.

ஆதிசங்கரர் கைலாயத்தில் கணபதியை தரிசித்து அங்கு நடத்த விருத்தங்களை பஞ்சரத்னமாக அமைத்துள்ளார். இது முக்தி கணேச ஸ்தோத்திரமாகும். கணேச புஜங்கம் நிருத்த கணபதியைப் பற்றியதாகும்.

கணபதியை உபாஸிக்கும் பக்தர்களுடைய மனதில் நீர் நிலம் விசும்பு தீ காற்று என்ற ஐந்து பூதப்பொருளின் அதிபதியாகவும் நிர்க்குண பிரும்மத்தின் வடிவமாகவும் சகலத்தையும் தம் முள் அடக்கிக் கொண்ட 'ஓம்' கார ஸ்வரூபியாகவும் விநாயகப் பெருமான் வீற்றிருக்கிறார்'' என்று ஆதி சங்கரர் தன் காணுபத்ய விளக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

நவத்துவாரமுள்ள தேகம் என்கிற இக்கோட்டையில் ஒவ்வொரு அங்கத்திற்கும் ஒரு தேவதை அதிர்ஷ்டான தேவதையாக விளங்குகிறது. அந்த அந்த தேவதைகளின் சக்தியால்தான் நமக்கு பேசவோ சிரிக்கவோ முடிகிறது. கண் இமைப்பதும் கண் சொடுக்குவதும் அந்தந்த தேவதையின் அருள் தான். மூலாதாரத்தின் அதிதேவதை மகா கணபதி.

கணபதியை வணங்குபவர் மற்ற தெய்வங்களை துதிக்க வேண்டியதில்லை, ஆனால் பிற தெய்வங்களை வணங்குபவர் முதலில்

கணபதியை வழிபட வேண்டும். இது கணபதிக்குரிய தனிப்பட்ட மகிமையைக் காட்டுகிறது.

நவக்கிரகங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒருசக்தி உண்டு. ஒவ்வொரு கிரகத்தையும் வேண்டிக் கொள்வதைவிட விநாயகரை வழிபட்டால் எல்லா குறைகளும் நீங்கி விடும். விநாயகர் நவசக்தி படைத்தவர். அதனுல் அவருக்கு ''நவசக்தி விநாயகர்'' என்ற பெயரும் உண்டு.

ராவண சம்ஹாரத்திற்குப் பின் ராமர் பிரும்மஹத்தி தோஷத்தைப் போக்கி கொள்ள ராமேஸ்வரத்தில் கணபதியை பூஜித்த பின்னரே சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து தோஷம் நீங்கப் பெற்ருர். இந்த விநாயகருக்கு ''சித்த லக்ஷ்மி விநாயகர்'' என்று பெயர். ராமேஸ்வரம் ஆலயத்தில் துவஜஸ்தம்பத்திற்கருகில் 18 கரங்களுடன் உள்ள இவரை தரிசிக்கலாம்.

காணுபத்யர்களின் கைலாசம்

கணபதியையே முக்கியமாக வழிபடும் காணுபத்யர்களின் கைலாசம் ''மயூரேசம்'' என்ற தலமாகும். இது பூனு—பெங்களூர் ரயில் பாதையில் ஜெஜூரி ரயில் நிலயத்திலிருது பத்து மைலில் உள்ளது. இங்கு ஸ்ரீமகா கணபதி பூர்ண கலையுடன் கோயில் கொண்டிருக்கிருர். இத்தலம் கணபதிஆராதனைக்கு விசேஷமாகக் கருதப்படுவதற்குக் காரணம் காணுபத்யர்களின் கைலாசமாக இது விளங்குபவது தான். இந்த கணபதிக்கு ஸ்வானந்தேசர் என்ற பெயர். இவர் சுயம்பு மூர்த்தி. பக்கத்தில் பஞ்சலோகத்திலானு சித்தி, புத்தி, தேவிகள் இருக்கிருர்கள். இந்த ஆலயத்தில் திசைக்கு ஒருவராக எட்டு கணபதிகள் (வக்ரதுண்டர், ஏகதந்தர், மகோதரர், கஜானனர், லம்போதரர், விகடர், விக்னராஜர், தூம்ரவர்ணர்) இருக்கிருர்கள். இத்தலம் அஷ்ட கயா க்ஷேத்திரங்களில் ஒன்று. கோவிலை அடுத்து ஒடும் கராநதி ஓங்கார ரூபத்தில் அமைந்திருப்பது தனி விசேஷம்.

ஆதிசங்கரர் தனது குரு கோவிந்த பகவத் பாதாளை சந்திக்கு முன்பும், பாரத தேசமெங்கும் பாதயாத்திரையை மேற்கொள்ளு முன்பும் இந்த மயூரேசச் கணபதியை தரிசித்து ஆராதித்திருக்கிருர். கணபதியின் ஆவரண தேவதைகளுக்கு இத்தலத்தைச் சுற்றி ஆலயங்கள் அமைந்திருப்பது மற்ருெரு விசேஷம்.

கிழக்கில் இரண்டு மைலில் புத்திதேவியும், அதிலிருந்து கிழக்கே இரண்டு மைலில் பைரவரும், அங்கிருந்து இரண்டு மைலில் லக்ஷ்மி நாராயணரும், துவிபுஜ விநாயகரும் முக்தி தேவியும் கோயில் கொண்டிருக்கின்றனர்.

மேற்கே மூன்று மைலில் சித்திதேவியும் அங்கிருந்து மூன்று மைலில் கீர்த்திவாசரும், அங்கிருந்து மூன்றுமைலில் துவிபுஜ கணபதியும் மார்ஜார்யை சக்தியும் கோவில் கொண்டுள்ளனர்.

தெற்கில் இரண்டு மைலில் மோதப்ரமோதரும், அங்கிருந்து இரண்டு மைலில் நீலகண்டரும், அங்கிருந்து மூன்று மைலில் உமாமகேச்வரரும், துவிபுஜ விநாயகரும்,விரஜா சக்தியும் கோயில் கொண்டுள்ளனர்.

வடக்கில் இரண்டு மைலில் முக்தா தேவியும், அங்கிருந்து இரண்டு மைலில் முக்தேச்வரரும், அங்கிருந்து இரண்டு மைலில் மஹீவராக சூர்யனும், ஆஸ்ரேய சக்தியும் கோயில் கொண்டுள்ளனர்.

இந்த நான்கு திசைகளிலும் சுக்லப் பிரதமை முதல் சதுர்த்தி வரை ஒவ்வொரு நாளும் யாத்திரை செய்து உபவாசமிருந்து பஞ்சமியன்று ஸ்வானந்தேசரை ஆராதிப்பது விசேஷமாகக் கருதப்படுகிறது. இந்த யாத்திரையால் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் முதலிய நான்கு புருஷார்த்தங்களும் சித்தியாகும்.

பம்பாயிலிருந்து 52 மைலில் ''டிட்வாலா'' என்ற ஒரு ஊர் இருக்கிறது. இது மிகப் புராதனமான ஆலயம். இங்கு கல்யாண விஷயமாகப் பிரார்த்தனை செய்து கொள்பவர்களுக்கு சீக்கிரமே கல்யாணம் நடைபெறுகிறதாம். ஆகவே இவர் கல்யாண கணபதி என்றே அழைக்கப்படுகிறார்.

குஜராத்தில் குடைக் கோவில் உள்ள கணேசரை ஜைனர்களும் வணங்குகிறார்கள்.

ஜான்ஸிக்கருகில் ஐந்தாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட டேஹ்ரா ஆலயத்தில் கணபதிக்குத் தனி சந்நிதி உள்ளது.

அஷ்ட கணபதி க்ஷேத்திரங்கள்

மயூரேசம்—ஸ்வானந்தேசர்.
ஹளபேடு—நர்த்தன கணபதி.
காசி—டுண்டி விநாயகர்.
பாலி—வல்லாள கணபதி.
விஜயபுரி—விக்னராஜர்.
தேவூர்—பிரும்ம வரதர்.
மட்—வரத விநாயகர்.
சித்தடேக்—மதுகைடப வரதர்.

இந்த எட்டு க்ஷேத்திரங்களும் வடக்கிலேயேயுள்ளன.

மகாராஷ்டிரர்கள் வழிபடும் கணபதி

கல்கத்தாவில் எப்படி காளிபூசை கொண்டாடுகிறார்களோ அதைபோல மிகப் பெரும் அளவில் மிக பக்தி சிரத்தையுடன் மகாராஷ்டிரர்கள் கணபதியை வழிபடுகிறார்கள். மக்களிடையே யுள்ள இந்த பக்தி வேகத்தை தேசபக்தி வேகமாக்க லோக

மான்ய பாலகங்காதர திலகர் கணபதி விழாவை ஒரு தேசீய விழாவாக கொண்டாட ஏற்பாடு செய்தார்.

கணபதியின் உருவங்களை பெரிய அளவில் விதவிதமாக அமைப்பார்கள்.

நின்று கொண்டிருக்கும் கணபதி, மூஷிக வாகன கணபதி, பத்மபீட கணபதி, உமா மகேசுவர கணபதி, அம்மாவின் துடை மேல் அமர்ந்திருக்கும் கணபதி, மாதங்கீ ஸமேதஞன கிருகஸ்த கணபதி, அசுர ஸம்ஹார கணபதி, வேதவிநாயகர், ரதாருடரான கணபதி இப்படியெல்லாம் எத்தனையோ வகைகளில் பிள்ளையாரைக் கலைஞர்கள் அமைப்பார்கள்.

கடைவீதிகளை ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு வந்தால், இன்னும் பல விநோதமான கணபதிகளையும் காணலாம். காந்திக்குல்லாய் அணிந்து பஞ்சகச்சம் கட்டி ஜிப்பா தரித்த பிள்ளையார், பெரிய தலைப்பாகை கட்டிச் சால்வை போர்த்த மகாராஷ்டிர கணநாயகர், வெறும் தலையுடன் விளங்கும் நாகரிக கணேசர் இப்படியும் எத்தனையோ பார்க்கலாம். சில கலைஞர்கள் நம் நாட்டுத் தேசபக்தர்களை மனத்தில் வைத்துக்கொண்டு, அவர்களுடைய சாயலில் கணபதியைத் தயாரிப்பதும் உண்டு.

குஜராத்தி, மராட்டி, மதராசி, மைசூர்க்காரர் இப்படி யாராக இருந்தாலும், ஒவ்வொருவருடைய குடும்பத்திலும் ஆண் பெண் குழந்தை குட்டி அடங்கலும் சேர்ந்து சென்றே கடையில் பிள்ளையாரைப் பொறுக்கி எடுத்து வாங்கிக்கொண்டு வருவார்கள். இதுவே ஒரு பெரிய விழாப்போல் இருக்கும். மாதுங்கா, தாதர், செளபாத்தி, கிர்காம், கலபாதேவி இந்த இடங்களிலெல்லாம் ஏராளமான மக்கள் கும்பலாய்க்கூடி வெளியே கடைவீதிக்குப் போய் வருவார்கள்.

மனத்துக்கு உகந்த மூர்த்தியை வாங்கியபின், கொட்டு மேளத்துடன் வீட்டுக்கு எடுத்து வந்து மண்டபத்தில் அமர்த்துவார்கள். மண்டபத்தின் உள்ளும் புறமும் சிங்காரிக்கும் வேலையை வீட்டுத் தலைவரே ஏற்பார். சில குடும்பங்களில் வீட்டுத் தலைவியின் மீதே இந்தப் பொறுப்பு விழுவதும் உண்டு.

வீடுதோறும் விநாயக சதுர்த்தியை வெகு அழகாகக் கொண்டாடுவார்கள். விசாலமான கட்டிடங்களிலும், வீதிகளிலும், கடைகளிலும், பெரிய பெரிய மண்டபங்கள் கட்டிப் பொதுவாகவும் கணபதியைப் பூஜிப்பார்கள். மில்களிலும் தொழிற்சாலைகளிலும் கணேசருக்கு மண்டபம் கட்டுவார்கள். வித்தியா மந்திர்களில் வித்தியா கணபதியை அமைப்பார்கள். கிளப்கள், மைசூர் அசோசியேஷன், ஆஸ்திக சமாஜம், மகாராஷ்டிர சங்கம்—இப்படிப் பல இடங்களிலும் பிள்ளையார் பூஜை நடைபெறும்.

நாம் சாதாரணமாகப் பண்டிகைக்கு மறு நாள் மாலையில் பிள்ளையாரை விசர்ஜனம் செய்கிறோம். பம்பாயிலோ எந்த வீட்டிலும் குறைந்தது ஏழு நாளாவது பிள்ளையாரை வைத்திருப்பார்கள். ஏழு நாளைக்கு மேலும் பத்து நாளோ பதினைந்து நாளோ வைத்துக் காலை மாலையில் பூஜிப்பதுண்டு.

விழாவின் கடைசி நாளில், வேத பாராயணம், ஹோமம் எல்லாம் இனிதே நடைபெறும். மங்கள ஆரத்தி எடுத்து, சகல மரியாதைகளுடனும் மகாகணபதியைக் கடலில் கொண்டுபோய் விட்டு வருவார்கள். வழி அனுப்பும் இந்த நிகழ்ச்சியை விழாவின் சிகரம் என்று சொல்லலாம். முக்கியமான தெருக்களி லெல்லாம் மக்கள் கூட்டங் கூட்டமாகக் குழுமி இருப்பார்கள். எல்லா ஜாதி ஜனங்களும் குழந்தை முதல் பெரியோர் வரையில் சௌபாத்தி, மஹீம், ஜுஹு போன்ற கடற்கரைகளில் நிறைந்து, ஒரே மூச்சில் ஜயகோஷம் செய்துக்கொண்டிருப்பார்கள். கொட்டுமேளம் முழங்க, பஜனை செய்துகொண்டு, அலங்கரித்த தள்ளு வண்டியிலோ, தேரிலோ பிள்ளையாரை அமர்த்தி ஊர்வலமாய்க் கொண்டுபோவார்கள். பையன்களின் தலைமேல் ஆசனத்தோடு அமர்ந்து செல்லும் கணபதி உருவங்களின் எண்ணிக்கையைக் கணக்கிட முடியாது. நாலணாவுக்கு வாங்கிய பிள்ளையாரிலிருந்து மிகப்பெரிய பிள்ளையார்வரைக்கும் பல உருவங்களைக் காணலாம்.

சமுத்திர ராஜனிடம் கணபதியை ஒப்படைத்துவிட்டுத் திரும்பும்போது ஒரு மாதிரியாகத்தான் இருக்கும். பல சிறு குழந்தைகள் கணபதியை விட்டுப் பிரியமாட்டாமல் அழுவதும் உண்டு. பெரியவர்களுக்கும் நெஞ்சு அடைக்கும். எவ்வளவோ ஆசையுடன் முழுக் கலைத் திறமையையும் காட்டி உருவாக்கிய பிள்ளையாரை உற்சாகத்துடன் கடை கடையாக அலைந்து திரிந்து வீட்டுக்கு வாங்கிவந்த கணபதியை, இட்டிலி, கொழுக் கட்டை நிவேதனத்துடன் பூஜை செய்து கொண்டாடிய கணேசரை, வைபவமாக ஆரத்தி எடுத்து ஊர்வலமாகக் கொண்டு சென்று, கடைசியில் கடலில் விட்டு வரும் வழக்கம், நம் இந்திய நாட்டுத் தியாகப் பண்பையே எடுத்துக் காட்டுவதாகத் தோன்றுகிறது.

1893-ல் கணபதி விழாவுக்கு லோகமான்ய திலகர் புத்துயிர் அளித்தார். பிரிட்டிஷ் சர்க்காருக்கு இது கண்ணை உறுத்தியது. மகாராஷ்டிராவில் 200 இடங்களுக்குமேல் கணபதி க்ஷேத்திர மாகப் போற்றப்படுகின்றன. கணேச பாகவதம் 12 ஸ்காந்தங் களும், 21000 பாடல்களும் கொண்டது. ஆனால் அந்நூல் கிடைப்பதில்லை.

யோகீந்திர மடத்தின் பணி

ஆதிசங்கரர் அருளிய காணபத்ய சாஸ்திரம் கணபதி உபாசகர்களிடம் மட்டுமே நீண்ட காலம் ஏகபோகமாக இருந்து வந்தது.

இதை வெளிக் கொண்டுவந்து பிரசாரம் செய்த பெருமை மயூரேசத்திலுள்ள யோகீந்திர மடத்தையே சேரும். (பூனாவி லிருந்து 36 மைலிலுள்ளது மயூரேசம்). இம்மடத்திலிருந்து காணுபத்ய ஏட்டு பிரதிகள் களவாடப்பட்டு விட்டன.

அக்காலத்தில் தமிழ் நாட்டில் தஞ்சை ஜில்லாவில் க்ஷேத்ர பாலபுரம் என்ற கிராமத்தில் பிரும்மஸ்ரீ சிவராம கிருஷ்ண சாஸ்திரிகள் என்பவர் வசித்து வந்தார். இவருக்கு சங்கரன், மகாதேவன், சாம்பசிவம், நீலகண்டன் என நான்கு புதல்வர்கள். இவர்களில் சாம்பசிவம் என்பவர் ஒரு சமயம் சுவாமிமலை சென்றிருந்தார். அங்கு இவர் திருவெண்காட்டுக்குச் செல்லும்படி உள்ளுணர்வு தோன்றியது. அதன்படியே இவர் அங்கு அகோர வீரபத்திரர் சந்நிதியை அடைந்து தரிசித்ததும் மூர்ச்சையானுர். அகோர வீரபத்திரரே இவருக்கு அந்நிலையில் மகா கணபதி மந்திரத்தை உபதேசித்தார்.

இவர் காணுபத்ய சாஸ்திரம் முழுவதையும் கிரந்தத்தில் எழுதினுர். கணேசஅத்வைதம் சம்பந்தமாகவுள்ள கர்ம காண்டம், ஞான காண்டம், உபாசன காண்டம், கணேச ஞான சாகரம், கணேச யோக சாகரம், கார்க்கிய கல்ப சூத்திரம், கணேச உபநிஷத் முதலியவைகளை இயற்றினுர்.

தன் ஜீவிய காலத்திலேயே இந்த கிரந்தங்களை சாம்பசிவ சாஸ்திரிகள் ஸ்ரீ யோகீநதிர மடத்திற்கு அளித்தார்.

கணபதி சக்ர ஆவரண தேவதைகள்

குரு பரம்பரை

மகாகணபதியின் நேர் சிஷ்யர் கணக்ரீடர். இவர் சிஷ்யர் விகடர். இவர் சிஷ்யர் விக்ன விநாயகர். கணபதியை வழிபடு வதில் குரு பரம்பரை இது. இவர்கள் எல்லோருமே மஹா கணபதியின் வடிவமானவர்கள்.

இருப்பிடம்: பிள்ளையார் கோயில் கொள்ளாத இடம் எது? ஆற்றங்கரை, குளத்தங்கரை, முச்சந்தி, நாற்சந்தி ஆகிய எல்லா இடங்களையும் பிடித்துக் கொண்டிருக்கிறுர். கணபதி ஆற்றங் கரை, குளத்தங்கரை இவைகளில் அமர்ந்துள்ளது குறித்து திருமதி சௌந்தரா கைலாஸம் புனைந்துள்ள கவிதையாவது·

கும்மாள மிட்டபடி பெண்கள் கூட்டம்
குளிக்கின்ற குளக்கரையில் இருப்பதெல்லாம்
அம்மாவைப்போல ஒரு பெண்ணைத் தேடி
அடைதற்கு என்றுரைக்கின்றுர்! அல்ல! அல்ல!

எம்மாதைக் கண்டாலும் அன்னை போல
இருப்பதனுல் தனிக்கட்டையாகி விட்டான்
சும்மாவே இருக்கிருன் நமக்கும் அந்த
சுகமடையும் இரகசியத்தைச் சொல்கின்ருனே.

வடநாட்டில் சில இடங்களில் விநாயகர் சுப்பிரமணியத்தின் தம்பியாகக் கருதப்படுகிருர். நேபாளத்தில் பெண்கள் தங்களுக்கு தகுந்த கணவன் கிடைப்பதற்காக செவ்வாய்க் கிழமைகளில் உபவாசம் இருந்து கணபதியை ஆராதிக்கும் வழக்கம் இருந்து வருகிறது.

கணபதி சகஸ்ரநாமத்தில் அவரை சிந்தாமணி த்வீபபதி என்று குறிப்பிடப்படுகிறது. அங்கு கல்பக மரத்தடியில் ரத்ன சிம்மாசனத்தில் வீற்றிருக்கிருர் என்று கூறப்பட்டிருக்கிறது.

இந்த ரத்ன சிம்மாசன பீடத்தின் சக்திகள்:—தீவ்ரை, ஜ்வாலினீ, நந்தை, போகதை, காமதாயினீ, உக்ரை, தேஜோவதி, ஸத்யை, விக்ன விநாசினி இந்த ஒன்பது சக்திகள் தாமரைப் பூவின் எட்டு இதழ்களிலும் மொட்டில் உள்ளவர்கள்.

இத்தாமரைப் பூவில் கிழக்கிலிருந்து ஐந்து இதழ்களில் 'க' முதல் 5 எழுத்து, 'ச' முதல் 5, 'ட' முதல் 5, 'த' முதல் 5, 'ப' முதல் 5 (ஆக 25)

ஆருவது, ஏழாவது, எட்டாவது இதழ்களில் முறையே ய, ர, ல, வ என 4. ஶ, ஷ, ஸ என 3. ஹ, க்ஷ என 2 (ஆக 9)

பூவின் உள்ளே மொட்டைச்சுற்றி தொடர்புள்ள இடங்களில் ஒரு இடத்திற்கு 2 வீதம் 'அ' முதல் அகரம் வரை 16 உயிர் எழுத்துக்கள்.

இவ்விதம் 50 மாத்ருகா அக்ஷரங்கள் நிறைந்த தாமரையை இடமாகக் கொண்டவர் (லிபி பத்மாஸனுதார:). இந்த எட்டிதழ் தாமரை பூவின் மொட்டின்மேல் சூர்ய மண்டலம், சந்திர மண்டலம், அக்னி மண்டலம் அமைந்துள்ளது.

தீவ்ரா முதலிய ஒன்பது பீட சக்திகள்:

50 மாத்ருகா அக்ஷரங்கள் கொண்ட எட்டு இதழ்தாமரை.

அதன் நடுவே சூரியன், சந்திரன், அக்னி ஆகிய மண்டலங்களின் மேல், பத்து கைகளுடன் வரமகா கணபதி.

குமார ஸம்ஹிதா தந்திரம், உட்டாமரேச தந்திரம் என்ற நூல்களில் கணபதி பற்றி மந்திரம் தந்திரம் பரிவார தேவதைகள் ஜபஹோம் தர்ப்பணங்கள் முதலியவை குறிப்பிடப்பட்டுள்ளன.

ராகவ சைதன்யா என்ற யதீஸ்வரர் 16 சுலோகங்கள் கொண்ட மகா கணபதி ஸ்தோத்திரம் செய்திருக்கிறார். இது விநாயகரை பரப்பிரும்மம் என்கிறது.

மகா கணபதியுடன் எந்த எந்த தேவதைகள் இருப்பதாக தியானிக்கவேண்டும் என்று ஒரு சுலோகம் கூறுகிறது. இதிலுள்ள பொருள் கணபதி பீஜ மந்திரத்திற்கு தக்க விளக்கமாக உள்ளது.

ஆவரண தேவதைகள்

ரமா ரமேச பூர்வாங்க தக்ஷிணேமா மஹேஸ்வர ::
மஹீ வராஹ வாமாங்க : ரதி கந்தர்ப்ப பச்சிம :

இந்த நான்கு நாமாக்கள் ஐந்து ஆவரணங்களுடன் செய்யப்படும் மகா கணபதி பூஜையில் அவரைச் சுற்றி நான்கு பக்கங்களில் இருக்கும் ''முதலாவது ஆவரண'' தேவதைகளை வருணிக்கின்றன. கிழக்கில் வில்வமரத்தடியில் லக்ஷ்மி நாராயணர். தெற்கில் ஆலமரத்தடியில் பார்வதி பரமேஸ்வரர். வடக்கில் ப்ரியங்கு மரத்தடியில் பூமிதேவி வராஹர். மேற்கில் பிப்பல மரத்தடியில் ரதி மன்மதன்.

இரண்டாவது ஆவரணம்:—ஆறு கோணங்களில் ஆமோதாதி ஆறு கணபதிகளும் அவர் மனைவிகளும்.

1. ஆமோத கணபதி—ருத்திர தேவி.
2. ப்ரமோத கணபதி—ஸம்ருத்தி தேவி.
3. ஸுமுக கணபதி—காந்தி தேவி.
4. துர்முக கணபதி—மதனாவதி.
5. விக்ன கணபதி—மதத்ரவா.
6. விக்நக்ருத் கணபதி—த்ராவிணி தேவி.

மகா கணபதியைச் சுற்றி ஆராதனை புரியும் 'தீவ்ரை' முதலிய 6 சக்திகள.

தீவ்ரா சக்தி	ஜ்வாலினீ சக்தி
மோசினீ சக்தி	போகதாயினீ சக்தி
காமினீ சக்தி	வசுந்தரா சக்தி

ஆறு கோணத்திற்கு தெற்கிலும் வடக்கிலும் சங்கநிதி, பத்மநிதி வழிபடுகிறார்கள்.

குரு மண்டலம்

கணக்ரீடர் முதலான குல குருக்கள் 9.
அசானந்தர் முதலிய வித்யா குருக்கள் 9.
விநாயகர் தொடங்கி சந்தான குருக்கள் 20.
(இதில் திவ்யௌகர், சித்தௌகர், மானௌகர் அடங்கும்.)

கபிலர் முதல் வியாஸர் வரை மகரிஷி குருக்கள் 21.

கணகர் முதல் சங்கர பகவத் பாதர் வரை சம்பிரதாய குருக்கள் 42.

சங்கராச்சாரியார் முதல் தன் குருநாதன் வரை குருநாதர்கள் (இதுபற்றி வித்யாரண்ய சுவாமிகள் இயற்றிய வித்யார்ணவம் என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.)

3-வது ஆவரணம் :

அங்க தேவதைகள்:—ஹிருதய ரூப தேவதை—ஆஹவனீயம் முதலிய அக்னி, சிரோரூப தேவதை—ஈசானன், சிகா தேவதை—இந்திரன், கவச தேவதை—பிராணன், நேத்திரத் திரயம்—அக்னி, சூரியன், சந்திரன், அஸ்திர தேவதை—அங்குசம்.

4-வது ஆவரணம் :

எட்டு பிராண சக்திகள்:—ஜயா, விஜயா, அஜிதை, நித்யை, விலாஸினி, சௌண்டீ, அனந்தா, ஸுமங்கலா.

பிரும்ம சக்திகள் 3:—இச்சா, கிரியை, ஞானம்.

கணேச சக்திகள் 4:—ஸுபகா, லலிதா, காமினீ (காமகலா), காமேசி (காமமாலினி).

5-வது ஆவரணம்:—வாகன சக்திகளும், அஸ்திர சக்திகளும்.

திக்பாலகர்கள்:—வருணன், வாயு, நிருதி, யமன், இந்திரன், அக்னி, சந்திரன், ஈசானன்.

ஸப்தாவரண கணபதிகள்

காசி மாநகரில் ஸப்தாவரணத்தில் 56 கணபதிகள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளனர்.

முதல் ஆவரணம்:—டுண்டி, துர்க்கை, அர்க்க, பிரஸன்ன, பீம, சுந்தரகணபதிகள். 6

2-வது ஆவரணம்:—சித்ரூப, லம்போதர, கூடதந்த, சலாடக, குலப்பிரிய, சதுர்த்தி, பஞ்சமி, முண்ட, சசிமுக, விபங்க, நிஜ, ராஜபுத்ர, பிரணவ, உபதாய கணபதிகள். 14

3-வது ஆவரணம்:—வக்ரதுண்ட, ஏகதந்த, த்விமுக, பஞ்சமுக, ஹேரம்ப, விக்னராஜ, வரத, மோதகாய கணபதிகள். 8

4-வது ஆவரணம்:—ஏகோபயப்ரத, சிங்கமுக, கூர்ணிதாக்ஷ, க்ஷிப்ரபிரசாத, சிந்தாமணி, தந்தவக்ர, அயிகண்டி, ஊர்த்வாண்ட முண்ட கணபதிகள். 8

5-வது ஆவரணம்:—மணிகர்ண, ஆசாரசிருஷ்டி, கஜகர்ண, கண்டா, ஸுமங்கல, மந்திர கணபதிகள் 6

6-வது ஆவரணம்:—மோதக, ஸுமுக, துர்முக, கண, அமர, ஆக்கினே, துவார, அவிமுக்த கணபதிகள். 8

7-வது ஆவரணம்:—ஆமோத, பாகீரத, ஹரிச்சந்திர, கபர்த்தி, பந்து, கனக கணபதிகள். 6

5

மிக சுலபமான வழிபாடு

ஏக தந்தம் ஸூர்ப கர்ணம் கஜவக்ரம் சதுர்புஜம்
பாசாங்குசதரம் தேவம் த்யாயேத் சித்தி விநாயகம்
உத்தமம் கணநாதஸ்ய வ்ரதம் ஸம்பத்கரம் சுபம்
பக்தானும் இஷ்ட தாதாரம் சர்வ மங்கள தாரகம்
த்யாயேத் கஜானனம் தேவம் தப்த காஞ்சன சன்னிபம்
சதுர்புஜம் மகா காயம் ஸர்வாபரண பூஷிதம்.

தெருமுனை, குளக்கரை, ஆற்றங்கரை, கோயில், கொட்டகை எங்கும், கொடுத்த இடத்தில் கொற்றம் நடத்தும் மூர்த்தி இவர். பூவெடுத்தால் புன்னகைக்கும் கடவுள் கூட்டத்தில் புல்லெடுத்தால் போதும் பெரு மகிழ்ச்சி கொள்வார்.

குற்றம் பார்க்காமல் குணத்தைப் பார்த்து குடும்பத்தில் ஒருவராய் எழுந்தருளியவர். பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் கலந்தளித்த ஔவையார் இவருக்கு அவலும் தந்தார்; அகவலும் தந்தார்.

இவர் உருவம் செய்ய வேண்டுமே என்ற கவலை வேண்டியதில்லை. பிடித்து வைத்தால் அது பிள்ளையாராகிவிடும். மஞ்சள், வெல்லம், எது கிடைத்தாலும் பிடித்து வைத்து பிள்ளையார் பூஜை செய்து விடலாம். பிள்ளையார் சதுர்த்தியன்று களிமண்ணால் பிள்ளையார் செய்து பூஜிப்பதே விசேஷம். பிறந்த மண்ணை ஒவ்வொருவரும் தெய்வமாகக் கொண்டாட வேண்டும் என்ற தேசபக்தி தத்துவமும் இவர் வழிபாட்டில் அடங்கியுள்ளது. மூலாதாரம் பிருத்வி அம்சம். பிருத்வி என்றால் மண். ஆகவே களிமண்ணில் உருவம் செய்வது விசேஷம்.

விநாயகர் உருவை வெள்ளை எருக்க மரத்தில் செய்வது மிக விசேஷம். இதன் செடி சாதாரண எருக்கன் செடி போலவே இருக்கும். இதன் முற்றிய வேரை தேர்ந்தெடுக்க வேண்டும். வேர் காயக்காயத்தான் அதில் வேலை செய்ய முடியும். வெள்ளெருக்கில் விநாயகர் மட்டுமே செய்யப்படுகிறது.

விநாயகரை வழிபடுவதோ எளிது. ஆனால் அவரால் பெறக் கூடும் வரமோ பெரிது. விக்னங்கள், இவரை வழிபட்டால் விலகி விடும். ''வெள்ளைக் கொம்பன் ஐங்கரனைத் தொழ துள்ளி ஓடும் தீய வினைகளே.''

மகா கணபதி உபாஸனைக்கு 21 பத்திரங்கள்:—முல்லை இலை, கரிசிலாங்கண்ணி இலை, வில்வம், வெள்ளறுகம்புல் (வேரோடு

கூடியது) இலந்தை இலை, ஊமத்தை இலை, வன்னி இலை, நாயுருவி இலை, கண்டங்கத்திரி இலை, அரளி இலை, எருக்கிலை, மருதை இலை, விஷ்ணுக்கிரந்தி இலை, மாதுள இலை, தேவதாரு இலை, மருவு, அரச இலை, சாதிமல்லிகை இலை, தாழை இலை, அகத்திக்கீரை இலை, தவனம்.

விநாயக அனுக்கிரகத்தின் 21 விதமான பலன்:—தர்மம், பொருள், இன்பம், சௌபாக்கியம், கல்வி, பெருந்தன்மை, நல்வாழ்வுடன் கூடிய மோக்ஷம், முகத்தில் பால் வடியும் தன்மை, வீரலக்ஷ்மி கடாக்ஷம், விஜயலக்ஷ்மி கடாக்ஷம், எல்லாரும் தன்னிடம் அன்பாக இருக்கும் தன்மை, குடும்பத்தில் கர்ப்ப ரக்ஷை, மக்கட்பேறு, நுண்ணறிவு, நற்புகழ், சோகத்தினால் வாடாத தன்மை, அசுபங்களை அகற்றல், தன் வாக்குக்கு எதிர்வாக்கு அடங்கிப் போதல், கோபங்கொண்டவர்களை சாந்தப்படுத்தும் தன்மை, பிறர் ஏவும் ஆபிசாரம் அடக்குதல், துயர் தீர்த்தல்.

அருகம்புல் ஏன் ?

விநாயகர் பூஜைக்கு அருகம்புல் (தூர்வை) மிகவும் ஏற்றது. விநாயகர் ஞானத்தீ. அருகம்புல்லும் மிக உஷ்ணமானது. அகலன் என்ற அசுரனை விழுங்கியபோது அவன் வயிற்றுள் சென்று தஹித்தான் என்றும், அதை சமனப்படுத்தவே அருகம்புல்லை (உஷ்ணம் உஷ்ணேன சாந்தி) தரிக்கிறார்.

தலையில் குட்டிக்கொள்வதும், தோப்புக்கரணம் போடுவதும் அவருக்கு மிகப் பிரியமானது.

பிள்ளையாருக்கு எதிரே நின்று தோப்புக்கரணம் போடுகிறோமே அதை நமக்கு எல்லாம் காட்டியவர் மஹாவிஷ்ணுதான் என்று ஒரு கதை இருக்கிறது. ஒரு சமயம் மகா விஷ்ணுவினுடைய சக்கரத்தைப் பிடுங்கிக்கொண்டு அவரது மருமானான பிள்ளையார் தம் வாயில் போட்டுக்கொண்டு விட்டாராம். பிள்ளையாரிடமிருந்து பிடுங்குவது என்றால் அது முடியாது. அவர் மிகவும் பலம் உடையவர். அதட்டி மிரட்டி வாங்கவும் முடியாது. ஆனால் அவரைச் சிரிக்க வைத்துச் சந்தோஷத்தில் அவர் வாயிலிருந்து சக்கரம் கீழே விழுந்தால் எடுத்துக்கொண்டு விடலாம் என்று மஹாவிஷ்ணுவுக்குத் தோன்றியதாம். உடனே நான்கு கைகளாலும் காதுகளைப் பிடித்துக்கொண்டு ஆடினாராம். விநாயகர் விழுந்து விழுந்து சிரித்தார். சக்கரம் கீழே விழுந்தது. விஷ்ணு எடுத்துக்கொண்டு விட்டார்.

''தோர்பி: கர்ணம்'' என்பதே தோப்புக்கரணம் என்று மாறியது. ''தோர்பி:'' என்றால் ''கைகளினால்'' என்று அர்த்தம். 'கர்ணம்' என்றால் காது. ''தோர்பி: கர்ணம்'' என்றால் கைகளால் காதைப் பிடித்துக் கொள்வது.

குட்டிக் கொள்வதன் தாத்பர்யமாவது:—நெற்றிப் பொட்டில் குட்டிக் கொள்வதால் அங்கேயுள்ள அமிர்த கலசத்தை எழுப்பி அந்த அமிர்தம், தேகம் பூராவும் பரவுகிறது. தோப்புக்கரணம் மூலாதாரத்திலுள்ள சுஷும்ன நாடியை தட்டி எழுப்புகிறது. இதனுல் உடம்புக்குத் தெம்பும் மனதிற்குத் தெளிவும் ஏற்படுகிறது.

விநாயகர் வழிபாட்டிற்கு கடினமான விதிமுறைகளோ ஆசார நியமங்களோ கிடையாது. அன்பும் நம்பிக்கையும்தான் தேவை.

''போதும் பெருவிடில் பச்சிலை உண்டு
புனல் உண்டு—எங்கும்
ஏதும் பெருவிடில் நெஞ்சு உண்டு அன்றே''

என்றபடி அன்பினுல் மனம் உருகி எவரும் எவ்விடத்தும் எவ்வகையிலும் விநாயகரை எளிதாக வழிபட்டு உய்யலாம்.

விநாயக விரதங்கள்

விநாயகப் பெருமானுக்குரிய விரதங்கள் மூன்று. ஒவ்வொரு வாரத்திலும் வரும் வெள்ளிக்கிழமையும், விநாயக சஷ்டியும், ஒவ்வொரு மாதத்தில் வரும் வளர்பிறை சதுர்த்தியும் ஆகும்.

சிறப்பாக ஆவணி மாதம் வளர்பிறை சதுர்த்தியே மிக முக்கியமானதாகும். விநாயகர் பிறந்தது அன்றுதான்.

வரும் விக்னங்களை வெல்ல பகவான் புத்தியைக் கொடுத்திருக்கிறர். புத்தி சாமர்த்தியம் நம்முடைய சொந்தம் என்று நினைப்பது அகம்பாவமாகும். அப்புத்தியைக் கொடுத்த அவரை பூஜித்து அருள் பெற வேண்டும். அருளுடன் கூடிய புத்திக்கு எதிர் கிடையாது.

விநாயக சதுர்த்தியன்று விநாயகரை வழிபட்டு பின்கண்ட சுலோகத்தைச் சொல்லவேண்டும்.

ஸிம்ஹ: ப்ரஸேந மவதீத் ஸிம்ஹோ ஜாம்பவதா ஹத:।
ஸுகுமாரக மா ரோதீ: தவ ஹ்யேஷ: ஸ்யமந்தக:

விரத சூடாமணி கல்பத்தில் இதைக் கூறவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது.

சதுர்த்தி விரதம்

பிரதி மாதமும் கிருஷ்ண பட்ச சதுர்த்தி பிள்ளையார் வழிபாட்டுக்கு விசேஷம். மாசி மாதம் கிருஷ்ண பட்சம் செவ்வாய்க்கிழமையன்று சதுர்த்தி வருமானுல் அன்றைய தினம் கணபதிக்கு உகந்த ஸங்கடஹர சதுர்த்தி விரதத்தைத் தொடங்குவார்கள். ஒவ்வொரு மாத சதுர்த்தியிலும் சதுர்த்தி விரதம் இருந்து ஏகதந்த ஸ்தோத்திரம், அங்காரக சதுர்த்தி ஸ்தோத்திரம்

இவற்றைச் சொல்லி கணபதியை வழிபடுவதால் எந்த சோதனைகளையும் மீறி முன்னேற இயலும்.

கணேசருடைய பூஜையினுல் அடையக் கூடிய புண்ய லோகத்திற்கு ''ஆனந்த லோகம்'' என்று பெயர். கணேச புஜங்கம் என்ற ஆதிசங்கரர் ஸ்தோத்திரத்தில் ஆனந்தம் என்ற சொல் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சுக்ல சதுர்த்தி திதியின் அதிபதியான தேவி தன்னை அவருடைய இருப்பிடமாக செய்துகொள்ளும்படி வேண்டினுள். கணபதி அவளை அனுக்கிரஹித்துக் கூறியதாவது:

''நான் உனக்கு மத்யானத்தில் தரிசனம் கொடுத்தபடியால் சுக்லபக்ஷ சதுர்த்தியும் மத்யான்னமும் கூடிய சுபதினத்தில் என்னை பூஜிப்பவர்கள் என் அருளைப் பெறுகிருர்கள். சதுர்த்தியில் ஆகார மில்லாமல் என்னைப் பூஜிப்பவர்களுக்கு நான்குவித புருஷார்த்தங் களையும் கொடுப்பேன்'' இதனுல் சதுர்த்தி தேவிக்கு வரதை என்ற பெயர் ஏற்பட்டுள்ளது.

கிருஷ்ண சதுர்த்தியின் அதிபதியான சக்தி கணபதியை வழிப்பட்டபோது அவர் கூறியதாவது:

''சந்திரோதயத்தில் நீ என்னை வழிபட்டதால் கிருஷ்ண சதுர்த்தியும் சந்திரோதயமும் கூடிய காலம் முக்கிய விரதமாகும். அப்போது என்னை பூஜிப்பவர்களுக்கு என் அருள் நிச்சயம் கிடைக் கும். சங்கட சதுர்த்தி விரதம் அனுஷ்டானம் செய்கிறவர்களுக்கு சங்கடமெல்லாம் தீர்ந்துவிடும். உனக்கு ஸங்கஷ்டஹரணி என்ற பெயர் உண்டாகட்டும்.''

அங்காரகன் விநாயகரை ஒரு செவ்வாய்க்கிழமை சதுஷ்டியில் (மாசி மாதம் கிருஷ்ண சதுர்த்தி, பூஜை செய்து பேறு பெற்ருன். செவ்வாயும் சதுர்த்தியும் சேருகிற தினம் மிக முக்கியம். அங்காரகன் என்னும் செவ்வாய் கடன், வியாதி இவற்றுக்கு அதிபதி. இந்த சதுர்த்திவிரதம் இருப்பதால் அங்காரகப் பிரீதி யாவதுடன் கணேசரின் அருளையும் பெற இயலும்.

அங்காரகன் கணபதியைக் குறித்து நீண்ட நாள் தவம் இருந்தான். மாசி மாத கிருஷ்ணபக்ஷ சதுர்த்தியன்று சந்திரோதய காலத்தில் விநாயகர் அவன் முன் தோன்றினுர். செவ்வாய், ''இன்று தங்களைக் குறித்து விரதம் அனுஷ்டிப்பவருடைய சங்க டங்கள் அனைத்தையும் தாங்கள் நீக்கி அருள் புரிய'' வரம் கேட்டான். அவரும் அவனை நவக்கிரகங்களில் ஒருவராக இருக்க ஆசீர்வதித்தார்.

சங்கடஹர சதுர்த்தியன்று காலை முதல் சந்திரோதயம் வரை நீர் தவிர எதுவும் உட்கொள்ளாமல் சந்திரனைப் பார்த்தபின், அர்க்கியம் கொடுத்தபின் 21 அருகம்புல் கொண்டு கணேசரின் 21

நாமங்களை அர்ச்சித்து அதன்பின் உப்பு, காரம் சேர்க்காத உணவை உட்கொள்ள வேண்டும். இம்பூஜை வெள்ளி அல்லது தங்க பிள்ளையாரை வைத்து செய்வது விசேஷம்.

கணபதி ஹோமத்தை வெள்ளிக்கிழமைகளிலும், சுக்லபக்ஷ சதுர்த்தி திதிகளிலும் உதயத்தில் நடத்தவேண்டும். ஆடி மாதம் செய்வது இன்னும் விசேஷம்.

மலையாளத்தில் நம்பூதிரிகள் காலம், நாளம், மூலம் இம் மூன்றும் கணபதி ஹோமத்திற்கு முக்கியமானவை என்று கூறுவார்கள். அதாவது உதயகாலம், மெல்லியதாகவும் நீளமாகவும் சிறிய தேங்காய் கீறுகள், மூலமந்திரம் இம்மூன்றுமே யாம்.

கணபதி மந்திரம்

மகா கணபதி மந்திரம் ஆறு அட்சரங்களுடன் கூடியவை. 'ஓம் கணபதயே', 'வக்ரதுண்டாயஹும்' என்பவை. இருபத்து எட்டு அட்சரங்களுடன் கூடியது. ஓம் ச்ரீம், ஹ்ரீம், க்லீம், க்லௌம் கம் கணபதயேவர வரத, ஸர்வஜனம்மே வசமானய ஸ்வாஹா. மகா கணபதி மந்திரத்தை ஜபம் செய்து, அதற்குள்ள ஹோமம் செய்யும்போது, 'ஸ்வாஹா' என்ற பதம் இருமுறை உச்சரிக்க வேண்டும். பிரதி வெள்ளிக்கிழமையும் சூரியோதய காலத்தில் மகா கணபதி ஹோமம் செய்தல் விசேஷ பலனைக் கொடுக்கும். இந்த ஹோமத்திற்கு தேங்காய், எள்ளு, நெல் பொரி, அவல், கரும்பு, மோதகம், நெய், பாயசான்னம், சத்துமா முதலியவை ஹோம திரவ்யங்களாகும்.

மகா கணபதியை சாதாரணமாக தனி பிரும்மச்சாரி ரூபத்தில் உபாசிப்பது வழக்கம். வல்லபை என்ற சக்தி ரூபத்துடன் வல்லப கணபதி ரூபமாயும் உபாசிப்பதுமுண்டு. ஸ்மிருதிகளில் பஞ்சமூர்த்தி பூஜையைக் குறிப்பிடும்போது கணபத்யாதி (கணபதி முதலிய) என்று இவருக்கு விசேஷ ஸ்தானம் அளிக்கப்பட்டிருக் கிறது. ஸ்ரீ ஆதிசங்கரர் ஸ்தாபித்த ஆறு மதங்களில் ''காணு பத்யம்'' என்பது முதல் மதம்.

பூஜைக்குரிய மூர்த்தி

பூஜை செய்வதற்குரிய மூர்த்தங்கள் வெள்ளியிலோ, பஞ்ச லோகத்திலோ, ஸ்படிகத்திலோ, நாம் ஸ்தபதிகளைகொண்டு செய்து வைத்துக் கொள்ளலாம். ஆனால் ஸ்வயம்புவானது, நேபாள தேசத்தில் கிடைக்கும் சிவப்பு வர்ணம் கொண்ட ''சோணபத்ரம்'' எனப்படும் ஸாலக்கிராம ரூபமாகும். மண்ணினால் மகா கணபதி ரூபம் செய்து, விநாயக சதுர்த்தி தினத்தில் வீட்டில் பூஜை செய்ய வேண்டியது. இந்த மூர்த்திக்கு அளவு உண்டு. பூஜை செய்யும் யஜமானின் கட்டை விரல் அளவுக்கு பனிரெண்டு பங்குக்கு மேல் உயரம் இருக்கக் கூடாது.

விடியற்காலே எழுந்ததும் ஸ்ரீ கணபதியைத் தியானித்தால், சகல சிரேயஸும் உண்டாகும். ஸ்ரீ ஆதிசங்கரர் இயற்றியுள்ள ''முதாகரர்த்த மோதகம்'' என்று துவங்கும் ஐந்து சுலோகங்களேயும் கொண்ட கணேச பஞ்சரத்னத்தை அர்த்தம் தெரிந்துக் கொண்டு ஸ்தோத்திரம் செய்யலாம். பின்பு ஸ்நானுதிகளே முடித்துக் கொண்டு குருமுகமாக உபதேசம் பெற்ற கணபதி ஷடாக்ஷரம் (6) அல்லது கணபதி அஷ்ட த்விம்சதி (28) அட்சரம் உள்ள மந்திரத்தை ஜபம் செய்யலாம். விசேஷ சமயங்களில் மேலே சொன்னபடி குருமுகமாய் ஹோமம் செய்யலாம். அவ்வளவு செய்ய முடியாவிடில், கீழ்க்கண்ட எல்லோருக்கும் தெரிந்துள்ள சுலோகத்தை குழந்தை முதல், பெரியோர்கள் வரை தியானத்துடன் சொல்லாம். இதற்கு வேறு உபதேசம் தேவை இல்லே.

கஜானனம் பூதகணுதி ஸேவிதம்
கபித்த ஜம்பூ பலஸார பக்ஷிதம்
உமாசுதம் சோக விநாசகாரணம்
நமாமி விக்நேசுவர பாதபங்கஜம்

(ஆனே முகத்துடையவரும், பூத கணங்களால் வணங்கப் பட்டவரும், விளாம்பழம் நாகப்பழம் இவைகளின் ஸாரத்தை ரசிப்பவரும், உமையின் புத்திரனும், துக்கத்தைத் தீர்ப்பவருமான விக்நேசுவரரின் பாத கமலங்களில் நமஸ்காரம் செய்கிறேன்.)

பிள்ளேயார் சதுர்த்தி பூஜை நடைபெறும் மாதம்தானே ஆண்டின் முதல் மாதமாக இருக்கவேண்டும்? அப்படி ஒரு காலத்தில் இருந்திருக்கிறது.

இந்நாளில் சித்திரையை முதல் மாதமாகக் கொண்டு ஒரு ஆண்டு கணிக்கப் பெற்று வருகின்றது. இங்ஙனமின்றி மிகப் பழங்காலத்தில் ஆவணியை முதல் மாதமாகக் கொண்டு மாதங்களேக் கணித்தல் அறிஞர்களின் வழக்கமாக இருந்துவந்தது. ஞாயிற்றுக்குரிய ஓரை சிங்கவோரை என்றும், அதற்குரிய திங்கள் ஆவணியாதலின், ஆவணி தொடங்கி மாதங்களே எண்ணுதல் ஒருமுறை என்றும், பண்டையோர்கள் கொண்டிருந்தனர். இவ்வுண்மை,

''கால உரிமை எய்திய ஞாயிற்றுக்கு உரிய சிங்கவோரை (ஆவணி) முதலாகத் தண்மதிக்கு உரிய கற்கடகவோரை (ஆடி) ஈருக வந்து முடியுந்துணையும் ஓர் யாண்டு ஆம். ஆதலின், அதனே இம்முறையானே அறுவகைப் படுத்து இரண்டு திங்கள் ஒரு காலம் ஆக்கினுர்'' என ஆசிரியர் நச்சினுர்க்கினியர், ''காரும் மாலேயும் முல்லே'' எனவரும் தொல்காப்பிய நூற்பாவின் உரையில் கூறியுள்ளது கொண்டும் தெளியப்படும். இவ்வாறு ஆவணியை முதல் மாதமாகக் கொண்டு கணிக்கும் முறை சுமார் 7000 ஆண்டுகட்கு முன்பு தொடங்கியிருத்தல் வேண்டும் என வான நூல் ஆராய்ச்சி நிபுணர்கள் கருதுகின்றனர்.

ஆவணி மாதம், ஆண்டின் முதல் மாதமாகக் கருதிக் கணிக்கப் பெற்று வந்த அப் பழங்கால முதலே, விநாயகர் வழிபாடும் தோன்றி நிலவிவரத் தலைப்பட்டிருத்தல் வேண்டும்! இத்தகைய செய்திகளால், விநாயகர் வழிபாட்டின் பழமையும் பெருமையும் விளங்குதல் காணலாம்.

நான்காம் பிறைச் சந்திரனைப் பார்க்காதே

ஸிம்ஹ ஃப்ரேஸநம் அவதீத், ஸிம்ஹோ ஜாம்பவதா ஹத:
ஸுகுமாரக மா ரோதீ: தவ ஹ்யேஷ ஸ்யமந்தக: ||

சந்திர மண்டலத்துக்கு அதிஷ்டான தேவதையான சந்திரன் ஒருகால் தன் அழகின் செருக்கினால் விநாயகரைப் பழித்தான். அந்தப் பழிப்பினால் சந்திரனை ஒருவருமே பார்க்கக் கூடாது என்ற சாபம் ஏற்பட்டது. அந்தச் சாபத்தின் நிவிருத்தியைச் சந்திரன் வேண்ட, மாலையில் ஆகாசத்தில் பார்த்தவுடனே கண்ணுக் கெதிரில் நிற்கும் நாலாம் பிறைச் சந்திரனை மாத்திரம் பார்க்கக் கூடாது என்று அந்தச் சாபம் குறைக்கப்பட்டது.

துவாரகையிலிருந்து தென் மேற்கு முகமாக யது வம்சத்தில் பிறந்த ப்ரஸேனன் என்பவன், தற்கால ரேடியத்தைப் போன்று ஸ்வயம்பிரகாசத் தன்மையில் அதைவிட மேலானதாயும், ஸூர்ய மண்டலத்திலிருந்து கிடைத்ததுமான ஸ்யமந்தகமென்னும் ரத்தினத்தைத் தரித்துக்கொண்டு, காட்டின் வழியே குதிரை யேறிச் செல்ல, அவனை ஒரு சிங்கம் கொன்றது. அந்தச் சிங்கத்தைக் காட்டில் தெய்வீகக் கரடியுருவும் கொண்ட ஜாம்பவான் கொன்று, அந்த மணியை வெகுதூரம் பாதாளத்தி லுள்ள தன் குகையில் குழந்தையிடப்பட்ட தொட்டிலில் கட்டினார்.

ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஒரு சமயம் சுக்லபக்ஷ சதுர்த்தியன்று சந்திரனை பார்த்தார். நாலாம் பிறைச் சந்திரனை பார்த்தவனுக்கு வீண்பழி வரும். ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஒரு தடவை நாலாம் பிறைச் சந்திரனைப் பார்த்தார். ஈச்வராவதாரமாக இருந்தாலும் மனித வேஷம் தரித்த பிறகு, பிரபஞ்சச் சட்டங்களுக்குத் தாமும் உட்பட்டே தீரவேண்டும் என்னும் தத்துவத்தை அவர் விளக்கினார். பிரஸேனனைக் கொன்று ஸ்யமந்தகமணியை ஸ்ரீ கிருஷ்ண பகவானே அபஹரித்தார் என்னும் வீண் அபவாதத் துக்கு அவர் உட்பட்டார். உலகத்தோருக்கு உண்மையைத் தெரியப்படுத்தித் தம் அபவாதத்தை நீக்கிக்கொள்ள அவர் புறப் பட்டார்; காட்டுக்குச்சென்றார்; பிரஸேனன் பிரிந்துபோன வழியை அவனது குதிரையின் காலடிச் சுவட்டைக்கொண்டு தொடர்ந்து சென்றார். ஜாம்பவானின் குகையின் துவாரத்தில் குதிரையையும் பிரஸேனனையும் கொன்ற சிங்கத்தின் உயிரற்ற சரீரத்தையும் பார்த்தார். குகைக்குள் வெகு தூரம் சென்றார். ஜாம்பவானின் புத்திரியான ஜாம்பவதி தன் தம்பியைத் தொட்டி லிட்டுக் குழந்தை அழாதிருக்குமாறு தாலாட்டிக்கொண்

டிருந்தாள். தொட்டிலின் விதானத்தில் ஸ்யமந்தக மணி கட்டியிருப்பதைக் கிருஷ்ணன் கண்டார். அந்தத் தாலாட்டுப் பாட்டு இது—

ஸிம்ஹ: ப்ரஸேநமவதீத், ஸிம்ஹோ ஜாம்பவதா ஹத: |
ஸுகுமாரக மா ரோதீ:, தவ ஹ்யேஷ ஸ்யமந்தக: ||

ஜாம்பவான் ஸ்ரீகிருஷ்ணனோடு யுத்தம் செய்தார்; பகவானின் பலத்தைக் கண்டு நம் தெய்வமான ஸ்ரீ ராமனே இவன் என்று கண்டுகொண்டார்; ஜாம்பவதியையும் ஸ்யமந்தக மணியையும் பகவானுக்கு ஸமர்ப்பித்தார். ஜாம்பாவதி கல்யாணம் நடந்தது.

இந்தத் தாலாட்டுப் பாட்டை விநாயக சதுர்த்தியன்று சொல்லுகிறவர்களுக்கு வருஷம் முழுவதும் எந்தச் சுக்லபக்ஷ சதுர்த்தியில் சந்திரனைக் கண்டிருந்தாலும் அந்தத் தோஷம் பரிஹாரமாகிறது.

மோதகம் பிறந்த வரலாறு

விநாயகருக்கு மிகவும் பிடித்தமானது மோதகம் என்ற கொழுக்கட்டை. பிரும்மம் எப்படி சர்வ வியாபியாக விளங்குகிறதோ அப்படி விநாயகர் எங்கும் சர்வ வியாபியாக விளங்குகிறார். இப்பேர்ப்பட்டவர் தன் கிருகத்திற்கு வரப்போகிறார் என்றும் அப்படிவரும் நாளையும் குறிப்பின் மூலம அறிந்துக் கொண்டாள் அருந்ததி.

பிரும்மம் இந்த அண்டத்தில் எங்கும் நிறைந்திருக்கிறது என்கிற ரகஸ்யத்தை அறிந்த அருந்ததி இந்த உண்மையை உலகத்திற்கு எடுத்துக் காட்ட அண்டம் என்ற அர்த்தத்திலே வெள்ளை மாவினால் செப்பு செய்து பிரும்மம் எங்கும் பூர்ணமாக நிறைந்திருக்கிறது என்ற அர்த்தததில் உள்ளே அமிர்தமயமான பூர்ணத்தை வைத்து வசிஷ்டரிடம் கொடுத்து அதை கிருகத்திற்கு வரும் விநாயகருக்கு நைவேத்தியம் செய்யும்படிக் கூறினாள்.

தம் தத்துவத்தை உணர்ந்து அதை எடுத்துக்காட்டும் வகையில் தயாரித்த பண்டத்தை விநாயகர் பெருமகிழ்ச்சியோடு ஏற்று அத்தம்பதிகளுக்கு நல்ல சிரேயஸ்ஸையும், ஜீவன் முக்தியையும் அளித்தார்.

அந்த தத்துவம் நிறைந்த மோதகத்தை உலகோர் காண தன் கையில் அவர் சதா வைத்துக்கொண்டிருக்கிறார்.

ஆதிசங்கரர் 'முதாகரத்த மோதகம் சதாவிமுக்தி சாதகம்' என்ற வாக்கியத்தை இதனால்தான் அருளினார். கணேசர் சிவனுடைய ஆகாய அம்சத்தை குறிப்பவர் எனப்படுவதால் இவர் பிரபஞ்சத்தின் ''கோ'' எனப்படுகிறார். இவரது வயிற்றுக்குள் மோதகங்கள் இருக்கிறதென்பது ஆகாயத்திலுள்ள பல நட்சத்திர மண்டலங்களைக் குறிக்கும். பத்ம புராணத்தில் மோதகங்கள் வாலறிவைக் குறிக்கும் எனச் சொல்லப்படுகிறது. இவர் வாலறிவை எப்படி பெற்றார் என்பதுதான் மாம்பழ வரலாறு.

என்ன கிடைக்கும்? 6
என்ன கிடைத்தது?

வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம்
மாமலராள் நோக்குண்டாம்

—ஔவையார்

இவ்விநாயகரை வழிபட்டால் என்ன கிடைக்கும்? ஔவையார் பதில் சொல்கிறாள். வாக்கு, நல்ல மனம், லக்ஷ்மி கடாக்ஷம் இவை எல்லாம் கிடைக்கும். வாழ்க்கை சுகமாக இருக்க வேண்டியவை இவைதானே!

எல்லா தெய்வங்கள் மீதுள்ள சுலோகங்களிலும் கடைசியில் பலசுருதி இருக்கும். இந்த ஸ்லோகத்தை படித்தால் இன்ன பலன் கிடைக்கும் என்று அதில் கூறப்பட்டிருக்கும். ஆனால் விநாயகரைப் பொறுத்தவரை தொடக்கத்திலேயே பல சுருதியும் இணைந்து விடுகிறது.

அல்லல் போம் வல்வினை போம்
அன்னை வயிற்றில் பிறந்த தொல்லை போம்
போகாத் துயரம் போம்
கோபுரத்தில் வீற்றிருக்கும் கணபதியைக்
கைத் தொழுதக்கால்.

இவரது வழிபாட்டால் நமக்கு என்னென்ன கிடைத்திருக்கிறது.

அகஸ்தியர் கமண்டலத்தில் இருந்த காவிரியை விநாயகர் காக்கையாக வந்து கவிழ்த்திராவிட்டால் நமக்கு காவிரி நீர் கிடைத்திருக்காது.

விபீஷணனிடம் குட்டுப்பட்டு ரரங்கநாதன் விக்கிரகத்தை தரையில் விநாயகர் வைத்திருக்காவிட்டால் திருஅரங்கமே கிடைத்திருக்காது.

சக்தியைக் கொடுத்தார். பக்திக்கு வழி வகுத்தார். ஆனால் மனிதன் பூரணத்துவம் பெற இது போதாது என்று வாழ்க்கையை வளம்பெற இதிகாசத்தை அருளினார். வேதவியாசர் சொன்ன ஐந்தாம் வேதம் எனப்படும் மகாபாரதத்தை எழுதினார். திருநாரையூரில் செல்லப் பிள்ளையாராக எழுந்தருளி நம்பியாண்டார் நம்பிக்கு தேவாரத் திருமுறைகளைக் கண்டெடுக்க அருளினார்.

தமிழ் நாட்டுக்கு காவிரி கிடைத்த வரலாறு

பார்வதி பரமேஸ்வரர் திருமணம் இமயமலையில் நடைபெற்ற போது வடக்கு தாழ சிவபெருமான் அகஸ்திய முனிவரை தெற்கே போகும்படி கேட்டுக் கொண்டார். அவர் தெற்கே வந்ததும் நிலம் சமமாகிவிட்டது. இவர் கமண்டலும் தண்டமும் ஏந்தி விந்தியமலை தாண்டி வந்துக்கொண்டிருந்தார். மக்களது வாழ்வை வளம்பெற செய்ய இந்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொள்ள விநாயகப் பெருமான் மனதில் எண்ணினர். அகஸ்தியர் தன் கமண்டலத்தை பாறையின் அணைப்பில் வைத்துவிட்டு மாலை வழிபாடுகள் செய்ய அமர்ந்தார். எங்கிருந்தோ வந்தார் கணபதி அண்டங்காக்கையாக. காகம் கமண்டலத்தை உருட்டிவிட்டது. அதிலிருந்த தண்ணீர் 'குபு குபு' வென்று பொங்கி நதியாக உருவெடுத்தது. இவ்விதம் ஸஹ்யபர்வதத்தில் பிறந்தாள் காவிரி.

குட்டுப்பட்ட பிள்ளையார்

வயிற்றுக்கு உணவு மட்டும் கிடைத்தால் போதுமா? பக்தி செய்ய வேண்டாமா? அதற்கு ஒரு ஏற்பாட்டைச் செய்தார் விநாயகர். இதனல்தான் காவிரிக் கரையில் ரங்கநாதர் பள்ளி கொண்டார்.

ராவணனிடமிருந்தும் அவன் தம்பி விபீஷணனிடமிருந்தும் குட்டு வாங்கியிருக்கிறர் பிள்ளையார். மேற்குக் கடற்கரை யோரத்திலுள்ள திருகோகர்ண க்ஷேத்திரத்திற்குச் சென்றல் இந்த பிள்ளையாரை தரிசிக்கலாம். இந்த க்ஷேத்திரம் பரசுராம க்ஷேத்திரத்தின் வடக்கு எல்லை. ராவணன் ஆத்ம லிங்கத்தை கொண்டு வருகையில் ஒரு நிமிடம் அதை அங்கு தோன்றிய சிறுவன் கையில் கொடுக்க அவனும் ஒரு நிமிட நேரம் வைத்திருந்து ராவணன் வராததால் பூமியில் வைத்துவிட்டான். பூமியில் வைத்த லிங்கத்தை என்ன முயன்றும் ராவணனல் அசைக்க முடியவில்லை. வந்தகோபத்தில் ராவணன் சிறுவனக வந்திருந்த பிள்ளையார் தலையில் ஓங்கிக் குட்டினன்.

இம் மகாபலேஸ்வரர் கோவில் மிகப் பழமையான ஆலயங்களில் ஒன்று, கோவிலுக்கு வெளியே குட்டுப்பட்ட விநாயகர் சந்நிதி. இந்த பிள்ளையாரின் தலையைத் தடவிப் பார்த்தால் இரண்டு விரல் கொள்ளும்படியான குழி இருப்பதை உணரலாம்.

மற்றுமொரு குட்டுப்பட்ட கணபதி திருச்சிராப்பள்ளிக் குன்று உச்சியில் உச்சிப்பிள்ளையார் என்ற பெயரில் கோயில் கொண்டிருக்கிறர். இலங்கையின் மன்னனன விபீஷணன் ராமர் கொடுத்த ரங்கநாத மூர்த்தியை எடுத்து வந்திருக்கிறன். இலங்கை செல்லும் வரை இம் மூர்த்தியை தரையில் வைககக் கூடாது என்பது நிபந்தனை. நீராட விரும்பிய விபீஷணன் அங்கு தோன்றிய சிறுவனிடம் ரங்கநாதரைக் கொடுத்து, ''கீழே வைக்காதே; குளித்துவிட்டு வந்து விடுகிறேன்'' என்று சொல்லிவிட்டுப்

போயிருக்கிறுன். அச்சிறுவன் எத்தனை நாழி தான் வைத்துக் கொண்டிருப்பான்? கீழே வைத்து விட்டு விபீஷணனிடம் குட்டுப் பட்டான். அச்சிறுவன்தான் கணபதி. கீழே வைத்த இடம்தான் ஸ்ரீரங்கம். அர்ச்சகர் அனுமதித்தால் உச்சிப் பிள்ளையார் தலையில் குட்டு வாங்கிய குழியையும் தொட்டுப் பார்க்கலாம்.

எழுத்தாளர் தெய்வம்

எழுத்தாணி ஏந்தி ஏட்டில் எழுத ஆரம்பித்த முதல் தெய்வமே அவர்தான். வியாஸர் மகாபாரதத்தை எழுத உத்தேசித்தார். ஒரு லட்சம் சுலோகம் கொண்டது இது. இதை தான் சொல்லிவர மகா கணபதி எழுதி வரவேண்டும் என்று அவர் பிரார்த்தித்தார். அதற்கு மகா கணபதி ''நான் எழுதுகிறேன், ஆனல் நடுவில் தடங்கல் இல்லாமல் சொல்லி வரவேண்டும்'' என்றுர்.

வியாசர், ''சரி ஆனல் நான் சொல்லும் சுலோகங்களின் அர்த்தத்தை நீங்கள் தெரிந்துகொண்டு எழுத வேணும்'' என்றுர். மகா கணபதியும் ஒப்புக்கொண்டார். ஒவ்வொரு 1000 சுலோகம் ஆனதும் மிகக் கடினமான சுலோகத்தை வியாசர் கூறினுர். கணபதி அதைப் புரிந்துக் கொள்வதற்குள் அடுத்த ஆயிரம் சுலோகங்களை வியாசர் தன் மனதில் சிந்தித்துக்கொண்டார்.

இதனுல் மகா கணபதியை வழிப்பட்டால் வித்யா சக்தி நிச்சயம் கிடைக்கும். பாதியில் எழுத்தாணி உடைந்து விடவே தன் கொம்பு (தந்தம்) ஒன்றை உடைத்து அதனுல் எழுதினுர். அதனுல் ஏகதந்தர்.

தன் பாரதத்தில் (தமிழில்) வில்லிப்புத்துராரால் ஆரம்பத்தில் கடவுள் வாழ்த்தாக பாடிய செய்யுள் :

''நீராழி உலகத்து மறை நூலோ
டைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன்
மாபாரதம் சொன்ன நாள்
ஏடாக வடமேறு வெற்பாக
அங்கூர் எழுத்தாணிதன்
கோடாக எழுதும் பிரானைக்
குறித்தன்பு கூர்வாமரோ''

விநாயகர் பாரதத்தை வியாசர் சொல்லச் சொல்ல மேருவை ஏடாகக்கொண்டு தன் தந்தத்தையே எழுத்தாணியாகக்கொண்டு எழுதினுர் என்கிறது புராணம்.

மேரு மலையில் பெரிய பாரத்தை எழுதுதல் சாத்தியமன்று. தன் கொம்பினை எழுத்தாணியாகக்கொண்டு எழுதுவதும் சாத்தியமன்று. இப்படி கூடியது உருவகமே. இதன் உள் அர்த்தம் என்ன? தவமுனிவன் சொல்லச் சொல்ல பிள்ளையார் எழுதிய

ஏடுகள் மேரு மலைபோல் குவிந்துவிட்டன. எழுத்தாணி எழுதி எழுதி வளைந்துவிட்டது. அதன் வளைந்த நிலையே விநாயகரின் தந்தத்திற்கு உவமை.

திருமுறைகள் தேடித் தந்தவர்

அநபாய சோழன் காலத்தில் திருநாரையூர் என்னும் தலத்தில் ஆதி சைவ பிராம்மண குலத்தில் தோன்றியவர் நம்பியாண்டார் நம்பி. அவருடைய தந்தையார் பொல்லாப் பிள்ளையாரைப் பூஜித்து வந்தார். அவருக்குத் தக்க பருவத்தில் தந்தையார், உபநயனம் செய்வித்துப் பூஜை முதலியன செய்யும் தகுதி பெறச் செய்தார். ஒரு நாள் தந்தையார் வெளியூர் சென்றதால் பிள்ளையாரைப் பூஜை செய்யும் வாய்ப்பு நம்பிக்கு ஏற்பட்டது. அவர் நிவேதனத்தைப் பிள்ளையார் முன் வைத்து உண்ணும்படி வேண்டினார். பிள்ளையார் உண்ணவில்லை. நம்பியாண்டார் நம்பி ஏதோ தவறு ஏற்பட்டுவிட்டது என்று மனம் கலங்கித் தனது தலையைக் கல்லில் மோத முற்பட்டார். அப்போது பிள்ளையார் 'பொறு' என்று தடுத்து அவர் கொண்டு வந்த நிவேதனம் எல்லாவற்றையும் உண்டார். அது கண்ட நம்பி மனமகிழ்ந்தார். ஆனால் பள்ளிக்கூடம் சென்றால் ஆசிரியர் அடிப்பார் என்று சொல்லி வேதம் முதலிய கலைகளைப் பிள்ளையாரையே ஓதியருள வேண்டும் என்று பிரார்த்தித்தார். பிள்ளையாரும் ஓதுவித்தார். நாள்தோறும் இவ்வாறே நடைபெற்றது. பிள்ளையார் மீது ''திருவிரட்டை மணிமாலை'' பாடினார்.

இச்செய்தி சோழன் செவிக்கு எட்டியது. அரசன் பிள்ளையாருக்கு நிவேதனம் செய்யும் பொருட்டு எல்லாவிதமான கனிகளையம், பண்டங்களையும் எடுத்துக்கொண்டு திருநாரையூர் வந்து சேர்ந்தான். நம்பியாண்டார் நம்பி மூலம் பிள்ளையாருக்கு எல்லாவற்றையும் நிவேதனம் செய்வித்தான். பிள்ளையாரும் அவற்றைத் துதிக்கை நீட்டித் திருவமுது செய்தருளினார். அது கண்ட சோழன் நம்பியாண்டார் நம்பியை வணங்கி சமயாசாரியார்கள் மூவர் திருவாய் மலர்ந்தருளிய தமிழ் வேதமாகிய தேவாரத்திருப்பதிகங்களை பூவுலகில் விளங்கச் செய்ய வேண்டும் என்று விண்ணப்பம் செய்தார். நம்பியாண்டார் நம்பியும் கோயிலுக்குள் சென்று பிள்ளையாரை வணங்கி, தேவாரத் திருப்பதிகங்கள் இருக்குமிடத்தைத் தனக்கு அருள் புரிதல் வேண்டுமென்று பிரார்த்தித்தார்.

பிள்ளையார் கட்டளைப்படி அரசனும் நம்பியும் தில்லையையடைந்து தில்லைவாழ் அந்தணர்களிடம் தெரிவித்தனர். அவர்கள் தேவாரம் பாடிய மூவரும் நேரில் வந்தால்தான் அறை திறக்குமென்று கூற, அரசன் உடனே நடராஜருக்கு விசேஷ பூஜை செய்வித்து சமய குரவர் மூவர் திருவுருவங்களையும் திருவீதியுலாவாக எழுந்தருளச்செய்து கனகசபையை வலம் வந்து

திருமுறைகள் இருக்கும் அறையின் எதிரே நிறுத்தி அறையைத் திறக்க வேண்டினுன். அவர்கள் சோழ அரசரின் அறிவை வியந்து அறையைத் திறக்குமாறு பணித்தார்கள். கதவு திறக்கப் பெற்றதும் திருமுறைகள் பழுதுபட்டிருப்பதைக் கண்டனர். எல்லோரும் வருந்தினர். சிவபெருமான் அருளால் ''தேவாரத் திருப்பதிகங்கள் இக்காலத்துக்கு வேண்டுவனவற்றை வைத்து விட்டு மற்றையவற்றைச் செம்மண் மூடச் செய்தோம்'' என்று அசரீரி வாக்கு எழுந்தது. அது கேட்டுச் சோழன் மனக்கவலே நீங்கி நம்பியாண்டார் நம்பியின் திருவடியை வணங்கி, தேவாரப் பாக்களே திருமுறைகளாக வகுத்தருள வேண்டுமென்று பிரார்த் தித்தான். அவரும் அப்படியே செய்தார். ஆனுல் தேவாரத் திருப்பதிகங்களுக்குப் பண்முறை அறியப் பெருமையால் திருஎருக்கத்தம்புலியூர் அடைந்து சிவபிரானே வணங்கித் தேவாரங்களுக்குப் பண்முறை அருள வேண்டுமென்று பிரார்த் தித்தார்கள்.

அப்போதும் ஓர் அசரீரி கேட்டது. ''திருநீலகண்டப் பெரும்பாணர் மரபில் பிறந்த ஒரு பெண்ணுக்குப் பண்களே அருளிச் செய்தோம், அப்பெண்ணேக் கனகசபையின் முன் கொண்டுவந்து தேவாரப் பதிகங்களுக்குப் பண்முறை வகுக்கக் கடவீர்'' என்று கூறவும், நம்பியாண்டார் நம்பியும், சோழ அரசனும் அவ்வாறே அப்பெண்ணே சிதம்பரம் அழைத்து வந்து எல்லோர் முன்னிலேயிலும் தேவாரங்களுக்குப் பண்முறை வகுக்கச் செய்தார்கள்.

பின்னர் திருநாரையூரில் நம்பியாண்டார் நம்பி சில காலம் வாழ்ந்து சிவபதம் அடைந்தார். அவர் அருளிய பிரபந்தங்களில் ஒன்று ''திருத்தொண்டர் திருவந்தாதி''.

திருநாரையூர் என்னும் தலம் சிதம்பரம் புகைவண்டி நிலேயத்திலிருந்து தென் மேற்கே 10 கல் தொலேவில் உள்ளது. ஸ்தல விருட்சம் புன்னுகம். நாரை வழிபட்ட திருத்தலம். இவ்வூர் பொல்லாப் பிள்ளேயார் திருவருளாலேயே திருமுறைகள் கிடைத்தன.

ஔவைக்கு அருள் செய்தவர்

தமிழ் மூதாட்டி ஔவையின் பிரத்யட்ச தெய்வம் இவர். ஒரு திருமணத்திற்கு மூவேந்தர்களேயும் அழைக்க விரும்பி அவருக்கு ஓலே எழுது முன் ஔவை பிள்ளேயாரை நினேத்தார்.

ஔவை,

ஒருகை இருமருப்பு மும்முதத்து நால்
வாய்க் கரியுரிவைக் கங்காளன் செம்மல்-கரிமுகன்
கண்ணுல் ஓலே கடிதமெழுத வாரனேல்
தனருண்மை தீர்ப்பேன் சபித்து

எனப் பாட விநாயகர் ஓலே எழுதிவிட்டாராம்.

ஔவையார் விநாயக பூஜை செய்துக்கொண்டிருந்தார் அதற்குள் சுந்தர மூர்த்தி நாயனுரும், சேரமான் பெருமாள் நாயனுரும் கைலாசத்திற்குப் புறப்பட்டு விட்டனர். அவர்களுடன் செல்லவேண்டும் என்ற எண்ணத்தால் ஔவை அவசரமாகப் பூஜை செய்தார். விநாயகர் தோன்றி ''அவசரப்படாமல் பூஜை செய், நானே அவர்களுக்கு முன்பு உன்னை கைலாயத்தில் சேர்ப்பிக்கிறேன்'' என்ருர். அப்படியே செய்தார். சுந்தரமூர்த்தி சுவாமிகள், ''எங்களுக்கு முன் கைலாசத்திற்கு எப்படி வந்தீர்கள்'' என்று கேட்க,

மதுரமொழி நல் உமையாள்
சிறுவன் மலரடியை
முதிர நினைய வல்லார்க்கு
அரிதோ முகில் போல் முழங்கி
அதிரவருகின்ற யானையும்
தேரும் அதன் பின்சென்ற
குதிரையும் காதம் கிழவியும்
காதங்குலமன்னனே

என்று பதிலளித்ததாக 'அபிதான சிந்தாமணி' கூறுகிறது.

பஞ்சாக்ஷர கணபதி

சேலத்தில் காந்திபாலம் அடியில் ஸ்ரீ பஞ்சாக்ஷர கணபதி கோயில் கொண்டிருக்கிருர். இவர்தான். ஔவையை கைலாசத்திற்கு தன் துதிக்கையில் கொண்டுசென்றவராம்.

ஒரே கல்லில் உருவான இப்பிள்ளையார் உருவத்துடன் ரிஷிகள் யாகம் செய்த காட்சியும் பஞ்சபூதங்கள் நாகவடிவில் பிரசன்னமான சிவபெருமானுக்கு குடைபிடிக்கும் காட்சியும் செதுக்கப்பட்டுள்ளது.

ராவணன் காலத்து விநாயகர் கோவில் இலங்கையில் திருக்கோணேஸ்வரத்துக்கு 6-மைலில் இது உள்ளது. இவரும் பஞ்சாக்ஷர கணபதியே. இக்கோவிலில் ராவணன் காலத்தில் கட்டியது என்பது புராண வரலாறு.

கணபதியை வழிபட்டால் என்ன கிடைக்கும் என்று பாரதியார் தன் விநாயக 'நான்மணி மாலை'யில் குறிப்பிடுகிருர்.

''உட்செவி திறக்கும், அகக்கண் ஒளிதரும், அக்கினி தோன்றும், ஆண்மை வலியுறும், திக்கலாம் வென்று ஜெயக்கொடி நாட்டலாம். கட்செவி தன்னை கையிலே எடுக்கலாம், விடத்தையும் நோயையும் வெம்பகை யதனையும் துச்சமென் றெண்ணி துயரிலா திங்கு நித்தமும் வாழ்ந்து நிலைபெற்றிருக்கலாம். அச்சம் தீரும், அமுதம் விளையும், வித்தை வளரும், வேள்வி யோங்கும் அமரத் தன்மையுமெய்தவும் இங்கு நாம் பெறலாம் இஃதுணர்வீரே''.

தமிழ் நாட்டுக் கடவுளே

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை நான்கும்
கலந்து உனக்கு நான் தருவேன்-கோலஞ்செய்
துங்கக்கரி முகத்துத் தூமணியே நீ எனக்கு
சங்கத்தமிழ் மூன்றும்தா. —ஔவை

சங்ககால இலக்கியங்களில் கணபதி பற்றிய தகவல்கள் இல்லை. அக்காலத் தமிழர்கள் குறிஞ்சிக்கு முருகனையும், முல்லைக்கு மாயோனையும், மருதத்திற்கு இந்திரனையும், நெய்தலுக்கு சிவபெருமானையும், பாலைக்கு கொற்றவையையும் வழிபட்டு வந்தார்கள்.

வாதாபி போரில் வெற்றி பெற்ற பரஞ்சோதியார் அவ்வூர் கோவிலிலிருந்து கணபதியை தமிழ் நாட்டுக்குக் கொண்டுவந்த பின்தான் தமிழ் நாட்டில் ஏற்பட்டது என்று கூறுவது சரியல்ல.

பரஞ்சோதியார் இக்கடவுளைத் தமிழகத்திற்குக் கொண்டுவரு முன்பே தமிழ் நாட்டில் கணபதி வழிபாடு இருந்திருக்கவேண்டும். ஏன் எனில் விநாயகர் ஓம்கார வடிவினர். அ, உ, ம என்ற மூன்று தமிழ் எழுத்துள் சேர்ந்தது ஓம். சங்க காலத்திற்கு முற்பட்டே இந்த ஓம் வழக்கத்தில் இருந்து வருகிறது. ஆகவே இவரைப்பற்றி அப்போதைய மக்கள் அறிந்திருந்தாலும் இல்லா விட்டாலும் இவர் தமிழ் நாட்டுக் கடவுளேதான்.

யானை தமிழ் நாட்டு விலங்கு, அதனை மங்கலப் பொருள் களில் ஒன்றுகத் தமிழர் போற்றுகின்றனர். ''வேழமுடைத்து மலை நாடு'' என்ற சிறப்பு வேறு எந்த நாட்டிற்கு உண்டு. பிள்ளையாருக்குப் பிடித்த நைவேத்தியம், மோதகம் (கொழுக் கட்டை) இதைச் செய்யும் வகை தமிழ் நாட்டினருக்கன்றி வேறு யாருக்கும் இன்னும் தெரியாது. பழந்தமிழ் இலக்கியங்களில் இது ''கவ்வு'' என்று குறிப்பிடப்படுகிறது. ஆகவே கணபதி தமிழ் நாட்டுத் தெய்வம்தான்.

பிள்ளையார் பிள்ளைத்தமிழ்

வழிபடும் தெய்வத்தை குழந்தையாக பாவித்து பக்தி செலுத்துவது பக்தி நெறியில் ஒரு வகை. பிள்ளைத்தமிழ் என்ற பிரபந்தம் இந்த வகையில் ஏற்பட்டதுதான். இப்பிள்ளைத் தமிழில் கெங்கமுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் என்பதும் ஒன்று.

மறைநெறி ஒழுகுனர் தங்களை
ஆளமதித்த மறைப்பொருளே

வளி வெளி சலம் நிலம் அங்கி
யெலாம் உருவத்து நிறுத்தவனே
நிருமல அறிவினர் சிந்தை நிலவிய
நிர்குண அற்புதனே
அறைகொடு உலகொடு பங்கயன்
மாலே அளித்து வளர்த்தவனே
அவரவர் பெறவுறு பந்தமும் வீடும்
அமைத்த அறக்கடலே
முறைவளர் கலசை கொள் கெங்கழுநீர்
இறை முத்தம் அளித்தருளே.

இப்பாடல் விநாயகப் பெருமானையே முழுமுதற் கடவுளாக பிரும்மனையும், திருமாலையும் அளித்து வளர்த்தவன் என்றும், பந்தமும் வீடும் அமைத்தவன் என்றும் பேசுகிறது.

அடுத்தது ''வருக வருகவே'' என்ற பாடல் பிள்ளையார் ஆடிப்பாடி குதித்துக்கொண்டு வருகிறார்.

உருகும் அடியார் அள்ளுற உள்ளே
ஊறும் தேனே வருக
உண்ணத் தெவிட்டாச் சிவானந்த
ஒளியே வருக புலன் வழி போய்
திருகும் உள்ளத்தார் நினைவினுக்கு சேயோய் வருக
எமை ஆண்ட செல்வா வருக இணைவிழியால்
பருகும் அமுதே வருக உயிர்ப்பைங்கூழ்
தழைக்கக் கருணை மழை
பரப்பும் முகிலே வருக நறும்பாகே
வருக வரை இழித்த
முருகவேட்கு முன் உதித்த
முதல்வா வருக வருகவே

என்று அழைக்கிறார் இப்பாட்டின் ஆசிரியர்.

இந்த பிள்ளையாரைப் பற்றி ஒரு குறவஞ்சி இருப்பது பலருக்குத் தெரிந்திராது. அதுதான் வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி. ஆசிரியர் யார் என்பது தெரியவில்லை.

தஞ்சைக் கீழவாசலில் இருக்கிறார் வெள்ளைப் பிள்ளையார். (திருவலஞ் சுழியிலும், இடும்பாவனத்தில் சுவேத விக்னேஸ் வரர்கள் இருக்கின்றனர்.)

சரபோஜி மன்னர் காலத்தில் மருத்துவக் கட்டுரைகளோ ஏனைய இலக்கிய வரலாறுகளோ வெள்ளைப் பிள்ளையாரையும், அவருடைய துணைவியரான வல்லபையையும் வணங்கும் பாடல் இல்லாமல் எழுதப்பெற்றதில்லை என்றே கூறலாம்.

ஒரே இரவில் நாற்பது வேலி நிலம் உழவேண்டிய சோதனைக்கு ஆளான நந்தன், திருப்புங்கூரில் ஒரு குட்டையைக் குளமாக்க வேண்டிய சிரம சாத்தியமான பணியையும் ஏற்க நேர்ந்தது.

அப்போது எளிய நந்தனிலும் பரம எளியனாக ஒரு தீனன், வஞ்சனையறியா நிர்மல முகத்தோடு வந்து நின்றான்.

''நீ யாரப்பா?'' என்று பரிவோடு கேட்டார் நந்தனார்.

''நான் உன் ஆளப்பா!'' என்று பரிவுடன் சொன்னான் வந்தவன்.

''குட்டையைக் குளமாக வெட்ட வேணும்.''

''வெட்டினால் வெகு புண்ணியம். நான் செய்கிறேனே.''

''ஆனால் என்னால் பதக்கு நெல்தானே கூலி கொடுக்க முடியும்?''

''அதுவே போதும், போதும்! ஏராளம்! இதோ வெட்டு கிறேன்'' என்று உடனே மண்வெட்டியும் கையுமாய்ச் சும்மாடு கோலி வைத்துக்கொண்டு வேலையில் இறங்கிவிட்டான் வந்தவன்.

பலர் செய்யக்கூடிய வேலையை இந்த ஒரே ஒரு கூலியாள் மளமள வென்று செய்து முடித்தே விட்டான்.

குட்டை நொடிப் பொழுதிலே அழகிய தடாகமாகியது. மீன்கள் துள்ளின. தாமரை மலர்ந்தது.

கூலி நெல்லை எடுத்து வரப்போன நந்தன், திரும்பி வந்து நெல்லை அளக்கத் தொடங்கினான். ஆனால் கூலி பெறுவதற்கு வந்தவன் மாயமாய் மறைந்து போனான். அவன் யார்? சாக்ஷாத் விநாயகமூர்த்தி.

இன்றும் திருப்புங்கூரில் பின்புறத்துக் கோபுரத்தை அடுத்துப் 'பிள்ளையார் குளம்' சோலைகள் சூழ விளங்குகிறது. இறைவனது திருக்கைகளினால் அழகு பெற்றது அந்த அற்புதக் குளம். தாமே வலிய வந்து பணி செய்வதற்குக் காத்து நிற்கிறார் விநாயகப் பெருமான் என்பதற்கு இதைவிட வேறு சான்று வேண்டுமா?

இவை முன்பு நடந்தவை, இன்று நமக்குப் பலன் அளிப்பவை.

அடியார்களை எப்படியெல்லாம் தடுத்தாட்கொள்கிறார் என்பதற்கு முன் சொன்னவை மட்டுமின்றிப் பல சம்பவங்கள் உண்டு. மகாராஷ்டிரத்திலே ஷோடச கணபதி ஸ்தலங்கள் பிரசித்தம். விநாயக சதுர்த்தியைப் பதினாறு நாட்கள் கொண்டாடி அனந்த சதுர்த்தசியன்று வழியனுப்புவர். ஸ்ரீ மகாபக்த விஜயத்திலே அன்புடன் உடன் அமர்ந்து உண்ணும் விநாயகர் பாதிச் சாப்பாட்டிலே எழுந்துபோய்க் கடலிலே மூழ்க விருந்த தம் பக்தனைக் கரையேற்றிவிட்டு ஈர வஸ்திரத்துடன் உண்ட சரித்திரம் மிகவும் பிரசித்தம். தமிழ் நாட்டிலே ஒரு மந்திரி, அரசனது ஆணைப்படியே பிரம்மாண்டமான கோயிலும் கோபுரமும் எழுப்புகிறார். கட்டிட நிர்வாகப் பொறுப்பை ஏற்ற

மந்திரி கணக்குகளைச் சரியாக வைக்காமல் அசட்டையாக இருந்து விடுகிறார். அரசர் பார்வையிட வந்தாயிற்று. கணக்குகளை எடுத்து வரும்படி கட்டளையும் வந்தது. சபையோர் கோபுரத்தின் பெருமை, கோயிலின் சிற்பச் செல்வங்கள், அவை அமைந்துள்ள அழகு இவற்றையே பேசிப் பேசிப் புகழ்ந்தும் மகிழ்ந்தும் அமர்ந்திருந்த சமயம்.

கணக்கு வைக்காத மெய்யடியார் தவியாய்த் தவித்துப் போனார். 'அடாடா! மதி மோசம் போனேமே? கோயில் கைங்கரியம் என்றாலும் கணக்கு வைக்காதது தவறு தானே! வானை அளாவி நிற்கும் கோபுரம் கணக்குச் சொல்லுமா? தண்டனையை ஏற்க வேண்டியதுதான்' என்று முடிவு செய்தார். காவலர்களும், கை விலங்கும் கண் முன்னே தோன்றின அந்த விநாயகப் பக்தருக்கு. பூஜை அறையிலே கண்மூடி மௌனியாய்த் தியானத்திலே அமர்ந்தார்.

அங்கே சபையோர் பக்தரது வருகைக்காக வழிமேல் விழியாய்க் காத்து நின்றனர். ஓர் அழகிய இளைஞன். பிரம்மசாரி. கட்டுக் குடுமி. காதிலே கடுக்கன். நெற்றியிலே மெல்லிய மஞ்சள் நிறமான சந்தனக் கீற்று. அதன் நடுவே குங்குமப் பொட்டு. கையிலே கணக்குச் சுவடிகள் கட்டிய பட்டுத் துணி, புன்னகை தவழும் முகம். அவனது அழகிய தோற்றத்தைக் கண்டு வைத்த கண் வாங்காமல் அவனையே பார்த்தனர். அவனோ மிகுந்த பணிவுடன் அரசனை வணங்கிக் கைகட்டி வாய் புதைத்து, "அடியேன் மந்திரியாரது கணக்குப்பிள்ளை. அவர் கட்டளைப்படி கணக்குகளைக் கொண்டு வந்திருக்கிறேன். அவர் பல்லக்கிலே வந்து கொண்டிருக்கிறார்" என்றான்.

அரசன் அவனை ஏற இறங்க ஒரு முறை பார்த்தான். "சரி, சுவடியை எடுத்துப் படிக்கலாம்" என்றான். இளைஞனது கண்கள் ஒருமுறை சுழன்று மீண்டன. மிகவும் வணக்கத்துடன் கூடிய இனிய குரலில், முதலில் சொல்ல வேண்டிய மங்கல வாசகங்களைச் சொல்லிச் சற்றே நிறுத்தி, "எத்து நூல் எண்ணாயிரம் பொன்" என்றான். அரசன் திகைத்துப் போனான். ஒன்பது நிலைக் கோபுரங்கள் நான்குடனும் பல சிறு கோபுரங்களுடனும் கூடிய ஆலயம் கண் முன்னே நின்றது. கற்களை ஒழுங்கு செய்து அளவு பிடிக்கும் நூல்தான் எத்து நூல். கணக்கிலே மிகச் சிறிய தொகைதான் எத்து நூல் வாங்குவது. இந்தப் பிரம்மாண்டமான கோயில் கணக்கிலே எத்து நூல் மட்டுமே எண்ணாயிரம் பொன் ஆனால் மற்றச் செலவுகளை எத்தனை பொன் என்று கேட்க வேணுமா? 'போதும், சுவடியைக் கட்டலாம்' என்றான் அரசன். இளைஞன் புன்னகையுடன் சுவடியைக் கட்டலானான்.

இளைஞன் எழுந்து சில அடிகள் செல்லவும் மந்திரியார் மிகுந்த வேகத்துடன் சபாமண்டபத்தில் நுழையவும் சரியா

யிருந்தது. அரசன் சிம்மாசனத்திலிருந்து பத்தடி முன் வந்து மந்திரியாரைத் தழுவிக்கொண்டான். அந்த ஆனந்தக் காட்சியைக் கண்ட சபையோர் திரும்பி இளைஞனை நோக்க அவன் வந்த வாசலின் வழியே மறைந்தே போனான்.

வாதாபி கணபதி

வாதாபி, இல்வலன் என்ற அசுர சகோதரர்கள் விசேஷ வரங்களைப் பெற்று முனிவர்களுக்குக் கொடுமை செய்து வந்தார்கள். ஒருவன் மாம்பழமாக மாறுவான். மற்றொருவன் அம்மாம்பழத்தை ரிஷிக்குக் கொடுத்து உபசரிப்பான். பின்னர் மாம்பழமாகி இரையானவரை மற்றவன் அழைப்பான். உடனே ரிஷியின் வயிற்றைக் கிழித்துக்கொண்டு அவன் வெளிவருவான். அகஸ்தியர் இவர்களிடம வந்தபோது வாதாபி பழ ரூபத்தில் அகஸ்தியர் வயிற்றில் போய் சோந்து விட்டான். ஞான திருஷ்டியால் அகஸ்தியருக்கு விஷயம் விளங்கிவிட்டது. கணபதியின் சக்தியால் அநத அசுரனை ஜீரணம் செய்து மற்றவனையும் வென்றார்.

தனக்கு அனுக்கிரகம் செய்த கணபதி ஞாபகார்த்தமாக வாதாபி கணபதியைப் பிரதிஷ்டை செய்தார். இப்படி அகஸ்தியரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட கணபதியைத்தான் வாதாபி யுத்தத்தில் வெற்றி பெற்றதும் சிறுத்தொண்டர் அங்கிருந்து அகற்றி திருச்செங்காட்டங்குடிக்குக் கொண்டுவந்து கோயில் அமைத்தார். வெளிப்பிரகாரத்தில் வாதாபி விநாயகரை தரிசிக்கலாம். இரண்டே கைகள். இங்கே அம்பிகை ஈசுவரன் எல்லோருக்குமே இரண்டு கைகள்தான். நவதாண்டவ மூர்த்திகள் இருப்பதும் இங்கேயே.

இந்த திருச்செங்காட்டாங்குடி தஞ்சை மாவட்டத்தில் நன்னிலம் அருகில் ஏழு மையிலிலுள்ளது. இங்குள்ள இறைவன் கணபதியால் வழிபட்டவரானதால் கணபதீச்சுரத்தான் என்று பெயர் பெற்றுள்ளார். சிறுத்தொண்டரின் உருவச்சிலையையும் இக்கோவிலில் காணலாம்.

இப்படி தமிழ் நாட்டுக்குவந்த பிள்ளையாரை தமிழ்நாட்டுக் கவிஞர்கள், பக்தர்கள் எல்லாரும் பாடியிருக்கிறார்கள்.

அப்பரும், சம்பந்தரும். திருமூலரும், அதிரா அடிகளும், நம்பியாண்டார் நம்பியும், கபிலதேவநாயனாரும் பாடிய பாடல்கள் எல்லாம் திருமுறைகளிலே இடம் பெற்றிருக்கின்றன. சேக்கிழார், குமரகுருபர் பாடிய பாடல்களும் உண்டு.

கணபதிகளில்தான் எத்தனை விதம்? 8

க்ஷிப்தம் மூடம் ச விக்ஷிப்த ஏகாகரம் ச நிரோதகம்
பஞ்சபூமி மயம் சித்தம் தத்ர சிந்தாமணி ஃ ஸ்தித ||

—கணபதி கீதை*.

கலியுகத்தில் முத்கலரிஷி கணபதியைப் பற்றி பல விஷயங்களைப் போதிக்க பல திசைகளுக்கு தன் சிஷ்யர்களை அனுப்பினர். மேற்கு திக்கிற்கு மரீசியும், கிழக்கு திக்கிற்கு பிரகண்டியையும் அனுப்பினர். அவர்கள் அஷ்ட க்ஷேத்திரங்களை வடக்கில் ஏற்படுத்தினர். தென் தேசத்திற்கு அனுப்பட்டவர்தான் ஹேரண்ட ரிஷி, இவர் தென்னாட்டில் பிரபல ஆலயங்களை கணபதிக்காக ஏற்படுத்தினர். இவருடைய திருஉருவம் தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவலஞ்சுழி கோவிலிலுள்ளது.

கணபதிகளில் ஏராள வகைகள் உண்டு. மஹா கணபதி முதல் உச்சிஷ்ட கணபதி முடிய பல எண்ணிக்கைகள் உள்ளன. அஷ்ட கணபதி, ஷோடஸ கணபதி, துவாதச கணபதி இப்படி பல. எல்லாரையும் சேர்த்து மகா கணபதி விளங்குகிறார்.

சிந்தாமணி கணபதி

''கணாநாம் த்வா கணபதிம்'' என்ற ரிக் வேதத்தில் 2-வது அஷ்டகத்தில் 6-வது அத்யாயம் 2-வது மண்டலத்தில் மூன்றுவது அனுவாகத்திலுள்ள ஸூக்தம், பிருப்மாவுக்கும், சிவனுக்கும் கணபதியே ஞானம் உபதேசித்தார் என்கிறது.

இதன் ரிஷி கிருதஸ்மதர் ''சந்தஸ் ஜகதி'' தேவதை பிரும்மணஸ்பதி.

கணம் :—விபுகணம், ஸடத்திய கணம், வஸு கணம், ஆதித்திய கணம், ருத்ர கணம், மருத் கணம் முதலிய கணங்களுக்கும் அதிபதிஅவர்.

பிரும்மணஸ்பதி :—பிரும்ம ஞானம் அளிப்பவர்.

ஜ்யேஷ்ட ராஜா :—மந்திரங்களுக்கு முதலாவதானவர்.

கணேச உபாசனை மார்க்கமே யோக மார்க்கமாகும்.

ஸ்வானந்தம் என்ற யோக சாந்தியே கணேசர்,

---

* கணபதி கீதை:—21 சுலோகம் அடங்கியது. சாந்தியுடையவர்களுக்கு யோக சாதனங்களினுல் மேலும் சாந்தியை அளிப்பது.

மனதை அடக்கி வயப்படுத்தினால்தான் யோக சாதனை கிட்டும்.

1. மனது பல பொருளிலும் செல்லும் தன்மை. இது க்ஷிப்தம் எனப்படும்.

2. சோம்பல் முதலியவற்றோடு கூடிய பாவத்தில் செல்லும் தன்மை. இது மூடம்.

3. வெளியில் அலையும் மனது இடையிடையே அந்தர் முகமாக யோகம் செய்யும் தன்மை. இது விக்ஷிப்தம்.

4. ஒரே பொருளில் மனதை நிறுத்துவது. இது ஏகாக்கிரம்.

5. முழுதும் அடக்கப்பட்ட மனது, இது நிருத்தம்,

இந்த ஐந்து வித தன்மைகளுக்கும் அனுக்கிரகம் செய்கிற கணேசரே ''சிந்தாமணி கணேசர்''.

இந்த ஐந்து விதமான மன விருத்தியும் கணேசருடைய மாயையே. முதலில் கூறப்பட்ட க்ஷிப்தம், மூடம், இரண்டும் நல்ல காரியம், கெட்ட காரியம் இரண்டிலும் ஈடுபடும். இந்த காரணத்தினால் பிரபஞ்சம் அதன் ஸ்வபாவத்தில் நடக்கிறது. விக்ஷிப்தம் கர்மகதி மார்க்கத்தை நடத்திச் செல்கிறது, ஏகாக்ரகம் எட்டுவிதமாய் ஆத்மாவை ஆதராமாகக்கொண்டு ஞான சமாதியில் இருக்கிறது.

நிரோதம் ஸம்க்ஞிதம் சித்தம் நிவ்ருத்தி ரூபதாரகம் ।
அஸம் பிரக்ஞாத யோகஸ்தம் ஜாந்ஹி யோக ஸேவயா ॥
ஸித்திர் நாநா விதா ப்ரோக்தா ப்ராந்திதா தத்ர ஸம்மதா ।
மாயா ஸா கணநாதஸ்ய த்யக்தவ்யா யோக ஸேவயா ॥
பஞ்சதா சித்தவ்ருத்திச்ச புத்திரூபா ப்ரகீர்த்திதா ।
ஸிதியர்தம் ஸர்வலோகாச்ச ப்ரமயுக்தா பவந்த்யத : ॥
தர்மார்த்த காம மோக்ஷாணும் ஸித்திர் பிந்நா ப்ரகீர்த்திதா ।
ப்ரஹ்ம பூதிகரீ ஸித்தி ஸ்த்யக்த்வயா பஞ்சதா சதா ॥
மோஹதா ஸித்தி ரத்யந்த மோஹ தாரகதாம் கதா ।
புத்திச் சைவ ஸ ஸர்வத்ர தாப்யாம் கேலதி விக்நப : ॥

விநாயகருக்கு ஸித்தி, புத்தி என்ற இரு மனைவிகள் பற்றி ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஸித்தி பலவித பிராந்திகளைக் கொடுப்பவள். அவள் கணபதியின் மாயை. இவள் யோகாப்பியாஸத்தால் விடத்தக்கவள். மேற்கூறப்பட்ட ஐந்து விதமான மன விருத்தி புத்தி தேவியின் ஸ்வரூபம்.

தர்மார்த்த காம மோக்ஷம் என்று ஸித்திகள் வெவ்வேருக சொல்லப்படுகின்றன. ஐந்துவித ஸித்திகள் மோகம் கொடுப்பவை. ஆகவே விடத்தக்கவை. புத்தி என்பவள் அந்த மோகத்திற்கு ஆதாரமாய் எங்கும் இருக்கிருள்.

முதலில் புத்தியால் அறிந்து பிறகு மோகத்தில் நாட்டம் ஏற்படுகிறது. ஐந்து விதமான மன விருத்தியையும் ஐந்து ஸித்திகளையும் விட்டு கணேசரை அடைய வேண்டும்.

யோகாத்மக கணேசர்

கணேசரின் அவதாரங்கள்

தஸ்யாவதார ரூபாச்சாஷ்டௌ விக்ந ஹரணஃ ஸ்ம்ருதா ।
ஸ்வாநந்த பஜனேனைவ லீலாஸ் தத்ர பவந்தி ஹி ।

முத்கள புராணத்தில் அங்கிரஸ முனிவர் கணபதியின் எட்டு அவதாரங்களைக் குறிப்பிடுகிறார். உபாசகர்களுக்கு காமக்ரோத முதலான, இடையூறு செய்யும் அசுரர்களை சம்ஹாரம் செய்யும், 1. வகரதுண்டர், 2. ஏகதந்தர், 3. மஹோதரர், 4. கஜாணனர், 5. லம்போதரர், 6. விகடர், 7. விக்ன, ராஜர் 8. தூம்ரவர்ணர். இவ்வெட்டும் பிரும்ம ஸ்வரூப அவதாரங்கள். இவைகளே ''யோகத்மக கணேசர்''.

அவதாரம்	பிரும்மம்	சம்ஹரிக்கப்பட்ட அசுரன்	வாகனம்
வக்ரதுண்டர்	தேக பிரும்மம்	பொருமை (மத்ஸராசுரன்)	சிம்மம்
ஏகதந்தர்	தேக பரும்மம்	மதம் (மதாசுரன்)	ஆகு
மகோதரர்	ஞான பிரும்மம்	மோகம் (மோகாசுரன்)	,,
கஜானனர்	ஸாங்க்ய பிரும்மம்	லோபம் (லோபாசுரள்)	மூஞ்சூறு
லம்போதரர்	சக்தி பிரும்மம்	க்ரோதம் (குரோதாசுரன்)	ஆடு
விகடர்	சூரிய சக்தி	காமம் (காமாசுரன்)	மயில்
விக்னராஜர்	விஷ்ணு சக்தி பிரும்மம்	'நான்' மமதை (மபாகாராசுரன்)	சேஷன்
தூம்ரவாணர்	சிவ சக்தி பிரும்மம்	அபிமானம் (அபிமாணுசுரன்)	ஆகு

இந்த எட்டு அவதாரங்களை தியானம் செய்வதால் விக்னங்கள் நீங்குகின்றன. மாயை ஓங்குகிறது. இந்த யோக ருபமான கணேசரே பிரும்மணஸ்பதி.

எல்லா சாந்தியைவிட யோக சாந்தி அவர் அருளால் கிடைக்கும்.

'க' 'ண' வியாக்யானம்

மனோ வாணீ மயம் ஸர்வம் ''க'' காராக்ஷர ஸம்பவம்
மனோவாணீ விஹிநம் ச ''ண'' காரம் வித்தி மாநத ||

மனஸ், வாக்கு இவை 'க' கார அக்ஷரத்தில் உண்டானது. மனோ வாக்குக்கு அப்பால் உள்ளது. ''ண'' காரம் இந்த 'க' காரங்களுக்கு யோக ரூபமான ஈசனே கணபதி,

பலவிதமான வியக்திகள் 'க' காரத்திலிருந்து பிறக்கின்றன. இவைகளை யோகிகள் தத்துவங்கள் என்கிறார்கள். 'ண' காரத்திலிருந்து பலவித பிரும்ம ஸ்வரூபங்கள் பிறக்கின்றன. 'க'காரமும், 'ண' காரமும் கணபதி நாமத்தில் அமைந்திருக்கின்றன. அவைகளுக்குப் பிரபுவான கணபதி யோக ரூபமாக இருக்கிறார்.

'க' காரம் ஸித்தி தேவி (மோகத்தை கொடுப்பவள்) 'ண' காரம் புத்தி தேவி, அந்த மோகத்திற்கு ஆதாரமாக இருப்பவள்.

'க' காரத்தினால் குணமுள்ள ரூபம். 'ண' காரத்தினால் நிர்க்குண ரூபம்.

32 திருவுருவங்கள்

(கணபதியின் விசேஷ உருவங்கள் முப்பத்திரண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது.)

பால கணபதி	—இரண்டு கைகள், தவழும் நிலை, துதிக்கையில் மோதகம்
தருண கணபதி	—எட்டுக் கரங்கள்
பக்தி கணபதி	—நான்கு கரங்கள்
வீர கணபதி	—16 கரங்கள்
சக்தி கணபதி	—பச்சை நிற மேனியுள்ள தேவியைத் தழுவிக் கொண்டிருக்கும் நிலை
துவிஜ கணபதி	—நான்கு கரங்களில் புஸ்தகம், அட்சமாலை, தண்டம், கமண்டலம். நான்கு யானை முகங்கள்
சித்தி கணபதி	—நான்கு கரங்கள்
உச்சிஷ்ட கணபதி	—பெண்ணின் உபஸ்தத்தில் துதிக்கையை வைத்தவராகக் காணப்படுகிறார்.
விக்ன கணபதி	—நான்கு கரம்

க்ஷிப்ர கணபதி	—ரத்னகும்பத்தை துதிக்கையில் ஏந்தியவர்
ஏரம்ப கணபதி	—ஐந்து யானை முகம், சிங்க வாகனம்
லட்சுமி கணபதி	—எட்டு கைகள், இரு தேவிமார் களுடன் கூடியவர்
மகா கணபதி	—மடிமீது தேவியுடன் பத்துகைகள்
விஜய கணபதி	—மூஞ்சுறு வாகனத்தில் ஆரோகணித் தவர்
நிருத்த கணபதி	—கூத்தாடும் பிள்ளையார்
ஊர்த்துவ கணபதி	—6 கரங்கள், மடியில் தேவி
ஏகாட்சர கணபதி	—பதுமாசனத்தில் வீற்றிருப்பவர்
வர கணபதி	—தேன் நிறைந்த மண்டையுடை யவர்
திரயாக்ஷர கணபதி	—அசைகின்ற செவிகளில் சாமரம் உடையவர்
க்ஷிப்ரபிரசாத கணபதி	—பேழை வயிறு
ஹரித்திரா கணபதி	—மஞ்சள் வர்ணம், நான்கு கரங்கள்
ஏகதந்த கணபதி	—அட்சமாலை, லட்டு ஏந்தியவர்
சிருஷ்டி கணபதி	—நான்கு கைகள், முஷிக வாகனம்
உத்தண்ட கணபதி	—பத்து கைகள், மடியில் தேவி
ரணமோசன கணபதி	—வெண்பளிங்கு மேனி நான்கு கைகள்
டுண்டி கணபதி	—அட்சமாலை, கோடரி, ரத்னகலசம் ஏந்தியவர்
மும்முக கணபதி	—மூன்று முகம், ஆறு கைகள்
சிங்க கணபதி	—சிங்க வாகனர்
யோக கணபதி	—யோக நிலையில் உள்ளவர்
துர்க்கா கணபதி	—எட்டுக் கைகள்
துவிமுக கணபதி	—இரு முகம் உடையவர்
சங்கடஹர கணபதி	—செந்தாமரை பீடத்தில் நிற்பவர், நான்கு கரங்கள்

இம் முப்பத்திரண்டு கலைகளுள்ள 16-கணபதிகள் ராமேஸ்வர சங்கர மண்டப கணபதி கோவில் விமானத்தில் காணலாம். ஸ்ரீ காஞ்சி காமகோமகோடி ஜகத்குரு அவர்கள் இந்த ஷோடச விநாயகர் ஆலயத்தை அமைக்க யோசனை கூறியவர். இதே போல் அங்கு இப்போது ஷோடச முருகன் ஆலயமும் மறு பக்கத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

ஷட்விம்சதி மிதுன கணபதி

(திருநாரையூர் புராணத்தில் சொல்லப்பட்ட இரண்டு சக்திகளோடு கூடிய கணபதியின் 26 நாமங்கள்)

மஹா ஸித்தி - மஹாபுத்தி சமேத கணேஸ்வரன்
மஹாலக்ஷ்மீ - மஹாவாணீ சமேத கஜாநநன்
ரமாமதி - மஹாவாணீ சமேத விக்னராஜன்
சித்தலக்ஷ்மீ - பாரதீ சமேத விநாயகன்
கமலா - சாரதா சமேத கணநாயகன்
ஸித்தி - சரஸ்வதி சமேத கௌரீபுத்ரன்
வல்லபா - வாணீ சமேத ஹேரம்பன்
லக்ஷ்மீ - புத்தி சமேத ப்ரும்மணும் ப்ரும்மணஸ்பதி
வந்த்யா - ஸ்ரீ சமேத சம்புசுதன்
ப்ரக்ருதி - விக்ருதி சமேத ப்ரும்மணஸ்பதி
விஷ்ணுஜா - ப்ரும்மநந்தினி சமேத ப்ரும்மம்
பஞ்சதேவ ஜநநி - வேதரூபிணி சமேத த்வைமாதுரன்
கிரியாசக்தி - ஞானசக்தி சமேத லம்போதரன்
அஜா - வாகீஸ்வரி சமேத த்ரிலோசனன்
யோகிநீ - ஞானரூபிணீ சமேத ஸத்யன்
ப்ரும்மபாவஸித்தி - நிர்குணஸம்ச்ரயா சமேத கணஞ்சயன்
மூலப்ருக்ருதி - மஹாவாகீஸ்வரி சமேத ஸதிப்ரும்மம்
புஷ்டி - துஷ்டி சமேத கஜன்
முக்திதா - ஞானதாயினீ சமேத வக்ரதுண்டன்
சுந்தரீ - மேதா சமேத விகடன்
ஸர்வசித்திதா - நிருபாதி மஹாமாயா சமேத நிர்குணன்
க்ஷமா - த்ருதி சமேத பாலசந்தரன்
மஹாநந்ததாயிநீ - மோஹநாசிநீ சமேத மகோத்கடன்
மஹாராக்ஞீ - ஸாம்ராக்ஞீ சமேத ராஜபுத்ரன்
தாரித்ரியசமனி - கீர்த்திவர்தனி சமேத கச்யபாத்மஜன்
வைநாயகா பீஷ்டதாத்ரீ - வைநாயக ப்ரவர்த்தனீ சமேத பக்தபாலகன்

(ஒரு சக்தியோடு கூடிய 51 கணபதி)

ஸ்ரீ சமேத விக்நேசன்
ஹ்ரீ சமேத விக்னராஜன்
புஷ்டி சமேத விநாயகன்
சாந்தி சமேத சிவோத்தமன்
துஷ்டி சமேத விக்னஹ்ருது
சாச்வதி சமேத விக்னஹந்தா
ரதி சமேத விக்னராட்
மேதா சமேத கணநாயகன்
ரமா சமேத ஏகதந்தன்
காந்தி சமேத த்விதந்தன்
காமிநீ சக்தி சமேத கஜவக்தரன்
மோஹிநீ சமேத நிரஞ்ஜநன்
தீவ்ரா சமேத கபர்த்வாந்
ஜ்வாலிநீ சமேத தீர்க்கவான்
நந்தா சமேத சங்குகர்ணன்
ஸுயசஸ் சமேத வ்ருஷத்வஜன்

காமரூபிணீ சமேத கணநாதன்
உக்ரா சமேத கஜேந்த்ரன்
தேஜோவதீ சமேத சூர்பகர்ணன்
ஸந்தியா சமேத த்ரிலோசனன்
விக்னேசானி சமேத
லம்போதரன்
ஸ்வரூபிணீ சமேத மஹாநாதன்
காமரதா சமேத சதுர்மூர்த்தி
மதஜிஹ்வா சமேத ஸதாசிவன்
விகடா சமேத ஆமோதன்
கூர்ணிதாந்நா சமேத துர்மதன்
பூதி சமேத ஸுமுகன்
பூமி சமேத ப்ரமோதன்
தவிரம்பா சமேத ஏகபாதன்
உமா சமேத த்விபாதன்
மாரூபீ சமேத ஆரன்
மகரத்வஜா சமேத வீரன்
விகர்ணு சமேத ஷண்முகன்
ப்ரகுடீ சமேத வரதன்
லஜ்ஜா சமேத வாமதேவன்
தீர்க்ககோணு சமேத
வக்ர துண்டன்
தநுர்தரீ சமேத த்விதண்டன்
யாமிநீ சமேத ஸேநாநீ
ராத்ரீ சமேத க்ராமணீ
சந்த்ரகாந்தா சமேத மத்தன்
சசிப்ரபா சமேத விமத்தன்
லோலாக்ஷீ சமேத
மத்தவா ஹநன்
சபலா சமேத ஜடீ
ருஜ்வீ சமேத முண்டீ
துர்பகா சமேத கட்கீ
சுபகா சமேத வரேண்யன்
ஶிவா சமேத வ்ருஷகேதநன்
துர்கா சமேத பக்ஷ்யப்ரியன்
குஹப்ரியா சமேத கணேசன்
காளீ சமேத மேகநாதன்
காலஜிஹ்வா சமேத கணேசன்

தீக்ஷிதரின் காணிக்கை

சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் 24 கணபதி கீர்த்தனங்களை இயற்றியிருக்கிறார். ஒவ்வொன்றிலும் அந்த மூர்த்தியின் தியான சுலோகங்கள் அடங்கியுள்ளன. திருவாரூரில் கமலாலயக் குளத்திலுள்ள விநாயகரைக் குறித்து கௌளை ராகத்தில் ''ஸ்ரீ மஹா கணபதி அவதுமாம்'' என்று பாடியிருக்கிறார். இவரை ''சுவர்ணகர்ஷண விக்னராஜா'' என்று இதில் குறிப்பிட்டிருக்கிறார்.

தியாகராஜர் சந்நிதி பிராகாரத்தில் வலம்புரி விநாயகர் காணப்படுகிறார். இவரைப் பார்த்துத்தான் தீக்ஷிதர் ஹம்ஸத்வனி ராகத்தில் ''வாதாபி கணபதிம் பஜே'' என்று பாடினார்.

இக்கோவிலில் ஐந்து முகங்கள் கொண்ட கணபதி ஒருவர் இருக்கிறார். ''பஞ்சமாதங்க முக கணபதி'' என்று பிலஹரி ராகத்தில் இவரை தீக்ஷிதர் பாடியிருக்கிறார்.

சுந்தரமூர்த்திக்கு எதிரில் ஒரு அலமாரியில் மூலாதார கணபதி எழுந்தருளியிருக்கிறார். குண்டலினி சக்தியைக் குறிக்கும் பாம்பின்மீது அவர் நடனமாடிக் கொண்டிருக்கிறார். இவரை தான் ''மூலாதார சக்ர விநாயகர்'' என்று தீக்ஷிதர் பாடியிருக்கிறார்.

வல்லப கணபதிக்கு 10 கரங்கள். இவரைக் குறித்ததே வல்லப நாயகிகஸ்ய என்ற தீக்ஷிதர் கிருதி.

ஷோடச விநாயகர்கள்

பாலஸ் தருண பக்தௌ ச வீர சக்தி த்வஜஸ்ததா
சித்திருச்சிஷ்ட விக்நேச ஃக்ஷிப்ரோ ஹேரம்பநாயக ஃ
லக்ஷ்மி கணோ மஹா விக்னோ விஜய ஃ கல்பக ஸ்தக ஃ
ஊர்த்துவ வக்னேச பரியந்தா ஃ
ஷோடசை தே கணதிபா ஃ
தர்மமர்த்தம் ச காமம் ச லபதே
யத் பிரசாதாத ஃ ஸ்தோத்திரம் தத்விக்ன
ராஜஸ்ய கத்யதே ஷோடஸாத்மஜ ஃ ||

1. பால கணபதி

கரஸ்தகதலி சூதபந ஸேக்ஷுக மோதகம் பால
ஸூர்யப்பிரபாகரம் தேவம் பால கணதிபம் ||

நான்கு கைகள், வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு ஏந்தியவர், யானைமுகம், பால சூரியனைப் போன்ற நிறம், குழந்தை வடிவம்.

2. தருண கணபதி

பாஶாங்குசா பூபகபித்த ஜம்பூபலம்
திலாந்வேணும்பி ஸ்வஹஸ்தை ஃ ।
த்ருத ஃ ஸதா யஸ்தருணருண ஃ
பாயாத் ஸ யுஷ்மாந் தருணோ கணேச ஃ ||

யானை முகம், எட்டு கைகள், பாசம், அங்குசம், மோதகம், விளாம்பழம், நாவற்பழம், தந்தம், திலம், கரும்புத்துண்டு, பகல் சூரியனைப்போல மேனி.

3. பக்த கணபதி

நாலிகேராம்ர கதலீ குடபாயஸ தாரிணம் ।
ஶரச் சந்திராபவ புஷம் பஜே பக்த கணதிபம் ||

சரத்கால சந்திரன் போல வெண்ணிறம், நான்கு கைகள், தேங்காய், மாம்பழம், வாழைப்பழம், அமுத கலசம், யானை முகம்.

4. வீர கணபதி

வேதால ஶக்தி ஶர கார்முக சக்ர கட்க
கட்வாங்க முத்கர கதாங்குஶ நாகபாஶாந் ।
ஶூலம் ச குந்தபரசு த்வஜமுத்வஹந்தம்
வீரம் கணேச மருணம் ஸததம் ஸ்மராமி ||

தம்முடைய 16 கைகளில் வேல், அம்பு, வில், சக்கரம், கத்தி, கேடயம், சம்மட்டி, கதை, அங்குசம், நாகம், பாசம், சூலம், குந்தம், மழு, கொடி, வேதாள சக்தி இவற்றுடன் வீர சுவருபத்துடன் உள்ளவர்.

5. சக்தி கணபதி

ஆலிங்க்ய தேவீம் ஹரிதாம் நிஷண்ணம்
பரஸ் பரஸ் ப்ருஷ்டகடௌ நிவேஷாம் ।
ஸந்த்யாருணம் புஷ்பஸ்ரிணீ
வஹந்தம் பயாபஹம் சக்தி கணேச மீடே

நான்கு கைகள், அபயம், பாசம், புஷ்பமாலை, பச்சை நிற மேனியுடைய தேவியை அணைத்துள்ள கை, மாலை சூரியனின் செந்நிறத்துடன் விளங்குபவர்.

6. த்வஜ கணபதி

யஃ புஸ்தகாக்ஷகுண தண்டக மண்டலு ஸ்ரீ
நிர்வர்த்ய மாநகரபூஷண இந்து வர்ணம் ।
ஸ்தம்பரே மாநந ச துஷ்டய ஸோபமாநம்
த்வாம் ஸம்ஸ்மரேத் த்வஜ கணாதிபதே ஸதந்ய ஃ ॥

வெண்மையான நான்கு யானை முகம், நான்கு கைகளில் புஸ்தகம், ருத்ராக்ஷ மாலை, தண்டம், கமண்டலம், மின்னல் கொடி போன்ற கை வளையங்களை தரித்தவர்.

7. பிங்கள கணபதி

பக்வசூதபல கல்ப மஞ்ஜரீம்
இக்ஷுதண்ட திலமோதகைஸ் ஸஹ ।
உத்வஹந் பரசுஹஸ்த தே நம ஃ
ஸ்ரீஸம்ரித்தியுத தேவ பிங்கல ॥

நான்கு கைகளில் மாம்பழம், பூங்கொத்து, கரும்புத்துண்டு, பரசு, துதிக்கையில் எள்ளுருண்டை, பொன் கலந்த பசுமை நிறம்.

8. உச்சிஷ்ட கணபதி

நீலாப்ஜம் தாடிமீ வீணாசாலி புஞ்சாக்ஷ ஸூத்ரகம்।
தத துச்சிஷ்டா நாமாயம் கணேசஃ பாது மோக்ஷத ஃ॥

ஆறு கரங்கள், நீலோத்பலம், மாதுளை, வீணை, நெற்கதிர், ருத்ராக்ஷ மாலை, கயிறு, நீலவர்ண மேனி.

9. விக்நராஜ கணபதி

பாசாங்குச ஸ்வதந்தாம்ர பலவாநாகு வாஹந ஃ॥
விக்நம் நிஹந்து நஸ்ஸர்வம் ரக்த வர்ணோ விநாயக ஃ॥

ரத்தம் போன்ற வர்ணம், நான்கு கைகள், பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம், மூஞ்சுறு வாகனம், விக்னங்களை நீக்குபவர்.

10. க்ஷிப்ர கணபதி

தந்த கல்ப லதா பாஶ ரத்ன கும்பாங்கு ஸோஜ்வலம்
பந்தூக கமநீயாபம் த்யாயேத் க்ஷிப்ர கணாதிபம்

நான்கு கைகள், தந்தம், கொடி, பாசம், அங்குசம், துதிக் கையில் ரத்ன கும்பம், செம்பருத்தி புஷ்பம் போன்ற மேனி.

11. ஹேரம்ப கணபதி

அபயவரத ஹஸ்த ஃ பாஶ தந்தாக்ஷமாலா
ஸ்ரிணி பரசு ததாநோ முத்கரம் மோதகம்ச ।
பல மதிகதஸிம்ஹ ஃ பஞ்ச மாதங்க வக்த்ரோ
கணபதி ரதிகௌர ஃ பாது ஹேரம்ப நாமா ॥

ஐந்து யானை முகங்கள், 10 கைகள், அபயம், வரதம், பாசம், தந்தம், ருத்ராக்ஷம், கயிறு, பரசு, சம்மட்டி, மோதகம், பழம், மஞ்சள் கலந்த கறுப்பு நிறம், சிம்ம வாஹனம்.

12. லக்ஷ்மி கணபதி

பிப்ராண ஶுகபீஜ பூரகமலம்
மாணிக்ய கும்பாங்குசம்
பாசம் கல்பலதாம் ச கட்க
விலஸஜ் ஜ்யோதி ஸ்ஸுதா நிர்ஜர ஃ ।

ஶ்யாமே நாத்த ஸரோ ரு ஹேண
ஸஹிதோ தேவீத்வயே நாத்திகே
கௌராங்கோ வரதாந ஹஸ்த
கமலோ லக்ஷ்மீ கணேஶோ வதாத் ॥

எட்டுக் கைகளில் கிளி, மாதுளை, கலசம், அங்குசம், பாசம், கற்பகக் கொடி, கட்கம், வரதம், அமிருதம் போன்ற வெண்மை நிறம். நிலத்தாமரையை கையில் தரித்தவர். இரண்டு தேவி களுடன் கூடியவர்.

13. மஹா கணபதி

கல்ஹாராம் புஜ பீஜபூரக கதா
தந்தேக்ஷு பாணிஸ் ஸதா
பிப்ராணோ மணிகும்பஶாலி
கலஶௌ பாசம் ச சக்ராந் விதம்

கௌராங்க்யா ருசிரார விந்த கரயா
தேவ்யா ஸதா ஸம்யுத ஃ
ஶோணாங்க ஶுபமாத நோது
பகவாந் நித்யம் கணேஶோ மஹாந்

10 கைகளில் மாதுளை, கதை, கரும்பு, தாமரை, நீலோத்பலம், நெற்கதிர், பாணம், சக்கிரம், பாசம், தந்தம், வில், துதிக்கையில் ரத்னக்கலசம், மடி மீது தேவி, முக்கண்கள்.

14. புவனேச கணபதி

ஶங்கேக்ஷு சாபகுஸுமேஷு குடார பாஶ
சக்ராங்குஸௌ கலம மஞ்ஜரி காகதாத்யை: |
பாணிஸ்திதை: பரஸமரஹித பூஷணஶ்ரீ
விக்நேஸ்வரோ விஜயதே தபநீய கௌர: ||

10 கைகளில் சங்கம், கரும்பு, வில் புஷ்ப பாணம், கோடரி, பாசம், சக்கரம், அங்குசம், நெற்கதிர், புஷ்பக் கொத்து, கதை, பொன் போன்ற மேனி.

15. நிருத்த கணபதி

பாஶாங்குஶா பூப குடா தந்த
சஞ்சத் கராக்லுப்த வாநாங்குவீயகம்
பீதப்ரபம் கல்பதரோரத: ஸ்தம்
பஜாமி நிருத்தோப்பதம் கணேசம் ||

ஒரு காலைத்தூக்கி நர்த்தனம், ஆறு கரங்கள், பாசம், அங்குசம், கொழுக்கட்டை, கோடரி, ஒடிந்த தந்தம், கற்பக மரத்தடியில் வாசம்.

16. ஊர்த்துவ கணபதி

கல்ஹாரசாலி கமலேக்ஷு சாபபாண
தந்த ப்ரரோஹ கதீ: கநகோஜ் ஜ்வலாங்க:
ஆலிங்க நோத்யகரோஹரிதாங்கயஷ்ட்டயா
தேவ்யாதி சத்வ பயமூர்த்வ கணேஶ்வரோ மே ||

ஆறு கரங்கள், நீலநிற புஷ்பம், நெற்கதிர். தாமரை, கரும்பு, வில், பாணம், தந்தம், பொன்னிற மேனி, பச்சை நிறமேனி, தேவியை தழுவுபவர், நமக்கு அபயமளிப்பவர்.

பல ஶ்ருதி

இதி விரசிதம் கணேச மூர்த்தி
த்யான பரம் ஸ்தவமாக மாத்சாரம் |
படதி சததம் கணேசம் பக்தியா
திரிஜகதி தஸ்ய சிதப்ய லப்யம் ||

———

மூலாதாரைக நிலயா 9

கணபதியின் உபதேசம்*

குதாதி த்வ்யங்குல மூர்த்வம் து லிங்கா தேகாங்கு லாதய:!
மூலாதாரஸ் திரிகோணரூபம் சதுர்தள ஸரோருஹம்
வ ச க்ஷ ஸ க்ஷரே யுக்தம் ல ஸ தோங்கார கர்ணிகம்
ததிரஸ்தம் வல்லபீ ரம்யம் கணேஸ்வர முபாஸ்மஹே

உடம்பில் குத (ஆஸனவாய்) பாகத்திற்கு இரண்டு அங்குலம் மேலாக மூலாதாரத்தில் நான்கு தளங்களில் வ, ச, க்ஷ, ஸ என்ற அக்ஷரங்களால் அலங்கரிக்கப்பட்ட திரிகோண மத்யத்தில் ஓங்காரம் என்ற கர்ணிகையில் வல்லபீ சமேதனாக கணபதி வீற்றிருக்கிறார்.

ஆறு ஆதாரங்களில் மூலாதாரமே மிகமிக முக்கியமானது. அதனால்தான் இந்த உடல் பறந்து போய் விடாமலும், பூமியில் அழுந்திப் போய் விடாமலும் இருக்கிறது. யோக சாஸ்திரம் இவரை பிரணவநாத ரூபமாகக் கூறுகிறது.

ஒளவையார் அருளிச்செய்த விநாயகர் அகவல் முழுவதுமே இந்த யோக சாஸ்திர விளக்கமேதான்.

திருமூர்த்திகளுக்கும் உபதேச முகமாயிருக்கும் பராசக்தி சுவரூபமே ஒளவை. இவள் பாடிய ''வாக்குண்டாம்'' என்ற செய்யுளில் விநாயக மூர்த்தியின் பெருமைகள் யாவும் அடங்கியிருக்கின்றன. விநாயகரின் அருளால் உலகத்தைப் பகட்டுகின்ற அழகு நீங்கி, பதினான்கு உலகத்தையும் ஆகர்ஷணம் செய்யும் தவ வடிவைப் பெற்றாள் ஒளவை. வெளியே இருக்கப்பட்ட மாயை முதுமையுடனும் உள்ளே இருக்கப்பட்ட ஞானம் என்றும் இளமையுடனும் ஒளவை உருவத்தில் கலந்து நின்றன.

ரூபத்தில் அரூபமான தெய்வ தத்துவம் மறைந்திருக்கிறது. அதைப் பார்ப்பதே ஞானம். இதைத்தான் அவள்

''ஈசன் எனக் கருதி எல்லா உயிர்களையும் நேசத்தால் நீ நினைத்துக் கொள்'' என்று உபதேசிக்கிறாள்.

விநாயகர் அகவல் சிறுபிள்ளையாக கீத்துக்கொட்டகைப் பள்ளியில் படித்தது. அதே விநாயகர் அகவலை இப்போது

---

* ஒளவை அருளிய ''விநாயகர் அகவல்'' பின்னால் சேர்க்கப்பட்டுள்ளது. அதன் விளக்கமே இந்த அத்தியாயம்.

ஊன்றிக் கவனித்தால் அதற்குள் எவ்வளவு தத்துவார்த்தங்கள்! ஔவைப்பாட்டி. 72-வரிகளில் யோக சாஸ்திரத்தை புகுத்தி யுள்ளது கடுகினில் கடலைப் புகுத்தியது போன்றதே.

திருவடிப் பெருமை

செந்தாமரைப் பூம்பாதச் சிலம்பில் ஆரம்பித்து, விரை கழல் சரணே என்று முடிக்கும் அற்புதம் வியப்பிற்குரியது.

திருவடி யொன்றுதான் சரணமடைய ஏற்ற இடம், உபாசனைகளில் முதல் இடம் பெறுவது குரு பாதுகைகளே. இங்கே விநாயகர் ஔவைக்கு குருவாக இருந்து உபதேசிக்கிறார். ஆகவே, ஔவை ஆரம்பத்திலும் முடிவிலும் பாதம் அணியும் சிலம்பையும், கழலையும் குறிப்பிடுவதன் மூலம் திருவடிகளையே நினைக்கின்றார்.

சிலம்பு ஒலி நாதத்தை குறிப்பிடுகிறது. நாதத்திலிருந்தே அனைத்தும் தோன்றின. இது சிருஷ்டி கழலில் எல்லாம் ஒடுக்கம். அகவல் ஆரம்பத்திற்கு சிருஷ்டியின் சின்னத்தையும், முடிவிற்கு ஒடுக்கச் சின்னத்தையும் மிகப் பொருத்தமாக அமைத்திருக்கிறார் ஔவை.

உடலில் இடுப்பிற்குக் கீழ் உள்ளது மூல நிலம். அதுதான் மூலாதாரம். அங்கு எப்போதும் மூலக்கனல் சூடு இருக்கும். உடலில் உள்ள பொறிபுலன் எல்லாம் அக்கனலிலிருந்தே உயிர்ப்பிக்கின்றன. ஆன்ம வாழ்விற்கு ஆரம்பம் அக்கனலே. மூலாதாரத்தில் நாத நயம் பல தோன்ற ஆனந்த நடனம் ஆடுகிறார் பிள்ளையார். அங்குதான் திருவடி தரிசனம் கிடைக்கிறது.

ஐந்தொழில் (7-வது வரி)

படைத்தல், அழித்தல், காத்தல் இம்மூன்று தொழிலும் உடல் சம்பந்தப்பட்டது.

மறைத்தல், அருளல் (மயக்கமும் தெளிவும்) உயிர் சம்பந்தப் பட்டது.

இந்த ஐந்தொழிலையும் ஐந்து கரங்களால் கணபதி செய்கிறார். எழுத்தாணி திருக்கரம் படைப்பு, கொழுக் கட்டை கரம்-காப்பு. அங்குசக் கரம்-அழித்தல். பாசத்திருக்கரம்-மறைத்தல். அமுதக்கலச (தும்பிக்கை) கரம்—அருளல். (அதனால் தான் யானையை அதன் துதிக்கையைக் கொண்டு தலையில் தொடச் சொல்லும் வழக்கம் இருந்து வருகிறது.)

''ஒழுவில் ஒடுக்கம்'' என்ற நூல் இந்த ஐந்தொழில்கள் பற்றி விவரிப்பதாவது:

பொறிகளில் ஆன்மா தொடர்பு கொள்ளல்—படைப்பு
(மனதால் ஒரு பொருளை எண்ணல்)

அதனால் அறிவனவற்றை அனுபவித்தல்—காத்தல்
(அப்பொருளில் வேட்கை)

அதனில் ஆழ்ந்து விடுவது—அழித்தல்
(அது என்று கிடைக்கும் என்ற ஆவல்)

அதனின் இன்பமயமாதல்—மறைப்பு
(அப்பொருளின் மேல் மயக்கம்)

அதனின்று தெளிவு பிறத்தல்—அருளல்
(அதை தெரிந்துக்கொள்ளல்)

இப்படி கரண நிலையில் ஐந்தொழில்களும் நடைபெறுகின்றன.

முத்தியில் அருள் வடிவாதல்—படைப்பு
ஆனந்தப் பேறடைதல்—காப்பு
அதில் தீவிரப்படுதல்—அழிப்பு
காண்பவன், காட்சி, காணப்படும் பொருள்
(திரிபுடி) தொன்றுமை—மறைப்பு
இவை நான்கும் எக்காலமும் விளங்கல்—அருளல்

ஆணவ யானையை அங்குசத்தால் அடக்கி, பாசத்தால் பிணித்து, உயிர்களுக்கு விடுதலை தருகிறார் விநாயகர். இது பிண்ட நுட்பம்.

துரிய மெய்ஞான அற்புதம் (13-வது வரி)

ஐம்புலன்களின் செய்கைகளில் தொடர்பு கொள்ளும் ஆத்மா விழிப்பு நிலையில் அல்லலுறுகிறது (ஜாக்ரத் அவஸ்தை).

கனவு உலகில் மனம் எங்கெங்கோ தாண்டுகிறது
(ஸ்வப்னவஸ்தை).
ஆழ்ந்த உறக்கம் (சுழுப்தி) மறதி நிலை.

மனம் பிராணனில் அடங்க, சித்தம் அருள் உணர்வில் ஒன்றி நிற்க நிற்பது துரீய நிலை. மேலான இந்த உணர்வில் மெய்ஞானம் ஏற்படும். இது துரீயாதீத நிலை.

காணும் போது கரிமுகம்
ஊன்றி நோக்கினல் ஞான ஆகாயம்
இன்னும் அழுந்தி உணர்ந்தால்
பிரணவ ஞானக்கனல்

இதைத்தான்,

களிறு முகத்தவனாய் காயஞ் செந்தீயின்
ஒளிரும் உருக்கொண்ட தென்னே—அளறுதோறும்
பின்னுரையூர் ஆரல் ஆரும் பெரும்படுகர்
மன்னுரை யூரான் மகன்.

என்கிறது விநாயகர் இரட்டை மணிமாலை. இதைத்தான் ஔவை,

''சொற்பதம் கடந்த துரிய மெய்ஞான
அற்புத நின்ற கற்பகக்களிறே'' என்கிருள்.

ஞானத் தெளிவு (26-வது வரி)

ஜீவன்கள் (பசு) நெருப்பைப்போல் உள்ளவை. பரமாத்மா (பதி) நெருப்பின் சூடுபோல் உள்ளவர். நெருப்பின் ஒளிபோல் உள்ளது மாயை.

நெருப்பின் சூடு அருவமாகி அகத்தும் புறத்தும் வியாபிக்கும். சூடு இல்லேயேல் நெருப்பும் இல்லே, ஒளியும் இல்லே. நெருப்பும், சூடும், ஒளியும் போல பசுவும், பதியும், பாசமும் ஒன்றையொன்று பிரிக்க முடியாது.

பதி பேரறிவையுடையது
பதியை அறியக் கூடியன பசு
ஆனல் அதை அறிய
முடியாதபடி இருக்கிறது பாசம்.

இதை அறிந்து''பாசம் அகன்று நின்பதியை உணர்ந்துகொள் இரண்டிற்கும் இடையில் உன்னே நீ உணர்ந்தாயானுல் உனக்கொரு கேடும் இல்லே'' விநாயகர் ஔவைக்கு செய்த உபதேசம் இது.

ஐம்புலன் தன்னே அடக்கும் உபாயம் (வரி-26)

ஐம்புலன்களின் செய்கை மூலம் பெரும்பாலும் அழிவே ஏற்படும். அசுணம் என்கிற பறவை ஓசை கேட்டு அழியும். ஆண் யானேயை பிடிக்க பெண் யானேயை அனுப்புவர். அதன் மையலில் சிக்கிய ஆண் யானே படுகுழியில் விழும். தூண்டிலிலுள்ள இரைச்சித் துண்டுக்கு விரும்பிய மீன் உயிரையே பலிகொடுக்கிறது.

உலகியல் பற்று குறையக் குறைய, சமயச் சார்பு பெருக பெருக ஐம்புல வேட்கை படிப்படியாக நொடிந்துவிடும்.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்றைந்தின்
வகை தெரிவான் கட்டே உலகு

என்கிருர் திருவள்ளுவர்.

ஔவையார் தன் குறளில்
''ஐந்துபுலனின் வழியறிந்தால் பின்னே
துஞ்சுவதில்லே உடம்பு'' என்கிருர்.

கருவிகள் ஒடுங்கும் நிலே (வரி-29)

இருள், மறதி, அறியாமை, துன்பம் என்ற நிலேயில் இருக்கிறது ஆத்மா. இவைகளுக்குக் காரணம் ஆணவம்.

இருள் கலவாத ஒளி, அறியாமை கலவாத அறிவு,
மறதி கலவாத நினேவு துன்பம் கலவாத இன்பம்

என்ற சுத்தநிலே அடைய வேண்டும்.

சீவன் நல்ல நிலம்போல் உள்ளது
ஆன்மா நீர் போல உள்ளது
ஆணவம் நீருள் உப்பு போலுள்ளது
கன்மம் நீர் மேல் எழும் காற்று போல் உள்ளது.

ஆன்மா அறிவுக் காற்றால் எழும் அலைபோல் உள்ளது. காற்றைப்போன்ற கன்மத் (செயல்) திற்குத் தக்கபடி விருப்பு அறிவு செயல் விளையும்.

எழுத்துகளில் 'அ' கரம் அகங்காரத்தை செலுத்தும்.
'உ' கரம் புத்தியை செலுத்தும்.
'ம' கரம் மனதை செலுத்தும்.
'விந்து' சித்தத்தை செலுத்தும்.
'நாதம்' உயிரை செலுத்தும்.

இந்த எழுத்துகளை எல்லாம் சேர்த்தால் ''ஓம்காரம்'' என்ற பிரணவம் ஏற்படும்.

கடல் அலை விழுந்து எழுவதுபோல அறிவு செயல்படும். மறதியும் நினைவும், மாறி மாறி வரும். மெய், வாய், கண், மூக்கு, காது இவைகளை மனம், புத்தி, சித்தம், அகங்காரம் அசைக்கும். பம்பரம்போல் ஆன்மாவை இவை சுழன்றபடியே இருக்கும்.

தத்துவங்கள் 36. தாத்துவிகங்கள் 66*. இங்ஙனம் ஆட்டிப் படைக்கும் பணியாளர்களாக உதவ வந்த அவைகளை நாம் எஜமானர்களாக்கி அதற்கு கீழ்படிகிறோம்.

பிஞ்சாய் இருக்கும்போது, ஓடும் வித்தும் பிரிவு படாமல் இருந்தன. பழமான நிலையில் ஓடும் வித்தும் பிரிவுபடும். அறிவு முதிராப் பருவத்தில் பிரியாது இருந்தது மும்மலம் (ஆணவம், கன்மம், மாயை). அறிவு முதிர்ந்த சமயம் நீங்கும்.

குறைவிலா நிறைவான அறிவு பரமன். குறையே நிறைந்த அறிவுடையது ஆத்மா. அடியோடு குறைகளை அகற்ற வேண்டும். அதற்காகவே உடல் கரண புவன போகங்கள் அளிக்கப்பட்டுள்ளது.

ஒன்பது வாயில் (வரி-33)

இந்த உடம்பில் ஒன்பது துவாரங்கள் இருக்கின்றன. அதன் வழியாக உயிர் போகாமல் தங்கியிருப்பது பேராச்சரியம்.

காமிக்கு குறிவழி கீழிறங்கி விரயமாகும் விந்து, ஐம்புலன் கதவை அடைக்கும் அறிவுடையோர்க்கு சிவசக்தி கனலால் மேலேறும். இதுவே குண்டலினி** யோகம்.

---

* தத்துவங்கள் விவரம் பற்றி பிரதிபா பிரசுரத்தின் 'ஸ்ரீசக்ர நாயகிகள்' புத்தகத்தில் காணலாம்.

** குண்டலினி யோகம் பற்றிய முழுவிவரங்கள் பிரதிபா பிரசுரம் வெளியிடவிருக்கும் ''குண்டலினி சக்தி''யில் விரிவாகக் காணலாம்.

ஒரெழுத்து மந்திரத்தை உருவேற்றுவது; பிராணயாமம் செய்வது இப்படி பல முறைகளால் ஒன்பது வாயிலும் ஐம்புலக் கதவுகளும் தானே அடைபடும்.

27-28 வரிகளில் ''ஐம்புலன் தன்னை அடைக்கும் உபாயம்'' என்றார். அது புலன்களை அடக்குவது. இங்கு கூறுவது பொறி புலன்களை செயலற்றனவாக செய்வது. புலன்களை அடக்குவது கிரியாசக்தி. புலன்கள் செயல்படாமல் செய்வது ஞான சக்தி.

ஆதார நிலை (வரி-35)

யோகம் இருவகை. அவை ஆதாரம். நிராதாரம். ஆறு ஆதாரங் களிலுள்ள மூர்த்திகளை நியதிப்படி நினைக்க நினைக்க ஆன்ம உணர்வு சுரக்கும். இந்நிலையில் நினைவு, நினைக்கும் பொருள், நினைப்பவன் (திரிபுடி) நீங்கும். இதுவே ஆதார யோகம்.

நானே இறைவன், இறைவனே நான் என்கிற நிலை வந்து விடுவது நிராதார யோகம்.

அங்குசத்தால் யானையை அடக்குவது போல பிராணனை இடை பிங்கலை வழி விரயம் செய்யாமல் ஆறு ஆதார வழியே செலுத்தல் இந்த யோகத்திலுள்ள முக்கியம்.

சேவிக்கும் மந்திரம் செல்லும் திசை பெற
ஆவிக்குள் மந்திரம் ஆதாயம் ஆவன
பூவுக்குள் மந்திரம் போக்கற நோக்கிடில்
ஆவிக்குள் மந்திரம் அங்குசமாமே

என்று இதை திருமூலர் குறிப்பிடுகிறார்.

மூன்று கலை (37-38 வரி)

சூரியன், சந்திரன், அக்னி என்று மூன்று நாடிகள். இவை பிங்கலை, இடைநிலை, சுழுமுனை என்றும் கூறப்படும். இடைகலை உடம்பில் இடது பாகத்திலும், பிங்கலை வலது பாகத்திலும் சுழுமுனை நடுவிலும் உள்ளது.

இடைகலை பிங்கலை இடையறாது நிகழ்தலினால்தான் உயிர் உடலில் நிற்கிறது. ''ஔவையே நீ இந்த இரு வழி செயல்படும் பிராண வாயுவை நிறுத்து. அவைகளை. சுழுமுனை வழியே செலுத்து உச்சி ஒட்டில் ஞானவெளி உள்ளது. அதனோடு உறவாடச் செய்'' என்று கணபதி உபதேசிக்கிறார்.

ஐந்தெழுத்து (வரி-69-70)

''சிவாய நம எனச் சித்தம் ஒடுக்கி அவாயம் அறவே அடிமைய தாக்கி சிவாய சிவ சிவ என்றென்றே சிந்தை அவாயம் கெட நிற்க ஆனந்தமாமே'' என்கிறார் திருமூலர்.

வேதம் கணபதியின் நாதம். ஆகமங்கள் அவரை ஆராதிக்க உரைத்த அருள் மறைகள். ஓங்காரமே அவர்திருமேனி. அகத்தும் புறத்தும் வாழ வழி கற்பிக்கும் வழியை இந்நூல் விவரிக்கிறது.

10

மஹா கணபதி தத்துவம்

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம் கம் கணபதயே
வரவரத சர்வஜனம் மே வசமானம் ய ஸ்வாஹா ‖

—மூலமந்திரம்

யம் பிரஹ்ம வேதாந்தவிதொ வதந்தி
பரம் ப்ரதானம் புருஷம் ததாந்யே ।
விஸ்வோதிகமே காரண மீஸ்வரம்
வர தஸ்மை நமோ விக்ந நிவாரணாய ‖

எந்த வேதாந்திர சாஸ்திர அனுபவத்தினால் பிரம்ம ஞானிகள் எந்த விநாயகரை பிரம்மம் என்றும், பரம் என்றும், புருஷ தத்துவம் என்றும், சராசர பிரபஞ்ச வடிவம் என்றும், சிருஷ்டி கர்த்தா என்றும், ஈஸ்வரன் என்றும் கொண்டாடுகிறார்களோ, அந்த விநாயகரை வாழ்க்கையில் குறுக்கிடும் சகல விக்னங்களையும் போக்கும் பொருட்டு மனிதர்கள் வணங்குகிறார்கள்.

முப்பத்து முக்கோடி தேவர்கள், அசுரர்கள், யக்ஷர்கள், கின்னரர்கள், சித்தர்கள், மனிதர்கள், ஆகியோரெல்லாம் கணபதியை வழிபடுகிறார்கள். இதற்கு ஆதாரம் பார்க்கவ புராணம்.

பார்க்கவர் வியாசரின் பிரதம சிஷ்யர். வியாசர் பார்க்க வருக்கு கணேச மகிமையை எடுத்துரைத்தார். பார்க்கவர் அதை உலக மக்களுக்கு அளித்தார்.

கணபதியின் ஸ்வரூபமே மந்திர வடிவம். இவர் மந்திரம் 28 எழுத்துகளைக் கொண்டது. அதை ஜபிக்கும்போது எழும் ஒலியே கணபதி ரூபம்.

எல்லா உபாசனைகளுக்கும் முன்பாக மேற்கொள்ள வேண்டியது கணபதி உபாசனை. மகா கணபதியின் சக்ர பூஜை, மந்திர மகிமை, சதுராவ்ருத்தி தர்ப்பணத்தின் பெருமை ஹோமத்தின் சிறப்பு, மந்திர ஜபத்தின் மேன்மை ஆகிய எல்லா விஷயங்களும் ''குஹ்ய நாம சாகஸ்ரம்'' என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவரை பத்து கைகளில், மாதுளம் பழம், கதை, கரும்புவில். சூலம், சக்கிரம், தாமரைப்பூ, பாசம், நீராம்பல் புஷ்பம், தானியக் கதிர், தந்தம், ரத்ன கலசம் இவைகளை ஏந்தியவராக பாவித்து தியானிக்க வேண்டும்.

சகஸ்ரநாம பாஷ்யத்தில் ஸ்ரீ பாஸ்கரராயர் ''இக்ஷு சாபதர் சூலி சக்ரபாணி, ஸரோஜ ப்ருத் । பாசீ திருதோத்பல: சாலீ மஞ்ஜரீ ப்ருத் ஸவதந்த ப்ருத்'' என்ற நாமாக்களை,

''மாதுலிங்கம் கதேக்ஷுஉத்தம் தனு : சூலம் சுதர்சனம் ।
சங்க பத்ம பாசோத்பல வ்ரீஹி கணிசானி ரதார்த்தகம்''

என்று விளக்கியுள்ளார்.

அபீஷ்டத : என்றால் இம்மையிலும் மறுமையிலும் நிரந்தரமான நன்மையை பயக்கும் கடவுள் என்பதே பொருள்.

மகா கணபதியின் கைகளில் சக்கிரம், தாமரை—விஷ்ணு லக்ஷ்மி சக்திகள்—(தர்மம்.)

சூலம், பாசம்—சிவ பார்வதி சக்திகள் (மோக்ஷம்)

கரும்பு வில்லும், கருங்குவளை மலரும்—ரதி மன்த சக்திகள் (காமம்).

கதை, சம்பா நெற்கதிர்—வராஹ பூமிதேவி சக்திகள் (அர்த்தம்.)

இக்கணபதியின் உபாசனையினால் அறம், பொருள், இன்பம், வீடு, என்ற நான்கினையும் பெறலாம் என்பது இதன் தத்துவார்த்தம்.

அவர் கையிலுள்ள மாதுளம் பழம் பிரபஞ்சத்தையும் அதிலுள்ள முத்துக்கள் அண்டங்களையும் குறிக்கின்றன. ஒடிந்த கொம்பு எழுத்தாணியாக இயங்கி உலகம் உயிர்கள் இவைகளின் தலையெழுத்தை நிர்ணயிக்கிறது. துதிக்கையில் அமிருத கலசம். அம்ருதம் ஞான மயமானது.

மூல மந்திரத்தின் அர்த்தம்

ஓம்—மகா கணபதி சுத்தப் பிரம்மம் என்பதை விளக்குகிறது.
ஸ்ரீம்—லக்ஷ்மி நாரயண
ஹ்ரீம்—கௌரி கிரீச
க்லிம்—ரதி மன்மத
க்லௌம்—பூமிதேவி வராஹ மூர்த்தி தத்துவங்களை விளக்கு கின்றன.
கம்—கணபதியின் கடவுள் வடிவத்தைக் குறிக்கிறது.
கணபதயே—கணபதிக்கு வணக்கம்
வர—மேம்பட்டவனே
வரத—அன்பர்கள் விரும்பியவற்றை அருள்பவனே
சர்வஜனம்—எல்லா உயிர்களையும்
மே—எனக்கு
வசம் ஆனய—வசப்படுத்துவாயாக

ஸ்ரீ வித்யோபாசனையும், மகா கணபதியும

ஸ்ரீ வித்யோபாஸனு மார்க்கத்தின் தொடக்கத்தில் ஸ்ரீ வித்யா கணபதி என்ற கணபதியின் உபாஸனை உள்ளது பொருத்த மானதே. ஸ்ரீ சக்கரத்தில் பூஜை செய்வதற்கு தகுதியை மஹா

கணபதி பஞ்சாவரண சக்ர பூஜை விளைவிக்கிறது. விசேஷ மஹா கணபதியின் மூர்த்தத்தில் அந்தந்த அங்கங்களில் சதுராவ்ருத்தி தர்ப்பணம் செய்வதால் அந்தந்த சிறந்த பலன்களை அடையலாம்.

ஸ்ரீவித்யா உபாசகர்கள் நவாவரண பூஜையில் ஷோடா நியாஸம் உன்ற ஒரு அங்கம் உண்டு. அதை கணேச கிரஹ, நக்ஷத்திர, யோகினீ, ராசி, பீடங்கள் என்பனவாகும். அதில் கணேச நியாஸமாவது:

தியானம்: உதயகாலத்திய பால சூர்யனுக்கொப்பான நிறத்தோடும், யானை முகத்தோடும் மூன்று நேத்திரங்களோடும் பாசம் அங்குசம் வரதம் அபயம் இவை விளங்கும் கைகளோடும் சக்திகளோடும் கூடி விளங்கும் கணேசர்களை நமஸ்கரிக்கின்றேன்.

கணேசர்கள்—சக்திகள்

விக்னேசன்-ஸ்ரீ
விக்னராஜன்-ஹ்ரீ
விநாயகன்-புஷ்டி
சிவோத்தமன்-சாந்தி
வித்னஹ்ருத்-துஷ்டி
விக்னஹந்தா-சாச்வதி
விக்னராட்-ரதி
கணநாயகன்-மேதா
ஏகதந்தன்-ரமா
த்விதந்தன்-காந்தி
கஜவக்த்ரன்-காமினி
நிரஞ்ஜனன்-மோகினி
கபர்த்வான்-தீவ்ரா
தீர்க்கவான்-ஜ்வாலினி
சங்குகர்ண்ன்-நந்தா
விருஷத்துவஜன்-ஸுயசஸ்
கணநாதன்-காமருபிணி
கஜேந்திரன்-உக்ரா
சூர்பகர்ணன்-தேஜோவதி
த்ரிலோசனன்-ஸந்தயா
ல்ம்போதரன்-விக்னநாசினி
மகாநாதன்-ஸ்வரூபிணி
சதுர்மூர்த்தி-காமரதா
சதாசிவன்-மதஜிஹ்வா
ஆமோதன்-விகடா
துர்மதன்-கூர்ணிதானஞ
ஸுமுகன்-பூதி
ப்ரமோதன்-பூமி
ஏகபாதன்-த்விரம்பா
த்விபாதன்-உமா
சூரன்-மாரூபி
வீரன்-மகரத்துவஜா
ஷண்முகன்-விகர்ணு
வரதன்-ப்ருகுடி
வாமதேவன்-லஜ்ஜா
வக்ரதுண்டா-தீர்க்ககோனு
த்வித்தண்டன்-தனுர்த்தரீ
சேநானீ-யாமினி
க்ராமணி-ராத்திரி
மத்தன்-சந்திரகாந்தா
விமர்த்தன்-சசிப்ரபா
மத்தவாஹனன்-லோலாக்ஷி
ஜடீ-சபலா
முண்டி-ருஜவீ
கட்கீ-துர்ம்பகா
வரேண்யன்-சுபகா
வ்ருஷகேதனன்-சிவா
பக்ஷியப்பிரியன்-துர்க்கா
கணேசன்-குஹப்பிரியா
மேகநாதன்-காளீ
கணேசன்-காலஜிஹ்வா

இவர்களை 51 மாத்ருகா ஸ்தானங்களில் நியாஸம் செய்ய வேண்டும்.

11

விநாயகர் ஆலயங்கள்

வாயே திறவாத மௌனத்திருந்துன் மலரடிக்குத்
தீயே நிகர்த் தொளி வீசுந் தமிழ்க்கவி செய்குவனே
மங்கள கணபதி மணக்குள கணபதி
நெஞ்சக் கமலத்து நிறைந்தருள் புரிவாய்.

—பாரதியார்.

கணபதி இல்லாத இடம் ஏது? ஆகவே அவர் கோயில் கொண்டுள்ள இடங்களை எல்லாம் பற்றி குறிப்பிடுவது சாத்தியமில்லை. இருந்தும் மிக முக்கியமான சில ஆலயங்கள் சந்நிதிகள் பற்றி மட்டும் இங்கு குறிப்பிடுவோம்.

(இதற்கு முன்புள்ள கட்டுரைகளில் பிரஸ்தாபம் வந்த ஆலயங்கள் இதில் சேர்க்கப்படவில்லை.)

ஒரு ஊர் பெயரே பிள்ளையார் பட்டி. மற்றொரு கிராமம் பெயர் கணபதி அக்ரஹாரம். முதலில் இவ்விரணடு சந்நிதி களுக்கும் செல்வோம்.

பிள்ளையார் பட்டி பிள்ளையார்

பரஞ்சோதி முனிவர் வாதாபியிலிருந்து கொண்டு வந்த விநாயகரை திருச்செங்காட்டாங்குடியில் பிரதிஷ்டை செய்த போது பல்லவ மன்னன் நரசிம்மவர்மனும் வந்திருந்தான். பிள்ளையார் உருவம் அவன் மனதைப் பெரிதும் கவர்ந்து விட்டது. காரைக்குடியை அடுத்த குன்றக்குடிக்கு மேற்கிலுள்ள ஒரு குன்றை அவன் கண்டபோது இக்குன்றில் அப்பிள்ளையார் உருவத்தை ஏன் அமைக்கக்கூடாது என்று தோன்றியிருக்கிறது. உடனே அங்கு குடைவரைக் கோயில் உருவாகிவிட்டது. கற்பக விநாயகர் அசைக்க முடியாத கணபதியாக அமர்ந்து விட்டார்.

பிள்ளையார் பட்டி காரைக்குடியிலிருந்து மேற்கே எட்டு மைலில் உள்ளது. இங்குள்ள பிள்ளையார் மற்றத் தமிழ் நாட்டுப் பிள்ளையார்களை விட உருவத்தில் வேறுபட்டிருப்பார். துதிக்கை வலமாகச் சுழிந்து இருக்கிறது. இரண்டே கைகள். வலக்கரத்தில் மோதகம். இடக்கரம் இடுப்பிலே. இங்கு சதுர்த்தி விரதத்தை பெண்களே பெரும்பாலும் அனுஷ்டிக்கின்றனர். ஆவணி சுக்ல சதுர்த்தியில் குடத்தினுள் வெள்ளிப் பிள்ளையார் உருவமுள்ள தகட்டைப் போட்டு, தண்ணீர் நிரப்பி பூசை செய்த பிறகு அந்த நீரில் ஸ்நானம் செய்கிறார்கள். ஈரத்தலையுடன் விரதம் இருந்து கோயிலில் தரும் கொழுக்கட்டையை மட்டும் உணவாகக் கொள் கிறார்கள்.

காவேரிக்கரையோரமாக கும்பகோணத்தில் இருந்து திருவையாறு போகும் வழியில் உள்ளது கணபதி அக்ரகாரம். இயற்கை அன்னையின் பொலிவிலே இன்பச் சூழ் நிலையில் அமைந்துள்ளது இந்த ஊர். இங்குள்ள பிள்ளையார் விக்கிரகத்தை அகஸ்திய முனிவரே பிரதிஷ்டை செய்தார் என்று கூறப்படுகிறது இந்த ஊரில் கிராம மக்கள் பிள்ளையார் சதுர்த்தியன்று வீட்டில் பிள்ளையாரைப் பூஜிப்பதில்லை. கொழுக்கட்டைகளைத் தயாரித்து கோவிலுக்கு நைவேத்யம் செய்ய வந்து விடுவார்கள்.

இங்கு சமீப காலம் வரை திருவுளச் சீட்டுப் பழக்கம் இருந்து வந்திருக்கிறது. இக்கிராம நிலங்களுக்கு முன்பெல்லாம் இன்னார் தான் சொந்தக்காரர் என்கிற வழக்கம் இருந்ததில்லை. நிலம் அக்கிரகாரத்திலுள்ள எல்லோருக்கும் பொது. பாசனத்திற்கு வசதியான நிலங்களையும் வசதியற்ற நிலங்களையும் குறிப்பிட்டு சீட்டுகளில் எழுதி குலுக்கி எடுக்கப்படும். அந்த சீட்டில் யாருக்கு எந்த நிலம் என்று வருகிறதோ அதை அவர்கள் விவசாயம் செய்ய வேண்டும். இவ்வழக்கம் கிராம மக்களிடையே ஒரு ஒற்றுமை உணர்ச்சியையும் கடமையுணர்ச்சியையும் ஏற்பட உதவியது என்பது மறுக்க முடியாத உண்மை. விநாயகருக்கு மிகப் பிரியமான இடம் இதுதான என்றும் தன் மகனைக் காண பார்வதி பரமேஸ்வரன் இந்த இடத்திற்கு வந்ததாகவும் புராண வரலாறு கூறுகிறது.

சிவபெருமான் வைத்த போட்டியில் வெற்றி பெற்று மாம்பழத்தை கணபதி பெற்ற கதை எல்லோருக்கும் தெரிந்ததே. இந்தப் போட்டியில் முருகன் உலகத்தையே சுற்றிவந்தான் என்றும் கணபதி தாய் தந்தையரை மட்டுமே வலம் வந்து வெற்றி பெற்றார் என்பது வரலாறு. இது நடந்த இடம்தான் திருவலம். இத்தலம் வடாற்காடு மாவட்டத்தில் சென்னை பெங்களூர் சாலையில் (சென்னையிலிருந்து 75 மைலில்) உள்ளது. இப்பதிககு திருவல்லம் எனற பெயரும் உண்டு.

வலம் வந்த விநாயருக்கு மிக நேர்த்தியான தனி சந்நிதி உள்ளது.

இத்தலத்தின் பிள்ளையாரை வரசித்தி விநாயகர் என்றே அழைக்கிறார்கள். மாம்பழம் பெற்று வாகை சூடிய விநாயகரைக் காண வேண்டுமானால் வேலூர் ஜலகண்டேசுவரர் கோயில் (கோட்டைக்குள் உள்ள) கலியாண மண்டபத்துக்குச் செல்ல வேண்டும். கையில் மாங்கனியுடன் மூஷிக வாகனத்தில் சவாரி செய்யும் 'ஜோரை' சிற்பி மிக அழகாக வடித்திருக்கிறான்.

முக்குறுணி விநாயகர்கள்

மதுரை மீனாக்ஷியம்மன் கோயிலில் மீனாக்ஷியை தரிசித்து விட்டு வடக்கு நோக்கி வந்தால் முக்குறுணி விநாயகரை

தரிசிக்கலாம். மிக காத்திரமான உருவம். விநாயக சதுர்த்தியன்று முக்குறுணி அரிசியை அரைத்து ஒரே மோதகமாகச் செய்து இவருக்கு நைவேத்தியம் செய்வதால் இவருக்கு முக்குறுணி விநாயகர் என்ற பெயர். வண்டியூர் தெப்பக்குளத்தை வெட்டும் போது இப்பிள்ளையார் பூமியிலிருந்து கிடைத்தாராம்.

உருவில் பெரிய கணபதி உள்ள சந்நிதிகள் திருவண்ணாமலை (செங்காவி வண்ணத்துடன் காட்சியளிக்கிறார்) திருவானைக்கா அகிலாண்டேச்வரியை எதிர்நோக்கி இருக்கும் கணபதியும் ஆகிருதியில் பெரியவர். திருச்செந்தூரிலுள்ள கணபதியும் அப்படியே.

மதுரை ஆயிரம் கால் மண்டபத்திலுள்ள ஊர்த்துவ கணபதி உருவில மிகப் பெரியவர். சுமார் 400 ஆண்டுகளுக்கு முன் நாயக்கர் ஆட்சி காலத்தில் இச்சிற்பம் உருவாக்கப்பட்டது என்கிறது சரித்திரம்.

லால்குடிக்கருகில் (திருச்சி மாவட்டம்) அன்பில் என்கிற ஊரில் தகப்பனுரால் காது திருகப்பட்டிருக்கிறார் பிள்ளையார். திருஞான சம்பந்தர் இங்கு வந்தபோது கொள்ளிடத்தில் வெள்ளப் பெருக்கு இருந்ததால் அக்கறையிலுள்ள ஆலய கோபுரத்தைத்தரிசித்து பதிகம் பாடினார். மாணவர்கள் வேதம் ஓதும் ஒலியில இப்பாடல் இறைவன காதில் எங்கே விழப் போகிறது என்று சம்பந்தரே ஐயப்படுகிறார். ஆனுல் இறைவன் காதில் இது விழாமாலா இருக்கும்? தன் பக்கத்திலுள்ள விநாயகா சம்பந்தா பாட்டை ரசிக்காமல் எங்கேயோ கவனமாக இருப்பதை பாாககிறார். உடனே காதைப்பிடித்துத் திருகி 'நம்மை சமபந்தன பாடுகிறான் அக்கரையிலிருநது'' என்று சொல்கிறார். பிள்ளையார் அப்போதே செவி சாய்த்து பாடலைக் கேட்கிறார்.

அன்பில் கோயில் தெற்குப் பிராகாரத்தில் ஒரு மூலையில் இந்த 'செவிசாயதத' விநாயகா கோயிலில் கொலுவிருக்கிறார். ஒரு காலை மடித்து, ஒருகாலை ஊன்றி, தலைசாய்த்து பாடலைக் கூர்ந்து கேட்கும் பாவனையில் இருக்கிறார்.

திருவாரூர் கமலாலயக் குளக்கரையிலே மாற்றுரைத்த பிள்ளையார் சந்நிதியுள்ளது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் விருத்தாசலம் மணிமுத்தாற்றில் இட்ட பொன்னை கமலாலயத்தில் இறைவன் எடுத்துக் கொடுத்தபோது அந்த பொன்னின் மாற்றை உரைத்து சரிபார்த்தவர் இவ்விநாயகர்.

இன்று பிள்ளையாரை பூஜிக்க மஞ்சளைப் பிடித்து பூஜிக்கிறோம் இதை முதன் முதலில செய்தவர் பாலசுப்பிரமணியம். அப்படி மஞ்சளைப பிடித்துவைத்து பூஜித்த இடம் மஞ்சாடி என்பதாகும். இது திருவாரூர் நாகப்பட்டினம் பாதையில் கீழ வேளூர் அருகிலுள்ளது.

பஞ்சமுக விநாயகர்

மஹா கணபதி, சித்தி கணபதி, வித்யா கணபதி, சக்தி கணபதி, மோக்ஷ கணபதி இந்த ஐவரும் ஒன்ருக சேர்ந்ததே பஞ்சமுக விநாயகர். கல்ப சூடாமணி வைதிக ஆகமம், கல்ப சூத்திரம் இவைகளில் இந்த பஞ்சமுக விநாயகர் எப்படி எப்படி அமைக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

புவனேஸ்வரி அதிஷ்டானத்தைச் சேர்ந்த ஸ்கந்தாஸ்ரமம் (சேலம்) மலையில் பஞ்சமுக விநாயகர் 18-அடி உயரத்திற்குக் காட்சி தருகிருர். நானகு பக்கம் நான்கு தலை. மேல் ஒரு தலை. மிக அபூர்மான திருவுருவம்.

ஐந்து தலையுள்ள விநாயகர் ஆலயம் நேப்பாளத்திலுள்ளது. சிங்கவாகன பஞ்சமுக விநாயகரை தரிசிக்க வேண்டுமாஞல் நாகப்பட்டினம் நீலாயதாட்சி அம்மன் கோவிலுக்குச் செல்ல வேண்டும். பஞ்சமுக விநாயகர் இங்கு சிம்ம வாகனத்தில் காட்சி அளிக்கிருர். அழகான இத்திருவுருவம் செம்பிஞல் ஆனது. இவரையே ஹேரம்ப விநாயகர் என்று அழைக்கிருர்கள். திசைக்கு ஒரு முகம் மேலே ஒரு முகம் ஆகிய ஐந்து முகங்களும் அமைந்துள்ளன.

திருவொற்றியூரிலும் உலோகத்தாலான பஞ்சமுக விநாயகரைத் தரிசிக்கலாம், ஆஞல் தலைகள் வரிசையாக உள்ளன.

மத்ய பிரதேசத்தில் நர்மதை நதிக்கரையிலுள்ள ஓங்காரேஸ்வரர் கோவிலில் பஞ்சமுக கணபதி இருக்கிருர். இந்த ஐந்து முகங்களும் சீக்கிரத்தில் கண்டுபிடிப்பது கஷ்டம். ஊன்றி கவனித்து கணபதியை ஒரு சுற்று சுற்றி வந்தால் இந்த ஐந்து முகங்களைக் கண்டு பிடிக்கலாம்.

ஈசுவரனுக்கு ஐந்து முகங்கள். பஞ்சமுக லிங்கங்களில் நான்கு முகம் நானகு பக்கங்களிலும் ஈசான முகம் சூக்ஷ்மமாகவும் இருக்கிறது. தேவி உபாசனையில் நான்கு திக்கில் நான்கு ஆம்ஞயங்களை சொல்லி ஊர்த்வ ஆம்ஞயத்துடன் பூர்த்தி செய்யப்படுகிறது. யுகங்கள் நான்குதான என்ருலும் சத்திய யுகத்தையும் சேர்தது ஐந்து எனக் கணக்கிடப்படுகிறது. புருஷார்த்தங்கள் நான் காஞலும் ஜீவன் முக்திக்கு மேம்பட்ட விதேஹ முக்தி ஒன்று இருக்கிறது. பிரஹாதாரண்யத்தில் ஊர்த்துவ திசையும் சோத்து 5 திக்குகள் குறிப்பிடப்படுகிறது. பஞ்சாட்சரம், பஞ்சகவ்யம், பஞ்சகோசம், பஞ்சாயதன பூஜை, பஞ்ச பிராணனகள், எலலாம் ஐந்தாகவே உள்ளன. பஞ்சமி, பஞ்சபூதேசி, பஞ்ச சங்க்யோப சாரிணி என்று லலிதா சகஸ்ரநாமததில் அமபிகையை குறிப்பிடுவதெல்லாம் அவள் குமாரனுக்கும் பொருந்தும். தைத்ரீயோபநிஷத்தில் உலகத்தில் பார்க்கப்படும் பொருளகள் எல்லாம் ஐந்து (தாந்தம்) என்ற கணக்கிலேயே

அமைந்திருக்கிறது என்கிறது. ஐங்கரன் ஐந்து முகங்களுடன் இருப்பதில் ஆச்சரியமென்ன?

திருப்பதிக்கு போகும் வழியில் ரேணிகுண்டாவிலிருந்து 3 மைலில் புதிதாக பஞ்சமூர்த்தி விநாயகர் ஆலயம் ஏற்பட்டு உள்ளது. ஒரே பீடத்தில் தனித்தனி ஐந்து விநாயகர்கள் ஒன்று சேர்ந்து இருப்பது வேறு எங்கும் காண முடியாது. 1973 பிப்ரவரி 14-ம் தேதி கும்பாபிஷேகம் நடைபெற்றது.

வட வேங்கடவனைத் தரிசிக்கச் செல்பவர்களுக்கு விக்ன மின்றி காரியசித்தி பெற விக்னராஜர் மார்க்கத்தில் அமைந் துள்ளார். அவர் கோயிலைக் கண்ணால் பார்க்காது செல்வது இயலாது. வழியில் இறங்கி அவரை வழிபாடு செய்து செல்பவர் வரப்பிரஸாதிகளே.

கோயம்புத்தூரில் உள்ள சண்முகா தியேட்டர் வாசலில் அமைந்துள்ள பிள்ளையாருக்கு ஐந்து முகம்தான்.

இது குறித்து விசாரித்தபோது—

தியேட்டர் கட்டிய காலத்தில் எதிரே மயானம் இருந்ததால் மக்கள் வரப் பயந்தனர். இதற்காக இப்படி ஓர் ஐந்து முக விநாயகரை வைத்து வழிபட்டு மக்கள் பயத்தைப் போக்கினார்களாம்.

படம் ஆரம்பிக்குமுன் பலர் இக்கோவிலில் விநாயகரை வணங்குகின்றனர். முக்கியமான நாட்களில் சந்தனக் காப்பு, விசேஷ பூஜையும் உண்டு. இன்னொரு விசேஷம்: இந்தப் பிள்ளையார் மேற்கு நோக்கி இருக்கிறார்.

கன்னியாகுமரியில் தக்கிளே அருகே கேரளாபுரத்தில் அரச மரத்தடியில் ஒரு கணபதி இருக்கிறார். ஆவணி முதல் 6 மாதம் கருப்பாகவும், மாசி முதல் 6 மாதம் வெண்மையாகவும் காட்சி யளிக்கிறார்.

கும்பாசி கணபதி

கேரளாவில் ஹரிஹர க்ஷேத்திரம் கும்பாசி என்ற பெயரில் உள்ளது. அங்கு ஒரு குன்றின் மீது கணபதி கோயில் கொண்டிருக் கிறார். இக்குன்றை ''ஆனேகுட்டே'' என்று அழைக்கிறார்கள். இவர் பாண்டவர்களில் ஒருவனான பீமனால் வழிபடப்பட்டவர். உருவமும் பெரிய உருவம். இவர் அனுக்கிரகத்தினால்தான் பீமன் யானை பலம் பெற்றானும். இங்குள்ள பெரிய ஹோம குண்டத்தில் கணபதி ஹோமம் செய்வது மிக விசேஷம்.

மலையாளப் பகுதியில் 'கணபதி வட்டம்' என்ற ஒரு பகுதி உண்டு. திப்பு சுல்தான் படையெடுத்து வந்தபோது இந்த வட்டத் திலிருந்த விநாயகர் ஆலயத்தை இடித்து விக்கிரகத்தையும் சின்னப்படுத்தினான். திப்பு பின்னர் தவறை உணர்ந்து அக்

கோயிலுக்கு பொன்னையும் பூமியையும் தானம் செய்தான். அந்த விநாயகரையே இன்னும் அங்குள்ள மக்கள் வழிபட்டு வருகிறார்கள்.

கையொடிந்த கணபதி

சிதம்பரத்தில் செங்கழுநீர் பிள்ளையாருக்கு ஒரு சந்நிதி யுள்ளது. திப்பு சுல்தான் காலத்தில் முகம்மதியர்கள் இவரது கையை உடைத்து விட்டார்கள். ஊர்மக்கள் இவ்வுருவத்தை அகற்றி விட்டு வேறு பிள்ளையாரை வைக்க முயன்றனர். பிள்ளையார் அவர்கள் கனவில் தோன்றி 'கையொடிந்த உன் மகனை நீக்கி விடுவாயோ?' என்று கேட்டாராம். மக்கள் தங்கள் தவறை உணர்ந்து கையொடிந்த பிள்ளையாரையே வைத்து வழிபட்டு வருகின்றனர்.

இக்கோவில் வேடன் பிள்ளையார் கோவிலுக்கு மேற்கே உள்ளது. மனித முகத்துடன் இருக்கும் நரமுகப் பிள்ளையாரை சிதம்பரம் தெற்கு வீதியில் தரிசிக்கலாம்.

சிதம்பரம் கோவில் வெளிப்பிராகாரத்தில் தென் மேற்கு மூலையில் முக்குறுணி விநாயகர் ஆலயம் உள்ளது. விநாயகர் உருவம் மிக அழகானது. எட்டடி உயரம் உள்ளது.

நடன கணபதிகள்

விநாயகரை ஆடவும் வைத்திருக்கிறார்கள். இந்த நடனத்தை ரசித்த அதிராவடிகள்,

நிலந்துளங்க மேருத் துளங்க நெடுவான்
தலந்துளங்கச் சப்பாணி கொட்டும் கலந்துளங் கொள்
காமரி ஈன்ற கருங்கைக்கடதடத்து மாமாரி ஈன்ற மணி

என்று பாடுறார். நிலம் நடுங்கியது. மேருமலை நிலை பெயர்கிறது. பொல்லாப் பிள்ளையாரும் சப்பாணிக் கொட்டி கும்மாளமடிக்கிறார்.

பிள்ளையாரை நடன கோலத்தில் கண்டு தரிசிக்க வேண்டுமானால் பல சந்நிதிகள் உண்டு. சிதம்பரத்தில் விநாயகர் கற்பகம் போல அடியார்களின் கருத்தறிந்து முடிக்க வல்ல பெருமான். ஆதலின் கற்பக விநாயகர் எனப் பெயர் பெற்றிருக்கிறார். மேலைக் கோபுரத்தை அடுத்து இந்த சந்நிதி உள்ளது. நடன கோலத்திலுள்ள இவருக்கு ஆறு கைகள்.

தன்னோங்கு மலரடியும் தளிரோங்கு சாகைகளும்
மின்னோங்கு முகக் கொம்பும் விரவியகண் மலர்களுமாய்
மன்னோங்க நடமாடு மன்றோங்கு மதிற்குடபால்
பொன்னோங்கல் முன்னோங்கும் பொற்பமர் கற்பகம் போற்றி

என்ற கோயிற்புராணச் செய்யுள் இவரது தியான சுலோகம் போல அமைந்துள்ளது.

மயிலாப்பூர் கற்பகாம்பாள் ஆலயத்தில் கிழக்கு நோக்கி நடன கணபதி சந்நிதியுள்ளது. இவர் சுவயம்புவாகத் தோன்றியவர்.

சேயாற்றில் வீர நடனம் புரியும் விநாயகருக்கு தனி சந்நிதி உள்ளது. கோயில் வாசல்களைக் கடந்து உட்பிராகாரத்திறகுச் செல்லும் வழியில் இவரை தரிசிக்கலாம். கலை உலகிலே ஒரு அற்புத சிருஷ்டி இந்த விககிரகம். நான்கடி உயரத்தில் பிரபையும் சேர்தது ஒரே கல்லல அமைக்கப்பட்ட உருவம். வேதாரண்யத் திலும நர்த்தன கணபதியை தரிசிக்கலாம்.

குழந்தைகள் நர்த்தனமாடுவது எல்லாரையுமே கவரும். இம்மாதிரி நர்த்தன விநாயகர்கள் பல. இதில் தாராசுரம் கோவிலிலிருநத நிருத்த கணபதி தஞ்சை கலைககூடத்தில் இடம் பெற்றுள்ளது. தஞசை பெரிய கோயிலில் மகாமணடபததில் அதிசயமான விநாயகர் காணப்படுகிறார். பிள்ளையார் நர்ததன மாடுவது போலத தோன்றுகிறார். ஆனால் ஒரு கை 'கீழே பார்' என்று காட்டுவதுபோல் இருககிறது. இம்மாதிரி உருவம வேறு எங்குமே இல்லை. தூக்கிய கால் மூஷிகத்தின்மீது இருக்கிறது. மிக முக்கியமான சகதிகள் 'இதோ இங்கே தான் இருக்கிறது' என்று காட்டுவதுபோல இருககிறது.

தஞ்சை பெரிய கோவிலில் ஒரு பின்னமடைந்த பெரிய விநாயர் பிராகாரத்தில் இருக்கிறார். இவரை கல்லினால் தட்டினால் இனிய ஒலி எழும்புகிறது.

டபீர் கணேசர்

தஞ்சை மன்னனுக்கு அமைச்சராக இருந்த ராமச்சந்திர டபீருககு விநாயகரிடம் மிக்க ஈடுபாடு (இவர் பெயரில் கும்பகோணத்தில் ஒரு தெருவும் உள்ளது. தஞ்சை கருந் தட்டாங்குடி (கரந்தை) செல்லும் மார்க்கத்தில் ஒரு சோலையின் நடுவே இவர் கணபதிக்கு ஆலயம் அமைத்தார். இக்கணபதிக்கு ஹேரம்ப விநாயகர் எனறு பெயர். டபீர் கணேசர் என்றால்தான எல்லோருக்கும் தெரியும்.

மலைமேல் பிள்ளையார்

மலைமேல் பிள்ளையார் கோவில் தமிழ்நாட்டில் இரு இடங்களில் உள்ளன. ஒன்று திருச்சி உச்சிப்பிள்ளையார். உறையூருக்கருகில் சோழன் பாறை என்ற குன்றின் மீது பிள்ளையாா கோயில் கொண்டிருக்கிறார். இவருக்கு முக்தி விநாயகர் என்று பெயர்.

வேர் விநாயகர்

புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள கார்த்தக் குறிச்சி என்ற இடத்தில் விநாயகர் ஆலயம் அரசமர வேர்களாலேயே அமைந் துள்ளது.

புதுவை நகருக்கு அருகாமையில் மஞ்சளி நாயக்கன் குப்பத்தில் அரசமரத்தில் விநாயகர் உருவம் தோன்றியுள்ளது. அதே மாதிரி சென்னை மவுண்ட் ரோடு ராஜாஜி ஹால் தோட்டத்தில் ஒரு அரச மரத்தில் விநாயகர் உருவம் உண்டாகி வழிபடப்பட்டு வருகிறது.

துர்வாச கணபதி

தஞ்சை மாவட்டம் திருக்கோடிக்காவலில் துர்வாச கணபதி கோயில் கொண்டிருக்கிறார். துர்வாச மகரிஷியின் தியானத்தைக் கலைத்ததற்குப் பிராயச்சித்தமாக திரிகோடி மந்திரங்களில் தேவதைகளைப் பிரதிஷ்டை செய்த கணபதி இவர். மிகச் சிறிய உருவம்.

கதிராமங்கலத்திற்கருகில் குண தலைப்பாடி என்ற கிராமத்தில் பிரதிஷ்டை செய்த பிள்ளையார் இருக்கிறார். என்ன காரணத்தினாலோ வெல்லப் பிள்ளையார் என்றழைக்கிறார்கள்.

தமிழ் மக்கள் அனைவருக்கும் விநாயகரிடம் ஈடுபாடு உண்டு. இவ்வீடுபாடு நகரத்தார்களிடம் சிறப்பாகக் காணப்படுகிறது. 'பிள்ளையார் பட்டி' என்ற கோயிற் பிரிவு (கோத்திரப்பிரிவு) பல நூற்றாண்டுகளுக்கு முன் நகரத்தார்க்குள் இருப்பதாலும் 'மரகத விநாயகர்' இருந்ததாக வரலாற்றுச் செய்திகள் கூறுவதாலும் இது தெரிய வருகிறது.

நகரத்தார்கள் கட்டியுள்ள விநாயகர் கோவில்களின் எண்ணிக்கை ஓராயிரத்துக்கும் மேற்பட்டது.

மணக்குள விநாயகர்

கவி பாரதியார் புதுச்சேரியில் வசித்தபோது வழிபட்டு வந்த விநாயகரின் பெயர் மணக்குள விநாயகர். இந்த விநாயகர் மிகப் பிரசித்தி பெற்றவர். இவருக்கு வெள்ளைக்காரத் தெருப் பிள்ளையார் என்றும் பெயர்.

வெள்ளையர் வசிக்கும் பகுதியில் இக்கோயில் இருந்ததால் இப்பெயர் வந்தது. புதுச்சேரியில் பதினெட்டாம் நூற்றாண்டில் கவர்னராக இருந்த ஒரு பிரெஞ்சு துரை இந்த விநாயகரைக் கொண்டு போய் கடலில் போட்டு விடும்படி உத்திரவிட்டாராம். அந்த ஊர்மக்கள் கனவில் தோன்றி தான் இருக்குமிடத்தை உணர்த்தினாராம். அவர்கள் அந்த இடத்தில் தேடும்போது கடல் மணல் குளம்போல மேடிட்டு இருந்ததாம். இதனால் இவருக்கு மணக்குள விநாயகர் என்ற பெயர் ஏற்பட்டது. இக்கோயில் அரவிந்தரின் ஆசிரமத்திற்கருகிலுள்ளது.

பாரதியார் இவ்விநாயகர் மீது விநாயகர் நான்மணிமாலையை இயற்றியிருக்கிறார்.

வலம்சுழி வெள்ளை விநாயகர்

சுவாமிமலைக்கருகிலுள்ள திருவலஞ்சுழியின் மிக முக்கிய மான மூர்த்தி விநாயகர்தான். உருவம் மிகச் சிறியது. வெள்ளை நிறம், கையினால் தொடப்படாதவர். பச்சை கற்பூரத்தால்தான் இவருக்கு அபிஷேகம். பாற்கடல் கடையுமுன் வழிபடப்பட்ட மூர்த்தி என்று புராணம் கூறுகிறது. உற்சவமூர்த்திக்கு பக்கத்தில் வாணி, கமலா என்று இரு தேவிமார்கள் இருக்கின்றனர். துதிக்கை வலமாக சுருண்டிருப்பதினாலேயே வலம்சுழி என்று இத்தலத்திற்குப் பெயர் ஏற்பட்டுள்ளது.

அரசடி கற்பகம்

திருவல்லிக்கேணி பெரிய தெருவில் உள்ள அரசடி கற்பக விநாயகர் மிகவும் சக்திவாய்ந்த சன்னிதி. இவர் ஒரு ஔவை போன்ற பாட்டிக்கு தான் இருக்கும் இடத்தை உணர்த்தி அவரால் வழிபட்டு வந்தவர். இவர் புகழ் சென்னை நகரத்திற்கு வெளியேயும் பரவியுள்ளது.

வங்காளத்திலும், ஒரிஸாவிலும் நிற்கும் பாணியில் கணபதி காணப்படுகிறார். இரண்டே கைகள் உள்ள அத்தகைய கணபதி அங்குசத்தை 'வாக்கிங் ஸ்டிக்' மாதிரி வைத்துக்கொண்டு மிக ஒயிலாக நிற்கும் உருவம் (வெண்கலம்) திருவானைக்கா கோவிலில் உள்ளது. கும்பகோணம் நாகேஸ்வரர் ஆலயத்தில் இத்தகைய பாணி கணபதியை கல் உருவத்தில் காணலாம்.

பள்ளத்துப் பிள்ளையார்

பெங்களூரில் இவர் மிகவும் பிரசித்தி பெற்றவர். கப்பன் பார்க் அருகில் விஸ்வேஸ்வரய்யா மியூசியம் எதிரிலுள்ள இந்த பிள்ளையார் பள்ளத்தில் அமர்ந்திருக்கிறார். பெங்களூரில் யார் எந்தப் புதிய வாகனம் வாங்கினாலும் முதலில் இங்கு வந்து பூஜை செய்துவிட்டுத்தான் அதை உபயோகிக்க அரம்பிக்கிறார்கள். சின்னஞ்சிறு கோயில், ஒரு சமயத்தில் நான்கு பேர்களே இருந்து தரிசிக்கலாம். விடியற்காலை 4 மணியிலிருந்து இவரைத் தரிசிக்க கியூவில் பக்தர்கள் நிற்கிறார்கள்.

மைசூர் மாநிலத்தில் பல முக்கியமான கணபதி சந்நிதிகள் இருக்கின்றன. தலக்காடு என்ற இடத்தில் சக்தி கணபதியும், பாணவாசி என்ற இடத்தில் அர்த்தாங்க கணபதியும், கோகர்ணத்தில் பால கணபதியும், ஹம்பியில் கால கணபதியும், கூலூரில் (தும்கூர்) பிருகத் கணபதியும், குடமாலே என்ற இடத்தில் மகா கணபதியும் கோயில் கொண்டுள்ளனர்.

பெண் ரூபமாக கணபதியை (கணேசனி)க் காண வேண்டுமானால் சுசீந்திரம் தாணுமாலயன் கோயிலுக்குச்செல்ல வேண்டும். கணேசனியின் உருவச்சிலை இந்தியாவில் வேறு எங்கும் கிடையாது, மதுரை சுந்தரேஸ்வரர் சந்நிதிக்குப் போகும்போது வலது பக்கத்

தூணில் கணேசனி உருவம் இருக்கிறது. ஆனால் புலிக்கால். சுசீந்திரம் கோயிலில் சண்பகராயன் மண்டபத்தில் காணப்படும் கணேசனி சுகாஸன பாவத்தில் இருப்பதுபோல சிற்பி உருவாக்கி யிருக்கிறான். ஸ்தனங்களைக் கொண்டே இது கணேசனி என்று தெரிந்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. பெருந் தொந்தி இல்லாமல் துடி இடையாளாக கணேசனி காணப்படுகிறாள். வடிவீஸ்வரம் ஆலயத்திலும் புலிக்கால் கணேசனியைக் காண லாம். வீணை வாசிப்பது போன்ற நிலையில் இக்கணேசனி காணப் படுகிறாள்.

விளையாடும் விநாயகர்

விநாயகரைத் தவழும் கிருஷ்ணனைப்போல எண்ணிப்பார்த்த சிற்பி பால கணபதியையும் சிருஷ்டித்திருக்கிறான். தும்பிக்கையில் கொழுக்கட்டையுடன் தவழும் கணபதி பின்னால் என்ன நடக்கிறது என்று திரும்பிப் பார்க்கும் தோரணையில் ஒரு சிற்பம் வேலூர் ஜலகண்டேசுவரர் கோவிலில் காணப்படுகிறது. சிதம்பரம் ஆயிரக்கால் மண்டபத்தில் இரு கைகளுடன் வெண்ணைப் பாத்திரத்தை வைத்துக்கொண்டு தவழும் பால கணபதியின் உருவச்சிலை இருக்கிறது.

நாகலாபுரம் வேதநாராயணர் கோயிலுள் பிரவேசித்ததும் ஒருபுறம் கணேசரும் மற்றொருபுறம் துர்க்கையும் காணப்படு கிறார்கள். நாமம் தரித்து தும்பிக்கை ஆழ்வாராகக் கணபதி நின்ற கோலத்தில் காட்சி தருகிறார்.

பாண தீர்த்தம் அருகில் கணபதி சித்தி புத்தி சகிதம் மரத்தடியில் இருக்கிறார். பழநியாண்டவர் போல் இவருக்கு விபூதி அபிஷேகம் செய்யப்படுகிறது. மதுரை பொற்றாமரைக் குளக்கரையிலும் விபூதி விநாயகர் இருக்கிறார்.

தேன் உறிஞ்சும் விநாயகர்

கும்பகோணம் சுவாமிமலை ரஸ்தாவில் புளியஞ்சேரியிலிருந்து மூன்று மைலிலுள்ளது திருப்புறம்பயம். பிரளயகாலத்தில் இந்த இடத்தில் தண்ணீர் சூழ்ந்ததே யொழிய இந்த இடத்தை மூழ்கடிக்கவில்லை. இவ்வூர் விநாயகருக்கு பிரளயம் காத்த விநாயகர் என்று பெயர். இவ்விநாயகருக்கு விநாயக சதுர்த்தி யன்று மட்டுமே தேனால் அபிஷேகம் செய்யப்படும். தேன் மேல் பட்டதும் அது ஊறிஞ்சி விடப்படுகிறது, வெளியில் வருவதில்லை.

வெயில் உகந்த கணேசர்

ராமநாதபுரம் சமீபம் உப்பூர் என்று ஒரு கிராமம் இருக்கிறது. இது தேவகோட்டை ஜமீனைச் சேர்ந்தது. இந்த ஊரில் உள்ள விநாயகப்பெருமானை 'வெயில் உகந்த விநாயகர்' என்பார்கள். அவருக்கு வெயிலில் காய்வது மிக இஷ்டம். ஆலயத்தின் கர்ப்ப கிருகத்தின்மீது மேல் மூட்டம் இல்லை. கட்டிடம் கட்டியபோது மேல் தளத்தைக்கட்டி ஓட்ட முயல

முயல அது இடிந்து விழுந்துக்கொண்டே இருந்ததாம். பின் தர்மகர்த்தா கனவிலே விநாயகர் தோன்றி கர்ப்பக் கிருகத்தை மூடவேண்டாம், திறந்திருப்பதே தமக்கு விருப்பம் என்றாராம்.

பழவங்காடி கணபதி

திருவனந்தபுரத்தில் ஊரின் மத்தியில் 6-பாதைகள் கூடும் இடத்தில் பழவங்காடி கணபதிக்கு சந்நிதி உள்ளது. இவர் மிகவும் சக்தி வாய்ந்தவர் என்பதால் பிற மதத்தினரும் இவரை வழிபடுகிறார்கள். இந்தியாவிலேயே ராணுவத்தினர் நிர்வாகத்தை நடத்தும் ஒரே ஒரு ஆலயம் இதுதான்.

மகாராஜா மார்த்தாண்டவர்மன் இக்கோயிலைக் கட்டி அதன் நிர்வாகத்தைத் தன் சேனைத் தலைவரிடம் ஒப்படைத்தார்.

இக்கோயிலுக்கு வருபவர்கள் வெறுங்கையுடன் வராமலிருப்பதற்காக தேங்காய் கொண்டுவருகின்றனர். இந்த உடைபடும் சூரைத் தேங்காய்களை சேகரிக்கும் உரிமை மட்டும் ஏலம் விடப்படுவதில் ஆண்டுக்கு ரூ. 25000-க்குக் குறையாமல் கிடைக்கிறதாம்.

வீணை ஏந்திய விநாயகரின் திருவுருவத்தை பவானி கோவிலில் அம்பிகை சந்நிதியின் மேல் தளத்தில் காணலாம்.

ஸ்ரீ சைலத்தில் விநாயகர் கண்ணனைப்போல் புல்லாங்குழல் வாசிக்கிறார்.

உச்சிஷ்ட கணபதி மூர்த்தம் நஞ்சன்கூடு நஞ்சுண்டேஸ்வரர் கோவிலில் உள்ளது. இந்த உருவம் மந்திர மகார்ணவம் என்ற நூலில் சொல்லிய விதிப்படி சிற்பி வடித்திருக்கிறான். திருநள்ளாற்றில் ஒரு சாளக்கிராமத்தையே கணபதியாக வழிபட்டு வருகிறார்கள்.

திரியம்பகத்தில் கௌபீனதாரியாக கணபதி இருக்கிறார். இவர் மூல விக்கிரகம் 6 அடி இறங்கி பள்ளத்தில் இருக்கிறது. இக்கருவறைக்குள் பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இவரைப் பற்றியதுதான் மிருத்யஞ்சய ஸ்தோத்திரம்.

சேண்பாக்கம் சுயம்பு விநாயகர்

வேலூருக்கு மேற்கில் இரு கிலோ மீட்டரிலுள்ள சேண்பாக்கத்தில் லிங்கமே விநாயகராகப் பூஜிக்கப்படுகிறது. இங்கு அந்த லிங்கத்தைச் சுற்றி 10 விநாயகர்கள் அமைக்கப்பட்டிருக்கிறார்கள். துக்காஜிராவ் என்ற மன்னன் ஸ்தாபித்த ஆலயம் இது. கோயில் முன்பு பிரும்ம தீர்த்தம் என்ற குளம் உள்ளது.

சித்திபுத்தி விநாயகர்கள்

மயிலையில் வள்ளீஸ்வரர் கோவில் முக்கிய ஸ்தானம் பெற்றிருப்பவர் சித்திபுத்தி விநாயகர்தான். அவருக்கடியிலேயே பிரும்மச்சாரி விநாயகர் ஒருவரும் இருக்கிறார். மற்றொரு சித்தி புத்தி விநாயகர் ராயப்பேட்டையில் இருக்கிறார். இவர் வரப் பிரசாதி.

12

கடல் கடந்த கணபதி

விநாயகர் வழிபாடு நம் நாட்டில் மட்டுமின்றி கடல் கடந்தும் பரவியிருக்கிறது. இந்தியர் நாகரிகம் வியாபித்துள்ள இடங்களிலெல்லாம் இவர் வழிபாட்டைக் காணலாம். இந்திய வியாபாரிகள் முக்கியமாகத் தமிழர்கள் அக்காலத்தில் கடல் கடந்து வியாபாரம் செய்தனர். கடல் கொள்ளைக்காரர்கள், புயல் போன்ற ஆபத்துக்களிலிருந்து தப்ப பிள்ளையார் தம்முடன் துணையாக இருக்கட்டும் என்று அவர் உருவத்தை உடன் எடுத்தும் சென்றனர். இப்படி தமிழ் நாடு வர்த்தகர்களுடன் பல நாடுகள் சென்ற கணபதி அந்தந்த நாடுகளில் குடியேறிவிட்டார்.

திரு. சமன்லால் எழுதியுள்ள ''இந்து அமெரிக்கா'' என்ற நூலில் மெக்ஸிகோ பெரு முதலிய நாடுகளிலும் மிகப் பழங்காலத்திலிருந்தே விநாயகர் வழிபாடு பரவியுள்ளதென்று பல சான்றுகளுடன் குறிப்பிடுகிறார்.

சர் மோனியர் வில்லியம்ஸ் என்னும் அறிஞர் ஜேனஸ் என்கிற ரோம் நாட்டு கடவுளுக்கும், இந்திய கணபதிக்குமிடையே தொடர்பும் ஒற்றுமையும் இருப்பதைக் குறிப்பிடுகிறார்.

நமது கூத்தாடும் விநாயகருக்கும் நடனமாடும் தயோனிகஸ் என்கிற அயோனிய கடவுளுக்கும் ஒற்றுமை காணப்படுகிறது.

விநாயகர் பௌத்தர்களாலும் வழிபடப்பட்டு வந்தவர். இவருக்கு அருகக் கடவுள் என்று அவர்கள் பெயரிட்டனர். பௌத்த மதம் பல நாடுகளுக்குப் பரவியபோது கணபதி வழிபாடும் வெளி நாடுகளில் பரவியிருக்கலாம். மகாயன புத்த மதத்தில் விநாயகர் ஒரு முக்கிய தெய்வமாக விளங்குகிறார். விநாயக தந்திரத்தைப் பிரபலப்படுத்திய பெருமை புத்த மதத்தையே சேரும். தென் கிழக்கு ஆசிய நாடுகளில் இவர் வழிபாடு பரவியதற்கு புத்த மதமும் ஒரு முக்கிய காரணம் எனலாம்.

கி.மு. மூன்றுவது நூற்றுண்டில் அசோக சக்கிரவர்த்தியின் மகள் விநாயகர் வழிபாட்டை நேப்பாளத்தில் பரவச் செய்ததாக சரித்திரம் கூறுகிறது. இலங்கையில் மிகிந்தலே என்ற இடத்தில் உள்ள அசோகர் ஸ்தூபியில் விநாயகர் உருவம் செதுக்கப் பட்டுள்ளது.

நேபாளத்திலும், திபேத்திலும் காணப்படும் கணபதி உருவங்கள் நடனம் செய்யும் நிலையில் காணப்படுகின்றன. நேபாளத்தில் இவரை ''ட்ஸாகஸ் ப்டாக்'' என்று அழைக்கிறார்கள். நேபாளத்தில் ஒரே கோவிலில் ஐந்து கணபதிகள் காணப்படுகின்றனர். பஞ்ச கணேசர் கோயில் எனப்படும் இந்த ஆலயம் மிகப் பிரசித்தம். திபேத்திலுள்ள கோவில்களில் துவாரபாலகர் நிற்கும் இடங்களில் கணபதி உருவம் காணப்படுகிறது.

கி.பி. 414-ம் ஆண்டிலேயே ஜாவாத்தீவிலும், பாலித் தீவிலும் விநாயகர் வழிபாடு இருந்து வந்ததாக பௌத்த மதத்தைச் சேர்ந்த சீன யாத்ரிகர் பாஹியான் தன் பிரயாணக் குறிப்பில் எழுதியிருக்கிறார். பின் காலத்திய பௌத்த பிக்ஷுக்கள் விநாயகனை இரகசியமாக வழிபட்டு வந்தனர் எனக் கூறப்படுகிறது.

